Registered as Newspaper



# உதயன்






பக்கங்கள் – 40 | விலை – 40 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

திர் :54 | தை 5ஆம் நாள் | ஞாயிற்றுக்கிழமை | 19 ஜனவரி 2020 | வள்ளுவர் ஆண்டு 2050

# புதுடில்லியின் முற்றுகைக்குள் கொழும்பு அரசு

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கோத்தாவுடன் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஜனவரி 19

இந்தி யாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவை கொழும்பில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். பூகோள ஒருங்கிணைப்பு மையத்தை நிறுவுவது தொடர்பில் இந்தச் சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

37 ➤



இராணுவத்துக்கு எதிராக மனு:

# முகாமுக்குள் வைத்து இளைஞர் விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 19

ப.தெ. வ.கூ சங்கத்துக்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் எனக் கோரிய இளைஞனின் வீடு தேடிச் சென்ற இராணுவத்தினர், அவரை இராணுவ முகாமுக்கு விசாரணைக்கு வருமாறு அழைத்துள்ளனர். இதனால் அந்தப் பகுதி இளைஞர்களிடத்தில் அச்ச

37 ➤

## அக்காவின்ர கதை

ஏற்கனவே யானை நாட்டில நொண்டிக் கொண்டிருக்கு பாருங்கோ. உந்த லட்சணத்தில் இஞ்ச யானையில ஏறினா கட்டாயம் கவிண்டுதான் விழவேண்டி இருக்கும் எண்டு எம்.பி அக்காவுக்கு நல்லாவே தெரியும். போனமுறையே அரும்பொட்டில

37 ➤

## பருத்தித்துறையில் 2 வீடுகளில் களவு

பருத்தித்துறை, ஜன. 19

பருத்தித்துறைப் பிர தேசத்தில் நேற்றுமுன்தினம் இரண்டு வீடுகளில் நகை மற்றும் பணம்

35 ➤

## 'கை முறிப்பு' பொலிஸ் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 19

பொலிஸ் நிலைய தடுப்புக் காவலில் வைத்து சந்தேக நபர்களின் கைகளை அடித்து முறித்ததாக குற்றம் சுமத்தப்பட்ட ஊர்

37 ➤

## ராணுவத்தால் மற்றுமொருவர் நேற்றுக் கைது

குடத்தனை, ஜன. 19

நாகர்கோவில் பகுதியில் இராணுவத்தினருக்கும், அந்தப் பகுதி இளைஞர்களுக்கும்

35 ➤

## 3 பேரை காணவில்லை

35 ➤

கோத்தாபய நினைத்தால்

## அரசியல் கைதிகளுக்கு ஓர் இரவுக்குள் விடிவு

அநுராதபுரம், ஜன. 19

தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு அரசமைப்புக்கு அமைவாக வழங்கப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதி கோத்தாபய நினைத்தால் ஓர் இரவுக்குள் முடிவு எடுக்க முடியும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றுச்

37 ➤

## சி.ஐ.டி. எனக் கூறி வீட்டில் கொள்ளை

பருத்தித்துறை, ஜன. 19

பருத்தித்துறை புலோலியில் அமைந்துள்ள ஓய்வுபெற்ற அதிபர் வீட்டில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 10 பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணம் கொள்ளையி

35 ➤

## கூட்டமைப்புத் தலைமை மாறினால் இணையலாம்



விக்னேஸ்வரன் அறிவிப்பு

37 ➤







# மாகாணப் பொங்கல் விழா வரணியில் களைகட்டியது





சாவகச்சேரி, ஜன. 19

பதினொரு வகையான பொங்கலுடன், வடக்கு மாகாண பொங்கல் விழா நேற்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்திலும், வரணி கலாசார மத்திய நிலையத்திலும் நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலர் அ.பத்திநாதனும், மதிப்புறு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபுவும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தென்மராட்சி பிரதேச செயலகத்துடன் இணைந்து இவ் விழாவை ஏற்பாடு செய்திருந்தது. வடக்கு மாகாணத்தில் இதுவரையான பொங்கல் விழாக்களில் முதன் முறையாக பதினொரு பானை வைத்து பதினொருவகையான பொங்கல் பொங்கி வழிபட்டமை இவ் விழாவின் சிறப்பம்சமாகும்.

வரணி கலாசார மத்திய நிலையத்தின் வரவேற்பு நடனம், கிளிநொச்சி ஜானு அரங்காற்றுகையகத்தின் அரிவி வெட்டு நடனம், மறவன்புலவு நித்தர் குல அம்மன் கலைக்குழுவின் உடுக்கிசை, கைதடி மத்தி குமர நகர் சனசமூக நிலையத்தின் கும்மி நடனம், சாவகச்சேரி ஜோன்சன் நடனக் கல்லூரியின் கோலாட்டம், கொடிகாமம் மந்துவில் கிழக்கு திருமதித கலைச்செல்வியின் கரகம், மற்றும், அரிவி வெட்டும் பாடல் போன்ற நிகழ்ச்சிகள், சிறப்பாக அமைந்திருந்தன.

பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், பெரும்பாலும் சம்பிரதாயங்களாக மட்டுமே மாறிவரும் எம் பாரம்பரிய கொண்டாட்டங்களும் கலைநிகழ்வுகளுக்கும் மத்தியில் இவ் விழாவில் அரங்கேறிய கலைநிகழ்வுகள் மனதுக்கு மகிழ்வையும் நிறைவையும் தருவதாகக் குறிப்பிட்டார்.

இன்றைய இளைய தலைமுறையின் உணர்வறிந்து தேவையறிந்து பெற்றோர்களும் ஆசிரியர்களும் மற்றும் பெரியவர்களும் பொறுப்புடனும் கண்டிப்புடனும் நடந்துகொள்ள வேண்டிய அவசியத்தை நினைவுபடுத்தினார். பிள்ளைகள் இளைஞர்கள் தொடர்பில் விழிப்புடனும் அவதானத்துடனும் இருந்து, முளையிலேயே தவறுகளை திருத்தி நல்வழிப்படுத்த பெற்றோர்களும் பெரியவர்களும் முயற்சி எடுக்க வேண்டிய அவசியத்தை, ஆளுநர் தனதுரையில் வலியுறுத்தினார்.

இந்த மாகாணத்தில் எல்லாவற்றையும் மேம்படுத்தி, மக்களை நிம்மதியாகவும், சுபீட்சமாகவும் வாழ வைக்க, தான் எடுக்கும் பணிகளுக்கு ஒத்துழைப்பு தருமாறும், இதை, இந்தப் பொங்கல் விழாவின் செய்தியாக, தான் மக்களுக்கு குறிப்பிட விரும்புவதாகவும் தனதுரையில் தெரிவித்தார்.

(ஒ.5,9,159)

# தமிழினம் விடுதலை பெறட்டும்!

## உழவர் திருவிழாவில் மாவை எம்.பி. சூளுரை

யாழ்ப்பாணம், ஜன. 19

அடிமைத் தனங்களிலிருந்து தமிழினம் விடுதலை பெற வேண்டும். அதற்காக எமது இனத்துவ அடையாளங்களையும், எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

தமிழர் மரபுவழி உழவர் திருவிழாவும் பட்டிப் பொங்கல் நிகழ்வும் சாவகச்சேரி நகர மத்தியில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தெரிவித்ததாவது:


தமிழ் மக்களின் இனத்துவ அடையாளங்களையும், அவற்றை வெளிப்படுத்தும் பண்புகளான கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் பேணவும் பாதுகாக்கவும் வேண்டிய தொரு கட்டாய தேவை தற்போது எழுந்துள்ளது. தமிழர் தாயகத்தில் இம்முறை மிகத் தீவிரமாக உணர்வுபூர்வமாக உழவர் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் இனத்துவ அடையாளங்களையும், அவற்றை வெளிப்படுத்தும் பண்புகளையும் நாம் பேணிப் பாதுகாக்காவிட்டால் எமது நாகரிகத்தை இழந்து விடுவோம். இறுதியில் எமது இனம், மொழி அழிந்தே போய்விடும். எமது இனத்தையும், மொழியையும் பாதுகாத்து அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெறவே நாம் தொடர்ந்து போராடி வருகின்றோம் - என்றார்.

(ஒ.5,22)

# உழவர் திருவிழாவும் பட்டிப் பொங்கலும்





சாவகச்சேரி, ஜன. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், தமிழர் மரபுவழி உழவர் திருவிழாவும் பட்டிப் பொங்கல் விழாவும் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகர மத்தியில் இடம்பெற்றது.

சங்கத்தானை முருகன் ஆலய முன்றலிருந்து விருந்தினர்கள் சகிதம் மாட்டுவண்டி மற்றும் இசை வாத்தியங்களுடன் நடைபவனி ஆரம்பமாகியது. சாவகச்சேரி மத்திய பேருந்து நிலையத்தை சென்றடைந்தது. அங்கு உழவர் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது.

சாவகச்சேரி மத்திய பேருந்து நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கோபூஜை, மங்கல இசை, பொங்கல், நடன நிகழ்ச்சிகள், கவியரங்கம் மற்றும் இன்னிசை கச்சேரி ஆகியன இடம்பெற்றன. மாட்டுவண்டிச் சவாரியை தலைமுறை தலைமுறையாக நடத்தி வருகின்ற வீரர்களுக்கு, நிழற்படம் பொறித்த நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா, சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன், த.சித்தார்த்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ஒ.5,9,20,131,159)

## செயற்பட்டு மகிழ்வோம்

# கட்டைவேலி மெ.மி.த.க: தேசியரீதியில் தங்கம்

கொடிகாமம் ஜன 19

தேசிய ரீதியாக நேற்று நாவலப்பிட்டி ஜயத்திலக்க மைதானத்தில் நடைபெற்ற 'செயற்பட்டு மகிழ்வோம் 'நிகழ்வில் கட்டைவேலி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் தரம்3 கலப்பு அணி முதலாம் இடத்தை பெற்று தங்கத்தை தனதாக்கிக் கொண்டது .

"வரலாற்றில் முதற் தடவையாக 'செயற்பட்டு மகிழ்வோம்'நிகழ்வில் 72 பாடசாலைகளுடன் போட்டியிட்டும் எமது பாடசாலை அணியினர் தங்கப் பதக்கம் வென்று பாடசாலைக்கும், வடமராட்சி மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்" என்று பாடசாலை அதிபர் பா.யசிதரன் தெரிவித்துள்ளார். (அ-159)




# 326 லட்சம் கிலோ பிளாஸ்டிக் மீட்பு

கொழும்பு, ஜன.19

இலங்கையின் கரையோரங்களில் கடந்த ஆண்டு 326 இலட்சம் கிலோ கிராம் பிளாஸ்டிக்குகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 99 சதவீத மானவை கடலில் இருந்து கரையொதுங்கியவை என்றும் இலங்கை கடல் வள பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

கடந்த வருடம் 98 கி.மீ கடல் மைகளில் 36 ஆயிரம் கிலோ பொலித்தீன்கள் மீட்கப்பட்டுள்ளன. ஒரு லட்சத்து 6 ஆயிரம் பிளாஸ்டிக் போத்தல்களும், 31 ஆயிரம் சிலிபைகளும், 15 ஆயிரம் பிளாஸ்டிக் கேபிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கணிப்பீடுகளின்படி இலங்கையின் கடற்கரையோரங்களில் ஒவ்வொரு கிழமையும் ஆறு இலட்சம் பிளாஸ்டிக் சேகரிக்கப்படுகின்றன. கடற்கரையோகரங்களில் சேமிக்கப்படும் தரவுகள் மாத்திரமே இவை என்றும் கடல்வள பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்தது.

(எ-24)

### டெங்கு பரவக் கூடிய சூழல்:

# 49 பேருக்கு தண்டம் ரூ. இரண்டரை லட்சம்

ஏழாலை, ஜன. 19

**டெங்குநுளம்பு பரவுவதற்குரிய சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டில் உடுவில், தெல்லிப்பழை, சங்கானை ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுக்கு உட்பட்ட 49 பேருக்கு 2 லட்சத்து 43 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.**

மல்லாகம்நீதிமன்றத்தில் இந்தவழக்குகள் அண்மையில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட டெங்கு நுளம்பு பெருகக்கூடியவாறான இடங்களைக் கொண்டிருந்த இணுவில், புன்னாலைக்கட்டுவன் ஏழாலை மற்றும் உடுவிலைச் சேர்ந்த 26 பொது மக்களுக்கு உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொதுசுகாதார பரிசோதகர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குக்கு சமூகமளித்திருந்த 19 பேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 95 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது. மற்றைய எழுவருக்கும் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டது.

தெல்லிப்பழை, சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் டெங்கு நுளம்பு பெருகக் கூடியவாறான இடங்களைக் கொண்டிருந்த 50 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர்களில் 30 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

இவர்களில் மாற்றுத் திறனாளி ஒருவருக்கும் மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. அவர் சார்பில் மன்றில் சட்டத்தரணி முன்னிலையாகினார்.

மாற்றுத் திறனாளியின் குடும்பத்தினருக்கு பல தடவைகள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவரது குடியிருப்புக்கு அண்மையில் 90 பேர் வரையில் டெங்குத் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர் என்ற தகவலும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையால் முன் வைக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்களை வைத்திருந்து அவற்றை உரிய வகையில் துப்புரவு செய்யாத எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்குமாறும், இவ்வாறு அசமந்தப்போக்குடன் இருப்பவர்கள் தொடர்பில் தெரியப்படுத்தினால் பொலிஸாரின் உதவியைப் பெற்றுத் தருவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு நீதிவான் தெரிவித்தார்.

மாற்றுத் திறனாளிக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மாற்று ஆற்றல் உடையவர்கள் பொது அமைப்புக்களின் உதவியைப் பெற்று டெங்கு பரவாத சூழலை வைத்திருப்பது சமூகப் பொறுப்பு வாய்ந்தது என்றும் நீதிவான் குறிப்பிட்டார். (ஓ.5.39)

## குளிரூட்டிகளால் இப்படியொரு சிக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 19

தெல்லிப்பழை மருத்துவமனையின் பெண் நோயியல் பிரிவுக்கு பொருத்தப்பட்ட குளிரூட்டிகளுக்குரிய தவணைக் கொடுப்பனவு செலுத்தப்படவில்லை என்றும் அவற்றை மீள ஒப்படைக்குமாறும் லீசிங் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளதால் புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தினால் அவற்றை மீள ஒப்படைக்கத் தேவையில்லை. இல்லையென்றால் குளிரூட்டிகள் மீள வழங்கப்பட வேண்டும் என்று லீசிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது நிர்வாக ரீதியிலான கொள்வனவுகள் அல்ல. இருப்பினும் மருத்துவமனை வளாகத்தில் பொருத்தினால் அவை அரச சொத்தாகவே கருதப்படும்.

அதனை அகற்றுவதற்குரிய உரிய முறைமைகள் பின்பற்றப்பட வேண்டும், என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5.105)

### மாவட்டச் செயலர்கள்

## 2பேரின் இடமாற்றங்கள் உடனடியாக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 19

இலங்கையிலுள்ள மாவட்டச் செயலர்கள் 10பேரை இடமாற்றுவதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் இருவரின் இடமாற்றங்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில்நிறுத்தப்பட்டுள்ளன.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டச் செயலர்கள் 10பேரை இடமாற்றும் வரைவு கடந்த 9ஆம் திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டு 10 பேரினதும் இடமாற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவர்களில் இருவரின் இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கிளிநொச்சி மாவட்டத்துக்கும், கேகாலை மாவட்டச் செயலர் பண்டார புத்தளம் மாவட்டத்துக்கும், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலர் அசங்க அபயவர்த்தனா திருகோணமலை மாவட்டச் செயலகத்துக்கும், கிழக்கு மாகாண பேரவைச் செயலர் திருமதி கலாவதி பத்மராயா மட்டக்களப்பு மாவட்டத்துக்கும், சப்பிரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலர் மகிந்த கேகாலை மாவட்டத்துக்கும், வட மத்திய மாகாண சுகாதார அமைச்சின் செயலர் பந்துலசேன வவுனியா மாவட்டத்துக்கும், தென் மாகாண கல்வி அமைச்சின் செயலர் விக்கிரமசிறி மொனராகலை மாவட்டத்துக்கும், மேல் மாகாண பிரதம செயலர் யசரட்ண கொழும்பு மாவட்டத்துக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு மேற்கொள்ளப்பட்ட இடமாற்றம் நிறுத்தப்பட்டுள்ளது. (ஓ.5.105)

## விசம பேச்சுக்களை நிறுத்துங்கள்

### சி.வி.கே. எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழ் மக்கள் தொடர்பிலும், தமிழ் மக்களின் தலைவர்கள் தொடர்பிலும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் விசமத்தனமான கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள். அதனை உடனடியாக நிறுத்தவேண்டும். இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்தானந்த அளுத்கமகே அண்மையில் தமிழ் மக்களுக்குச் சோறுதான் முக்கியம் எனத் தெரிவித்துள்ளார். அவருடைய இந்தக் கருத்து ஒட்டுமொத்த தமிழினத்தையும் அவமானப்படுத்தும் கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தக் கருத்துக்குத் தமிழ் மக்கள் சார்பில் எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழினம் பல ஆண்டுகளாகப் போராடியது இதற்காக அல்ல. போராட்ட காலத்தில் வடக்கு கிழக்கில் பொருளாதாரத் தடைகளை விதித்த போது கூட எமது மக்கள் அந்தத் தடைகளையும் தாண்டி வாழ்ந்தார்கள்.

தமிழ் மக்கள் சோறுக்கும் தண்ணிக்கும் தான் முக்கியத்துவம் கொடுக்கின்றனர் எனக் கூறுவார் ஆயின் அந்தக் கருத்தை தமிழ் மக்களைச் சந்தித்துக் கூறியதாக இருக்காது. தமிழ் மக்களைச் சந்திப்பதற்கு பதிலாக யாரோ யாசகரைச் சந்தித்து விட்டுத்தான் காரணங்களைத் தெரிவிக்கிறார். தமிழ் மக்கள் சோற்றுக்கும் தண்ணீக்கும் தான் முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என்ற கருத்துக்களை இனித் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த விமல் வீரவன்ச, சம்பந்தன் கடந்த ஆட்சியில் வீட்டையும் வாகனத்தையும் பெற்றுக் கொண்டதைத் தவிரத் தமிழ் மக்களுக்காக எதையும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்துச் சென்றிருக்கின்றார்.

விமல் வீரவன்ச முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த ஆட்சியில் புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சியின் போது ஒக்ரோபர் சதிப்புரட்சி மூலம் அரசியல் தீர்வை தடுத்து நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முட்டுக் கட்டையாக இருந்தது நீங்களும் உங்கள் மஹிந்த தரப்புக்களும் தான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது இரண்டு வருடங்களுக்கு மேலாக அவருக்கான உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்தது. காலப்போக்கில் அவருக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட்டது. அது நிரந்தரமான வீடு அல்ல. அது அவருடைய பெயரில் எழுதிக் கொடுக்கப்படவில்லை. இது பரிசு அல்ல. வழமையாக வழங்கும் உத்தியோகபூர்வ இல்லமே. கடந்த காலங்களிலிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களில் இரா.சம்பந்தன் பல விடயங்களைச் சிக்கனமாகவே இருந்தார். சம்பந்தன் தற்போது பாவித்துக் கொண்டிருக்கும் உத்தியோகபூர்வ இல்லத்தை அடுத்த தேர்தலுக்கு முன்னர் நிச்சயமாக விடுவிப்பார். அவர் உரிமை கோரப் போவதில்லை. அது சாதாரண உத்தியோகபூர்வ இல்லம். பொய்யான பரப்புரைகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அவர் ஒன்றும் வீடு அல்லாதவர் அல்ல. எனவே இவ்வாறான விசமத்தனமான பரப்புரைகளை மஹிந்த தரப்பு நிறுத்திக் கொள்ள வேண்டும், என்றார். (ஓ.5)

## அநாதரவாக நிற்கும் மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், ஜன. 19

கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் அநாதரவாக மோட்டார் சைக்கிள் கடந்த இரு நாள்களாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸார் அதனை வந்து பார்வையிட்டுச் சென்றனர். அது மீட்கப்படவில்லை. (ஓ.5.105)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அப்பாடா இனிமேல் விடுதலை

"கொடிது கொடிது பஸ் பயணங்கள் கொடிது அதனினும் கொடிது சிங்கள 'பைலா' பாட்டு பஸ்ஸில் பயணித்தல்"

இன்றைக்கு ஔவையார் இருந்திருந்தால், உலகின் கொடுமையான விடயங்களைப் பாடும் போது இப்படித்தான் சொல்லியிருப்பார். அந்தளவுக்கு இலங்கையில் தூர இடங்களுக்கான தனியார் பஸ் பயணங்களை நினைத்தாலே உதறல் எடுக்குமளவுக்கு, அந்த பஸ்களில் போடப்படும் சிங்கள பைலாப்பாடல்கள் பயணிகளுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்தன. அதிலும் யாழ் –கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் தான் இந்த 'பைலா' பாடல்களைப் போடுவதில் பேர் போனவை.

சாதாரணமான சிங்கள 'பைலா' பாடல்களைப் போட்டால் கூட ஓரளவு சகித்துக் கொண்டு அந்தப் பயணத்தைக் கடந்துவிட முடியும். ஆனால் இந்த பஸ்களில் மட்டும் தேடிப்பிடித்து, ஒரு ரகமான 'பைலா' பாடல்களைப் போடுவார்கள். எங்கேனும் நடந்த இசைக்குழு ஒன்றின் காணொலித் தொகுப்பை , போடத்தொடங்கினால், அன்றைய பயணம் அதோகதிதான். 'கறள்பிடித்த தகரத்தில் முள்ளுக்கம்பியால் கீறல் விழுந்த மாதிரி' என்ன சுருதி என்றே கண்டுபிடிக்கக் கஷ்டப்படும் தொனியில் கிட்டத்தட்ட ஒப்பாரிப் பாணியில் பாடல்களைப் பாடத்தொடங்குவார்கள். கேட்கும் போதே, தலைவலி தானாகவே வந்து, 'எப்போது இந்தக் கருமத்தை நிறுத்துவார்கள்' என்று நடத்துநரைக் கண்களால் தேடும் போது, தப்பித்தவறி அந்த இசைநிகழ்வின் காணொலியைக் கண்டுவிட்டால், அவ்வளவுதான். பேய், பிசாசு போல எப்படியும் நாலைந்து பேராவது தலைமுடியை வளர்த்து, ஆளுக்கொரு ஸ்டைலில் வெருட்டிக் கொண்டிருப்பார்கள். அந்த இசைக்குழுவில் இருப்பவர்கள் பாடுகிறார்களோ இல்லையோ, இப்படி விநோத உடைப் போட்டியை மட்டும் 'தலைமுடியை' மையமாகக் கொண்டு செய்வதையே தலையாய காரியமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இதைவிட மிகப்பெரிய தலைவலி என்னவென்றால், அந்தச் சிங்கள 'பைலாக்குழு' தமிழ்ப் பாடல்களை பாடத்தொடங்கும் தருணம் தான். ஒரு ரசனைக்குரிய பாடலை எந்தளவு தூரம் வெறுக்க வைக்க முடியுமோ அந்தளவுக்கு தமிழ்ப்பாடல்களை இந்தக் குழுக்கள் 'வைச்சுச் செய்வதில்' கில்லாடிகள். பிறிதொரு பொழுதில் அந்த 'ஒரிஜினல்' தமிழ்ப்பாடலைக் கேட்கும் போது கூட, இந்தச் சிங்களக் குழுவிடம் சின்னா பின்னப்பட்ட பாடலின் வடிவமே நினைவுக்கு வந்து, தலைதெறிக்க ஓடவைக்கும். இப்படியான சிங்கள 'பைலா' பாடல்களை , பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களின் பஸ்களில் தான் ஒலிபரப்புவார்கள் என்ற எண்ணத்தில் இந்தத் துன்பத்தில் இருந்து விடுபட, தமிழ்ச் சாரதிகள், நடத்துநர்கள் இருக்கும் பஸ்களில் பயணித்தால் சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்த நிலைதான். சிங்கள பஸ்களுக்குச் சற்றும் சளைக்காமல் அதைவிட உச்சஸ்தாயியில் ஒலிபரப்புவதில் ஒன்றும் இவர்களும் குறைந்தவர்களில்லை.

இப்படிப்பட்ட பெரும் தலையிடியில் இருந்து இப்போது விடுதலை கிடைத்திருக்கிறது. தனியார் பஸ்களில் பயணிகளை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் அதிக சத்தத்துடன் பாடல்கள் மற்றும் காணொளிகளை ஒலி, ஒளிபரப்புவது, ஜனவரி 15 ஆம் திகதி முதல் தடை செய்யப்பட்டுள்ளது.அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டால் அது குறித்து 1955 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன், அனைத்து பஸ்களிலும் ஒலிபரப்புவதற்கு ஏற்ற வகையில் 1000 பாடல்கள் அடங்கிய தொகுப்புகளும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தொகுப்பில் உள்ள பாடல்களையே இனி பஸ்களில் ஒலிபரப்பப்பட வேண்டும் எனவும் போக்குவரத்து அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இந்த அரசு செய்த உருப்படியான ஒரு வேலை இதுவாகத்தான் இருக்க முடியும் என்பது பயணிகளின் இப்போதைய ஆசுவாசம்.

அப்பாடா, இனிமேல் பஸ் பயணங்களில் காதுகளுக்கு ஆபத்திருக்கப் போவதில்லை.



# அதிகாரங்கள் கொண்ட நாடாளுமன்றே இலக்கு

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.19**

**அதிகாரம் உள்ள நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதே எமது நோக்கம் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.**



மன்னாருக்கு நேற்றுக் காலை சென்ற அமைச்சர், மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்திற்கு சென்று பார்வையிட்டதோடு அங்குள்ள பிரச்சினைகள், குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வட மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளைக் கண்காணித்து அவற்றை அபிவிருத்தி செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே எனது அமைச்சின் நோக்கம்.

அதன் அடிப்படையில் மன்னாரில் உள்ள மாந்தை உப்பு உற்பத்தி நிலையத்தின் உப்பு உற்பத்தியானது நாட்டின் சந்தைக்கும், பாவனையாளர்களுக்கான உப்பினை உற்பத்தி செய்கின்றது.

இந்த உப்பு உற்பத்தி நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டுக்குத் தேவையான வளங்களை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதுடன் வெளிநாட்டிடம் எதிர்பார்க்காமல் இருப்பதே எமது நோக்கம். இந்தப் பயணம் ஒரு கண்காணிப்புப் பயணமாகவே அமைந்துள்ளது. நான் தொழிற்சாலைகள் அமைச்சரே தவிர வர்த்தக அமைச்சர் இல்லை.

தற்போதைய நாடாளுமன்றம் காலாவதியாகிவிட்டது. அதனால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. மார்ச் மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படுகின்றது. கலைக்கப்பட்ட பின்னர் இடம் பெறுகின்ற தேர்தலில் நாம் வெற்றி பெறுவோம். பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்த திட்டமிட்டுள்ளோம் - என்றார். (எ)




# ரஞ்சனுடன் உரையாடிய நீதிபதிகளுக்கு சிக்கல்!

கொழும்பு, ஜன.19

நீதித்துறையில் தலையீடுகளை மேற்கொள்ளும் வகையில் வெளியாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவால் பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும் ஒலிப்பதிவுகள் மூலம் வழக்குகளின் தீர்ப்புகள் மாற்றியமைக்கப்பட்டிருப்பின் அந்த நீதிபதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் நாள்களில் ஒலிப்பதிவுகளுடன் தொடர்புப்பட்டுள்ள நீதிபதிகள் இருவரை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு அழைத்து விசாரணைகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதியரசர் என். பத்மினி மற்றும் சிறைச்சாலைகள் நீதிமன்ற பிரதான நீதிவான் தம்மிக்க ஹேமபால ஆகியோரே இவ்வாறு விசாரணைகளுக்காக குற்றத்தடுப்பு பிரிவுக்கு அழைக்கப்படவுள்ளனர். இவர்களிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பிலான அறிக்கை சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் சட்ட மாஅதிபரின் ஆலோசனையின் பிரகாரம் பொலிஸார் செயற்படுவர்.

ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவுகள் தொடர்பில் தற்போது அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் பகுப்பாய்வுகளை நடத்திவருகிறது. இந்த பகுப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் ரஞ்சன் ராமநாயக்க நீதிபதிகளுடன் தொடர்பை பேணியுள்ளாரா என அறிய முடியும். அதன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-24)

## சமூகச் சீரழிவிலிருந்து ஊரைக் காப்பாற்றுங்கள்

### மக்கள் நேற்றுப் போராட்டம்

கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கிராம மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று மேற்கொண்டிருந்தனர்.

தங்களது கிராமத்தில் இடம்பெற்று வருகின்ற சமூகச் சீரழிவு செயற்பாடுகளால் கிராமத்தின் கௌரவம் பாதிக்கப்படுவதோடு, இளையோரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர். சட்டத்தை பாதுகாக்க வேண்டியவர்கள் இந்த விடயத்தில் அசமந்த போக்குடன் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டினர்.

கிராமத்தில் இடம்பெற்று வருகின்ற சமூகச் சீரழிவு காரணமாக ஊரில் பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பதிலிருந்து, காணிகளை விற்பனை செய்வது வரை பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

'இருப்பவர்கள் இருந்திருந்தால் இப்படி நடக்குமா?', 'ஒழுக்கமுள்ள கிராமத்தை சீரழிப்பவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுங்கள்', 'எங்கள் ஊரை எங்களுக்குத் திருப்பித் தாருங்கள்' போன்ற வாசங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர். (ஒ.5,52)



## 359 கிலோ வலைகளுடன் 2பேர் சந்தேகத்தில் கைது

யாழ்ப்பாணம், ஜன. 19

இலங்கையில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளை விற்பனைக்கு வைத்திருந்ததாகத் தெரிவித்து இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 359 கிலோ மீன்பிடி வலைகளும் மீட்கப்பட்டுள்ளன. சிறப்பு அதிரடிப் படையினரே இந்த நடவடிக்கையை நேற்று மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் இரண்டில் தங்கூசி வலைகள் விற்பனை செய்யப்படுவதாக சிறப்பு அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இரண்டு வர்த்தக நிலையங்களையும் நேற்று முற்றுகையிட்டு அவர்கள் சோதனை நடத்தினர். ஒரு வர்த்தக நிலையத்திலிருந்து 30 கிலோ வலையும் மற்றைய வர்த்தக நிலையத்திலிருந்து 329 கிலோ வலையும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி 12 லட்சம் ரூபா என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். அவற்றை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர்கள் இருவரையும் கைது செய்தனர்.

கடற்றொழில்நீரியல்வளத்திணைக்களத்தினரிடம் வலைகளும், வர்த்தகர்களும் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ.5,111)





பொருளாதார ரீதியில் நலிவடைந்த குடும்பங்களைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்டறக்ட் கழகத்தால் கற்றல் உபகரணங்கள் யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ)

# தேசியப் பட்டியலை தடுக்க புதிய சட்டம்

கொழும்பு, ஜன.19

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடையும் வேட்பாளர்களுக்கு தேசியப் பட்டியல் மூலம் வாய்ப்புகளை வழங்குவதை தடுக்கும் புதிய சட்டமொன்றை பவ்ரல் அமைப்புத் தயாரித்துள்ளது. இந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்காக விரைவில் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் அரசியல் கலாசாரம் சீரழிவதற்கு தேசியப் பட்டியல் மூலம் தோல்வியடைந்த வேட்பாளர்கள் உள்வாங்கப்படுவது முக்கிய காரணமாகவுள்ளது. இந்த விடயத்துக்கு எதிராக கடந்த காலத்தில் பொது மக்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இந்த விடயம் பேசுபொருளாகவிருந்தது. தேசியப் பட்டியல் மூலம் தோல்வியடைந்த வேட்பாளர்களை உள்வாங்கும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் புதிய சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, அதிகமான பணம் தேர்தல்களில் அள்ளி வீசப்படுவதால் சில நேர்மையான வேட்பாளர்களும் தோல்வியடைகின்றனர். அவ்வாறானவர்களுக்கு சில வாய்ப்புகள் இருக்க வேண்டும்.

உருவாக்கப்பட்டுள்ள புதிய சட்டத்தின் பிரகாரம் 20 சதவீதம் அல்லது இரண்டு தேசியப் பட்டியல்களே தேர்தலில் தோல்வியடையும் வேட்பாளர்களுக்கு வழங்க முடியும். 40 சதவீதம் பொது பட்டியல் அடிப்படையிலும் ஏனைய 40 சதவீதத்திற்கு புத்திஜீவிகளும் நியமிக்கப்பட வேண்டும்.

சட்டத்தை தயாரிக்கும் பணிகள் அனைத்து நிறைவடைந்துள்ளன. விரைவில் இந்த உத்தேச சட்ட வரைவை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மேற்படிச் சட்டத்தை நிறைவேற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்- என்றார். (எ-24)

# அடையாளங்களை கூற இன்னும் அச்சம்

### கூட்டமைப்பு எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன. 19

எமது இனத்தின் வரலாற்று அடையாளங்களை வெளிக்கொணர்வதில் எமது மக்கள் தொடர்ந்தும் அச்சத்திலேயே உள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.



பூநகரி பல்லவராயன்கட்டு ஸ்ரீமுருகன் விளையாட்டு கழகத் தைத்திருநாள் நிகழ்வுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றன. அதில் முதன்மை விருந்தினர் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய இனத்தினரான நாங்கள் இந்த பூமிப் பந்திலே மிகப் பெரும் வரலாற்று அடையாளங்களைக் கொண்டவர்கள். ஸ்ரீமுருகன் விளையாட்டு கழக மைதானம் எவ்வாறு யாருடைய பெயரால் உருவாக்கப்பட்டது என்பதை மக்கள் கூறுவதற்கு அச்சம் கொள்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி முதல் லெப் கேணல் மன்னார் மாவட்ட தளபதி விக்டரின் பெயரால் உருவாக்கப்பட்டதே இது.

இவற்றை எல்லாம் வெளியே சொல்ல முடியாதவர்களாகவே தொடர்ந்தும் இருக்கிறோம். தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு பயணிப்பதனூடாகவே எமது இலட்சியத்தை அடைய ம்டியும். இந்தத் தைத்திருநாளில் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க உறுதிபூணவேண்டும் என்றும் தெரிவித்தார்.

நிகழ்வில் பூநகரி பிரதேச சபை உறுப்பினர்களான ஜெயக்காந்தன், கேதீஸ்வரன், கமநல அபிவிருத்தி அலுவலர், முழங்காவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பல்லவராயன் கிராமத்தில் பிறந்து கல்வி பயின்றவர்களான சட்டத்தரணி பெ. சிவசாந்தி, பொறியியலாளர் துளசிகன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (த-6)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதன்படி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து ஏற்றப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை பழைய பூங்கா வீதியில், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை புதிய வீடமைப்புத் திட்ட வீதியில், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தொடர்மாடி குடியிருப்புப் பகுதியிலும் நடைபெறவுள்ளன. எனவே ஒவ்வொருவரும் தங்களது வளர்ப்பு நாய்களுகளுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிமக்கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மீண்டும் வருகிறது கொங்கிரீட் வீடுகள்

## வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா, ஜன. 19

பதுளை மாவட்டத்தில் அமையப் பெற்றுள்ள கொங்கிரீட் வீடுகளைப் போன்று வடக்கு மாகாணத்திலும் வீடுகள் அமைப்பது தொடர்பில் நேற்று ஆராயப்பட்டுள்ளது. முன்னைய ஆட்சிக் காலத்திலும் இதேபோன்றதொரு யோசனை முன்வைக்கப்பட்டபோதும், அதற்குப் பதிலாக கல் வீடுகளே வேண்டும் என்று கோரப்பட்டது. அதற்கு அமைவாக கல் வீடுகளே வடக்குக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கில் கொங்கிரீட் வீடுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சின் பணிப்பாளர் பிரேமசந்திரன் தலைமையில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுச் சிறப்புக் கலந்துரையாடல் இடம்பெற்றது. மன்னார் மாவட்டச் செயலர் மோகன் ராஸ், வவுனியா மாவட்ட மேலதிக செயலர் திரேஸ்குமார், பிரதேச செயலர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடந்த அரசின் காலத்தில் பொருத்து வீடுகளுக்குப்பதிலாக கொங்கிரீட் வீடுகள் அமைப்பதற்கான யோசனை முன்வைக் கப்பட்டது. பதுளையில் அமைக்கப்பட்ட மாதிரி வீட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டிருந்தனர். வடக்கின் சூழலுக்கு அது பொருத்தமற்றதாக அமையும் என்று கூறப்பட்டிருந்தது. இதன் பின்னர் கல் வீடுகள் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்தன.

கிழக்கு மாகாணத்தில் 7 ஆயிரம் கொங்கிரீட் வீடுகள் அமைக்க முன்னைய அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. தற்போதைய அமைச்சரவையினாலும் அது அனுமதிக்கப்பட்டு அந்தத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கிலும் இத்தகைய வீடுகள் அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் வேண்டுகோள்விடுத்துள்ளார். இதற்கு அமைவாக நேற்றைய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. வன்னி மாவட்டத்தில் இத்தகைய வீடுகளை அமைப்பது தொடர்பில் தொடர் ஆய்வுகளை நடத்த நேற்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,110)

LITTLE MASTERS' MONTESOORI
DAY CARE CENTRE
அதி நவீன கணினி மயமாக்கப்பட்ட ஆங்கில தமிழ்மொழி மூலமான பாலர் பாடசாலையும் குழந்தைகள் பராமரிப்பு நிலையமும்
English-Medium & Tamil Medium
யாழ் மக்களுக்கு முதல் முறையாக அதி நவீன வசதிகளுடன் முன்பள்ளியும் இணைந்த நிலையில் பிள்ளைகளின் பராமரிப்பு சேவைகள்
Time:: 6.30 am - 5.00pm
1 1/2 வயது முதல் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.
பாலர் பாடசாலையின் வயது பிரிவுகள்
PLAYGROUP 2+ (2வயது)
MONTESOORI3+ (3வயது)
PRESCHOOL 4+ (4வயது)

எதிர்வரும் 08.02.2020 தைப்பூசம் அன்று ஆரம்பிக்கப்படுகின்றது.
அரச, தனியார் உத்தியோகத்தர்களே! தொழில் அதிபர்களே! உங்கள் பிள்ளைகளை தாய்ப் பாசத்திற்கு நிகராக பராமரித்து அறிவுடன் ஆளுமையையும் ஊட்டி ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் தரம்-1ற்கு தேர்ச்சியுள்ளவர்களாக மாற்றித்தருகின்றோம் நாம்.

மிகக் குறைந்த அனுமதிக்கட்டணம், மாதாந்தக்கட்டணம் விரைந்து உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மேலும் எமது முன்பள்ளிச் செயற்பாடுகளைப் பார்வையிட
Lmm Preschool எனும் Face book முகவரியை நாடுங்கள்.
முகவரி :
Little Masters' Montesoori & Day Care Center
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.
(இந்துக் கல்லூரிக்கு முன்பாக)
T.P: 077 747 4741
எமது கிளைகள்
• கே.கே.எஸ்.றோட், இணுவில்
• கே.கே.எஸ்.றோட், மல்லாகம்.
• கே.கே.எஸ்.றோட், தெல்லிப்பளை.
• கீரிமலை றோட், சண்டிலிப்பாய்.
• தெல்லிப்பளை றோட், பண்டத்தரிப்பு.
• தெல்லிப்பளை றோட், சித்தங்கேணி.
• பருத்தித்துறை றோட், புத்தூர்.

## மரண அறிவித்தல்

### கிட்டிணர் ஆனந்தம்

(ஓய்வுநிலை எழுதுநர், மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை)



செல்வபுரம் கரணவாயைப் பிறப்பிடமாகவும் தர்மகுலசிங்கம் ச.ச.நிலையம் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணர் ஆனந்தம் (ஓய்வுநிலை எழுதுநர் - மாவட்ட வைத்திய சாலை, வல்வெட்டித்துறை) நேற்று (18.01.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணர்-தெய்வானை தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான கோபால் - தங்கம் தம்பதிகளின் மருமகனும் திருமதி கமலலோஜினியின் (தேவி), பாசமிகு கணவரும் கமலாதேவி - இரத்தினம், பூமாதேவி-தேவராசா, யோகாதேவி சோமசுந்தரம், மல்லிகாதேவி மாசிலாமணி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கோ. துரைசிங்கம், திருமதி நவமணி மார்க்கண்டு, தங்கராணி யோகசுவாமி, கோ.மாசிலாமணி, கோ.தவராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெள்ளாங்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தர்மகுலசிங்கம் ச.ச நிலையம்,
வல்வெட்டி

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### அமரர் திருமதி குலமணி இலங்கராஜா

தோற்றம்: 10.04.1924 மறைவு: 18.01.2020

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலமணி இலங்கராஜா அவர்கள் சனிக்கிழமை (18.01.2020) அன்று கொழும்பில் காலமானார். அன்னார் சிவசம்பு, அன்னம் தம்பதியரின் மூத்த புதல்வியும், அமரர் சி.கே. இலங்கராஜா (ஓவசியர்) அவர்களின் மனைவியும், ராஜினி, நிரஞ்சினி, ரவிராஜ், ஜெயராஜ், அமரர் தர்சினி ஆகியோரது தாயாரும், சிவானந்தன், சந்திரசிவம், மேனகா, குமாரதாசன் ஆகியோரது மாமியாரும், மயூரன், ரேணுகா, கௌரிசங்கர், சுரேன், சுரேஷ், சாம்ப்வி, பிரசன்னா ஆகியோரது பாட்டியும், அர்ஜூன், சந்தோஷ், ஷோபியா, அமலா,அம்புஜா ஆகியோரது பூட்டியும், அமரர் சபாரட்ணம், அமரர் தனபாலசிங்கம், அமரர் குணரட்ணம், நவரட்ணம், ராஜரட்ணம், செல்வரட்ணம், அமரர் நல்லம்மா, கண்மணி, அமரர் நேசமணி ஆகியோரது சகோதரியுமாவார்.

அன்னாரது பூதவுடல் 20.01.2020 திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பிற்பகல் 1.00 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

தகவல்: இ. ஜெயராஜ் (கம்பன் கழகம்)
இல. 12, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு 06.




## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் Medical Faculty இற்கு அருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 4 Attached Bathroom உடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு

**076 243 0394**

## மணமகன் தேவை

30 வயதுடைய பெண்ணிற்கு படித்த கிறிஸ்தவ மதத்தினை சேர்ந்த உத்தியோகமுள்ள மணமகன் தேவை.

**078 992 6800**

## பணியாளர் தேவை

வீட்டில் தங்கி நின்று வீட்டுவேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

**077 930 7774**

## காணி வீடு விற்பனைக்கு

கரந்தன் வைரவர் கோயில் வீதியில் 3 பரப்புக்காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

**077 959 6774**

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியராக கடமைபுரியும் பெண்ணுக்கு (யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த) தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 340 5951**
Email - engchelvam@gmail.com

## வீடு வாடகைக்கு தேவை

**5 பேர்களை** கொண்ட குடும்பம் ஒன்றுக்கு **கோண்டாவில், கோப்பாய், நீர்வேலிப்** பகுதிகளில் வீடு வாடகைக்குத்தேவை.

**077 649 0650**

## மணமகள் தேவை

திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்ட கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த (R.C) அரச உத்தியோகம் புரியும் 33 வயதுடைய அழகிய மணமகனுக்கு படித்த அழகிய பண்பான குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.
குறிப்பு : குலம் எதிர்பார்க்கப்படவில்லை

**077 617 4145**

## வீடு வாடகைக்குண்டு

**யாழ்நகரப் பகுதியில்** வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய **வீட்டின் மேல் மாடி** மட்டும் உடனடியாக வாடகைக்குண்டு. அரசாங்க உத்தியோகத்தர், குடும்பமாக பிள்ளைகளுடன் எதிர்பார்க்கின்றோம்.

**076 198 9593, 077 618 9686**

## வேலையாள் தேவை

**Kaithady** யில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு வேலையாள் தேவை. (கைதடி, நாவற்குழி, நுணாவில், சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்தவர் விரும்பத்தக்கது.

மேலதிக விவரங்களுக்கு:
**K.S.Ponnampalam and son Kaithady 021 223 1580/ 81**



# நிறுவுநர் தினமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம் வயாவிளான் மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய உதவி கல்வி பணிப்பாளர் க. சந்திரலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். நினைவு பேருரையை மடு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் மு. ஜெகதாசன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் "வயவன் 18" என்ற மலர் வெளியீடும் இடம்பெற்றது. மலரின் மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்தினார்.

(ஐ)



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில்
25
.
02
.
1963



விண்ணில்
30
.
12
.
2019

அமரர் திருமதி

### கலாநிதி ஜெயராமநாதன் (கலா)

**சங்கத்தானை, சாவகச்சேரி**

கடந்த (30.12.2019) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் திருமதி கலாநிதி ஜெயராமநாதன் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்

அதனைத்தொடர்ந்து இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவுச்செய்திகேட்டு நேரடியாகவும். தொலைபேசிமூலமாகவும் இணையத்தளங்கள் மூலமாகவும் மற்றும் பல்வேறு வழிகளாலும் அனுதாபங்களைத்தெரிவித்தோருக்கும் மலர்வளையம் வைத்தும் துண்டுப் பிரசுரம் மூலமாகவும் அஞ்சலி செலுத்தியோருக்கும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைத்து அன்புள்ளங் களுக்கும் மற்றும் சரீர உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"கீதகலாலயா"
இல.08 கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா நடராசா

**(Rtd work Superident)**



பிறப்பு 22.09.1931
இறப்பு 17.01.2020

மீசாலையைப்பிறப்பிடமாகவும் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நடராசா கடந்த (17.01.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னையா விசாலாட்சி தம்பதிகளின் மகனும் சங்கரப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, தெய்வானைப்பிள்ளை, மற்றும் மகாலிங்கம், ஆகியோரின் அன்புச் சகோதரனும் Dr. விஜிதா, (M.B.B.S. MRCS) கிருபாஜினி (கணக்காளர் - அவுஸ்திரேலியா), கிரிதரன் (ஆசிரியர் - ஒஸ்மானியாக் கல்லூரி) ஆகியோரின் தந்தையும் ஸ்ரீகுமரன் (பொறியியலாளர், அவுஸ்தி ரேலியா), பிரதா(அதிபர்- யா/ கோட்டைக்காடு அ.த.க பாடசாலை) ஆகி யோரின் மாமனாரும் பிரமோதயன், தாரிணி, வரோதயன், வதாங்கி, தருணிகா ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2020) திங்கட்கிழமை பி.ப 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆம் கட்டை, டச்சு வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
✹
...
✹
...
1926



இறப்பு
18
...
01
...
2020

### திருமதி அப்புத்துரை சின்னம்மா


தையிட்டியை பிறப்பிடமாகவும், ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை சின்னம்மா நேற்று **(18.01.2020)**சனிக்கிழமை சோதிவேம்படி, மானிப்பாய் இல்லத்தில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாப்பாணர் - இளையாச்சி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற அப்புத்துரை (ஏழாலை) அவர்களின் துணைவியும் திருமதிகள் மல்லிகாவதி, இந்திராணி, கமலராணி, யோகராணி, இதயவதி (மதி) ஆகியோரின் அருமைத் தாயாரும் நடராசா, யோகநாதன், சுந்தரலிங்கம் காலஞ்சென்ற சிறீபதி, இராஜேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr.சுபாசினி, ஜெயகாந்தன், சங்கீதா, தாட்சாயினி, தாரணி, காண்டீபன், சிறீயோகா, கவிதா, சுஜிதா, டயானா, கர்ஜனா, சர்மிலன், அகிலன், அரவிந்தன், நர்த்தனன், கஜினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று **(19.01.2020)**ஞாயிற்றுக்கிழமை மதியம் **12** மணிக்கு அவரது மகளது சோதிவேம்படி ஒழுங்கை, மானிப்பாய் இல்லத்தில் நிகழ்த்தப்பட்டு தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு **1.30** மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:-
077 316 4504, 077 248 7483

தகவல்:-
குடும்பத்தினர்.



### செல்லப்பா தம்பிப்பிள்ளை

சித்திரமேழி இளவாலையை பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தம்பிப்பிள்ளை கடந்த (17.01.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் . அருமைப்பிள்ளை, இராசமணி, மற்றும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி . சுப்ரமணியம், ரத்தினம், நமசிவாயம், ஆகியோரின் சகோதரனும் பன்னீர்செல்வம் (ஜேர்மன்), திருச்செல்வம் (ஸ்கொட்லாந்து), அருள் செல்வம், தயாச்செல்வம், கலைச்செல்வம் (கனடா), தாமரைச்செல்வன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தி (ஜேர்மன்), சியாமலி (ஸ்கொட்லாந்து), நந்தினி (ஆசிரியர் - யா/ இராமநாதன் கல்லூரி), அபிராமி, சுபா (கனடா), அஜந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜீபன், சஜீபன், சஜானி, நிவேதா, நிலக்ஷிகா, நிலாஜினி, கம்சிகா, சுதேஷிகா, சஜீக்கா, டினேஸ்காந், துமிலா, நிதுஜா, பிரணுஜா, சுகீன், கேசிகன், பிருத்திகன் ஆகியோரின் அன்பு பேரனும் அஜேஸ் இன் அன்பு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (20.01.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P 076 773 8864

தகவல்: குடும்பத்தினர்

சூரியகாந்தி
உதயன்
19.01.2020
ஞாயிறு சிறப்பம்சம்




# ஓர் இளவரசனின் வருகை...

உள்ளே...!



17


தற்கொலை தகுமா?


15


12

தமிழர் பண்பாட்டில் மறந்தவையும் நலிந்தவையும்

சந்திரசேகர ஆசாத்



நினைவில் வைத்துக் கொள் என்றோ ஒரு நாள் வெள்ளைக்காரன் இந்த நாட்டை விட்டுப் போவான். அவர்களின் பிள்ளைகளைப் போன்று இருபது முப்பதினாயிரம் கறுப்பு வெள்ளையர்களை உருவாக்கிவிட்டுத்தான் அவர்கள் வெளியேறுவார்கள். அதன் பிறகு இந்த நாட்டை ஆளப்போவது அந்தக் கறுப்பு வெள்ளையர்கள்தான். அவர்கள் சிங்கள மொழியையும் சிங்களப் பண்பாட்டையும் வெறுப்பார்கள். இனம், மதம், மொழி வேறுபாடுகள் தேவையில்லை என அவர்கள் போதிப்பார்கள். மரக்கல ஹப்பியாக்களும் தமிழர்களும் கொச்சிகளும் போறகான்களும் ஒன்றே எனக் கூறுவார்கள். இந்த நாடு அனைவருக்கும் சொந்தமானது என்பார்கள். விகாரைகளைச் சுற்றித் தேவாலயங்களை யும் இந்துக் கோவில்களையும் பள்ளிவாசல்களையும் கட்டுவார்கள். உங்கள் மீது ஆங்கிலத்திலேயே அதிகாரம் செலுத்துவார்கள். உங்களை விடுவிக்கும் ராஜகுமாரர்கள் வரும்வரை நீங்கள் காத்திருப்பீர்கள். பிறக்கவிருக்கும் உங்கள் ராஜகுமாரர்களையும் அந்தக் கறுப்பு வெள்ளையர்களால் கருவிலேயே அழித்து விட முடியும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அதன்பின் உங்கள் பிள்ளைகள் கொட்டையுள்ள வாழைப்பழத்தை விழுங்கிவிட்டு மலம் கழிக்க முடியாமல் முக்கிக்கொண்டிருக்கும் குரங்குகள் போல் ஆகவேண்டிவரும் இது சிங்கள பௌத்தர்களின் ஞானத்தந்தை எனப் போற்றப்படுபவரும் சிங்கள பௌத்த மறுமலர்ச்சியின் தந்தை எனவும் மதிக்கப்படுபவருமான அநகாரிக தர்மபால 1931ஆம் ஆண்டு தனது நாள்குறிப்பில் பதிவு செய்யப்பட்டதாக சிங்களய என்ற பத்திரிகையில் அவரால் வெளியிடப்பட்ட கருத்துக்களாகும்.





அநகாரிக தர்மபால 1921ஆம் ஆண்டில் சிங்கள புத்தகாயவில் ஆற்றிய உரையில் "ரிக்‌ஷா ஓட்டும் தமிழன் சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுக்கும் போது பத்திரிகையை உரத்த தொனியில் வாசிப்பான். ஏனையவர்கள் அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஆனால் இந்தச் சிங்களக் கொழுத்த மாடுகள் என்ன செய்கிறார்கள். சூது விளையாடிக் கொண்டும் பின்பக்கத்தைச் சொறிந்து கொண்டும் சாப்பிட்டது செமிக்க முன்பு குறட்டை விட்டு தூங்க ஆரம்பித்து விடுவார்கள்" என சிங்களவர்களை இன மதப்பற்றற்றவர்கள் என்ற வகையில் கண்டனம் செய்திருந்தார்.

அதுமட்டுமன்றி அவர் உரையாற்றும் இடங்களிலெல்லாம் "சிங்களயா மோடயா கெவும் கண்ட யோதையா" அதாவது சிங்களவன் முட்டாள், பணியாரம் தின்னும் இராட்சதன் எனப் படு மோசமான வார்த்தைகளால் திட்டியும் தமிழர்கள் முஸ்லிம்களின் முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டிப் பொறாமை ஏற்படுத்துவதிலும் அக்கறையுடன் தீவிரமாகச் செயற்பட்டார்.

அதாவது வெள்ளையர்கள் நாட்டை விட்டுவெளியேறிய பின்பு அவர்களின் அடிவருடிகளே நாட்டை ஆள்வார்கள் எனவும் அவர்கள் சகல இன மதங்களையும் சமமாக மதிப்பார்கள். முட்டாள் சிங்களவர்கள் உண்டு, குடித்து, சூதாடி உறங்கி அக்கறையற்றிருப்பார்கள் எனவும் அவர்களை மீட்க பிறக்கப் போகும் இளவரசர்களுக்காகக் காத்திருப்பார்கள் என்பதுமே அவரின் உரைகள் வெளிப்படுத்திய அடிப்படைக் கருத்துகளாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள மக்களின் ஞானத்தந்தையாகவும் சிங்கள பௌத்த மறுமலர்ச்சியின் முதல் முன்னோடியாகவும் சிங்கள மக்களைக் கட்டியெழுப்பிய ஒரு தேசிய வீரராகவும் சிங்கள, பௌத்த சமூகத்தால் போற்றப்படும் ஒரு துறவியின் வார்த்தைகளை எவரும் அலட்சியம் செய்து விட முடியாது.

**தர்மபாலவின் நீட்சியே தற்போதைய ஆட்சி!**

ஆனால் சிங்களவர்கள் முட்டாள்கள். பணியாரம் தின்னும் இராட்சதர்கள் எனவும் தர்மபாலவின் கருத்துக்கு விரோதமாக, சிங்களவர்கள் முட்டாள்கள் என்ற வார்த்தைகள் அண்மையில் இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவால் மறுதலிக்கப்பட்டுள்ளது. சிங்கள பௌத்த பேரெழுச்சியின் தந்தையான அநகாரிக தர்மபாலவின் வார்த்தைகளை சிங்கள பௌத்தத்தின் இன்றைய காலகட்டத்தின் வீரநாயகனாகிய மஹிந்த ராஜபக்‌ஷவால் மறுக்கப்பட்டது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஆனால் இருவரின் கருத்துக்களை ஆழமாக நோக்கினால் அவை இரண்டுமே ஒரே மூலத்திலிருந்தே பிறந்தன என்பதை உணரும்போது ஆச்சரியப்பட எதுவுமிருக்காது. பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ அண்மையில் கருத்து வெளியிடும்போது இந்த நாட்டில் சிங்களவர்கள் முட்டாள்கள் என்று கூறிய யுகம் கடந்த 16ஆம் திகதியுடன் முடிந்து விட்டது. சிங்கள பௌத்த மக்களே நாட்டிலுள்ள ஏனைய இனங்கள், மதங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்றனர். ஆட்சி மாற்றத்துக்கு பௌத்த சங்க சபையினர் தலைமையேற்றமையை நான் புதிதாகக் கூற வேண்டியதில்லை. பௌத்த சங்க சபையின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொறுப்பு உச்சகட்ட அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை மட்டும் நான் கூற வேண்டும். பௌத்த சாசனம், சிங்கள இனம், நாட்டின் ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாப்பது ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டது. சிங்கள பௌத்தர்கள் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே ஏனைய மக்களின் சுதந்திரம், நாட்டில் பாதுகாக்கப்படும் என்பது வரலாற்றில் கண்ட தெளிவான உண்மை எனத் தெரிவித்துள்ளார்.

**கோத்தாபய எனும் சிங்கள இளவரசன்**

கடந்த 16ஆம் திகதி முதல் அதாவது கோத்தாபய ராஜபக் ஷ ஜனாதிபதியாகத் தேர்தலில் வெற்றி பெற்றதுடன் சிங்களவர்கள் முட்டாள்கள் என அநகாரிக தர்மபாலவால் குறிப்பிடப்பட்ட யுகம் முடிவடைந்துவிட்டது எனவும் சிங்கள பௌத்தர்கள் ஏனைய இனங்கள் மதங்களினதும் மேய்ப்பர்களாக உணர்ந்துவிட்டனர் எனவும் பிரதமர் கூறியுள்ளார். அநகாரிக தர்மபால குறிப்பிட்ட சிங்கள பௌத்தர்களை விடுவிக்கும் ராஜகுமாரனாகக் கோத்தாபயவை பௌத்த தேரர்கள் தலைமையில் கருவிலேயே அழிக்க விடாமல் பாதுகாத்து அதிகாரத்துக்கு சிங்கள மக்கள் கொண்டுவந்து விட்டமையால் இனிச் சிங்களவர்களை எவருமே முட்டாள்கள் எனக்கூறும் யுகம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகவே அவரின் கூற்றை விளங்கிக் கொள்ள முடிகிறது.

அப்படியானால் பஞ்ச சக்திகளை மூலமாகக் கொண்டு ஒரு தேசிய எழுச்சியை ஏற்படுத்திய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, ஐந்தில் நான்கு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றி 1977ஆம் ஆண்டில் போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் எனப் பிரகடனம் செய்து தமிழ் மக்கள் மீது போரைத் தொடுத்துத் தமிழர்களைப் பேரழிவுக்குட்படுத்திய ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆகியோரை தர்மபால எதிர்பார்த்த இளவரசர்களில் ஒருவராக மஹிந்த ஏன் கணிக்கவில்லை என்ற கேள்வி எழலாம்.



அநகாரிக தர்மபால

அநகாரிக தர்மபால இலங்கை ஒரு தூய சிங்கள பௌத்த நாடு எனவும் சிங்கள பௌத்தர்கள் தவிர்ந்த அனைவரும் அந்நியர்கள் என்ற கொள்கையில் அவர் உறுதியாக இருந்தார். சிங்கள பௌத்த பண்பாட்டை அந்த அந்நியர்கள் சிதைப்பதாகவே பரப்புரை செய்தார். தமிழர்கள் மகாவம்சத்தின் படி நாட்டின் ஆக்கிரமிப்பாளர் என்பதும் முஸ்லிம் பொருளாதார பண்பாட்டு ஆக்கிரமிப்பாளர் என்பதும் அவரின் மாற்ற முடியாத கருத்தாகவும் அவர்களிலிருந்து நாடு விடுவிக்கப்பட வேண்டும் என்பதை இலட்சியமாகவும் கொண்டிருந்தார். எனவே தான் அவரின் இளவரசர்கள் தகுதிக்கு பண்டாரநாயக்காவினதோ ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினதோ இன ஒடுக்குமுறை நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை.

ஆனால் அநகாரிக தர்மபாலவின் இது ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற கருத்து மஹிந்த ராஜபக் ஷவால் தெளிவாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சிங்கள பௌத்த மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டாலே ஏனைய இனங்களின் சுதந்திரம், பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார். இன்னும் சொல்லப்போனால் சிங்கள பௌத்த மக்களே இந்த நாட்டின் பிரஜைகள் என்பதும் ஏனைய இனங்களை பாதுகாப்பது அவர்களின் பொறுப்பு எனவும் மஹிந்த தெரிவித்துள்ளமையை அவதானிக்க முடியும்.

அநகாரிக தர்மபாலவின் தூய பௌத்த சிங்கள நாடு என்ற இலட்சியத்தின் அடிப்படையில் தமிழர்கள், முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்பூட்டும் நச்சுப் பிரசாரமே மேலோங்கியிருந்தது.

ரிக்‌ஷா இழுக்கும் மூடையடிக்கும் கூலி வேலை செய்யும் தமிழர்கள் கூட கல்வி தொடர்பான மற்றும் உலக நடப்புகள் பற்றி கொண்டிருக்கும் அக்கறையை சுட்டிக்காட்டி அவர்கள் மேல் சிங்கள மக்களுக்குப் பொறாமையும் வெறுப்புகள் மூலம் இங்கு குடியேறிய அந்நியர்களே தமிழர்கள் என்ற பிரசாரமும் கட்டவிழ்த்து விடப்பட்டது. அதேவேளையில் நாட்டின் கரையோரப் பகுதிகளிலும் பிரதான நகரங்களின் வர்த்தகமும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமும், முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்தது. ஏற்கனவே தங்கள் மலையகப் பெரும் காணிகளை ஆங்கிலக் கம்பனிகளுக்குத் தோட்டங்களை அமைக்க வழங்கிய கண்டிய நிலவுடமையாளர்கள் கொழும்பின் வர்த்தக ஆதிக்கத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்சியில் முஸ்லிம்களுடன் போட்டியிட்டு வெற்றிபெற முடியவில்லை. இவ்வாறே கரையோர வர்த்தகத்தையும் சிங்களத் தரப்பினரால் கைப்பற்ற முடியவில்லை.

இப்படியான நிலையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் விரோதமாக வளர்த்தெடுக்கப்பட்ட எதிர்ப்புணர்வில் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மெல்ல மெல்ல முளைவிட ஆரம்பித்தன. அதுவே 1915ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கெதிரான பெரும் இனக் கலவரமாக வெடித்தது. இதில் ஏராளமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். ஏராளமான சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பெரும் வர்த்தக நிறுவனங்கள் கொள்ளையடிக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. ஆங்கில அரசால் கட்டுப்படுத்த முடியாத நிலையில் கண்டவுடன் சுடும் மார்சல் லோ பிரகடனப்படுத்தப்பட்டது. பல சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். சேர்.பொன்.இராமநாதன் அவர்களுக்காக வாதாடி அவர்களை விடுவித்தார். அநகாரிக தர்மபால இந்தியாவில் 5 வருடங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பின்பு விடுதலை செய்யப்பட்டார். (00ஆம் பக்கம் பார்க்க)







# இலங்கைக்கு ஜெனிவாவில் கடிவாளம் இடப்படுமா?





இந்துமதி

ஜெனிவாவில் இலங்கைக்குப் பாதகமான விடயங்கள் இடம்பெறவுள்ளன என எதிரணியின் முக்கியஸ்தர்களான சந்திரிகா அம்மையாரும் மங்கள சமரவீரவும் எச்சரித்துள்ள அதேவேளை இலங்கை அரசு எதற்குமே அஞ்சமாட்டாதென அரசின் முக்கியஸ்தரான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

**ஜெனீவாத் தீர்மானத்துக்கு எதிராக இலங்கை அசமந்தம்**

விமல் வீரவன்சவின் அறி விப்பானது இலங்கை அரசு இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானத்தை ஏற்கமாட்டாது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ஐ.நா மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் அங்கு நிறை வேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பாக அங்கத்துவ நாடுகள் ஆராயவுள்ள நிலையில் அரசின் நிலைப்பாடு ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஐ.நா மனித உரிமைகள் சபையில் கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டுவரை இலங்கை தொடர்பாக மூன்று தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் 2016ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையின் இணக்கத்துடன் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஆனால் இலங்கை அரசு தீர்மானத்தை மதித்து நடப்பதிலிருந்து முற்றாகவே தவறிவிட்டது. இதற்கு மாறாக ஒவ்வொரு கூட்டத்தொடரின் போதும் காலஅவகாசம் கேட்டுக் காலத்தைக் கடத்துவதிலேயே குறியாகச் செயற்பட்டது. போருக்குப் பின்னர் ஜனாதிபதிகளாகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் தற்போதைய ஜனாதிபதியான கோத்தாபயவும் படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதில் உறுதியாக இருந்தமையும், இருக்கின்றமையையும் மறுத்துவிடுவதற்கில்லை. தற்போது ஜனாதிபதி பதவியில் அமர்ந்துள்ள கோத்தாபய ஐ.நா தீர்மானத்திலிருந்து நழுவுவதற்கு முயற்சி செய்வதையும் அவதானிக்க முடிகின்றது.

**முழுப் பூசணிக்காயை...**

இறுதிப் போரின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் அங்கவீனர்களாகியுள்ளனர். விலை மதிப்பிட முடியாத சொத்துக்கள் நாசமாகின. போர்க் குற்றங்கள் ஒருபுறமிருக்க மனித உரிமை மீறல்களும் தாராளமாகவே இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட சம்பவங்களும் பரந்தளவில் இடம்பெற்றுள்ளன. இவற்றுக்கெல்லாம் மேலாக படையினரிடம் சரணடையச் சென்ற பலரின் நிலை தொடர்பாக எதையுமே அறிந்து கொள்ளமுடியவில்லை. அநேகமாக இவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்றே எண்ணவேண்டியுள்ளது. அது மட்டுமல்லாது ஐ.நா சாசனத்தைக் கருத்தில் கொண்டு வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு படையினரிடம் சரணடையச் சென்றவர்கள் கொடூரமான முறையில் படையினரால் கொல்லப்பட்டுவிட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. படையினரால் பாதுகாப்பு வலயமெனக் குறிக்கப்பட்ட இடங்களில் தங்கியிருந்த மக்கள் படையினர் ஏவிய எறிகணைகளாலும், விமானக் குண்டு வீச்சுக்களாலும் கொல்லப்பட்டுள்ளனர். இவை மிகப்பெரிய மனித உரிமை மீறல் சம்பவங்களாகும்.

படையினரின் போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் கருத்தில் கொண்டே ஐ.நா மனித உரிமைகள் சபையின் அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேசத்தின் பங்களிப்புடன் நீதியும், நியாயமுமான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொண்டு குற்றமிழைத்தவர்களுக்கு உரிய தண்டனைகளை வழங்க வேண்டுமென இறுதித் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தீர்மானத்தை வரவேற்றனர். பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு ஏற்பட்ட பாதிப்புக்களிலிருந்து மீளமுடியாது என்பதையும் நன்கு அறிந்துள்ளனர். ஆயினும் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டுமென்பதும் இதன் மூலமாகத் தமக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதும் இவர்களது எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது. ஆனால் இலங்கை அரசு இதற்கான வாய்ப்பை அளிப்பதற்குத் தயாராக இல்லை. படையினர் எந்த விதமான குற்றங்களிலும் ஈடுபடவில்லையெனத் தொடர்ந்து சாதித்து வருகின்றது.


**அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து விலகியதும் இலங்கைக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. ஏனென்றால் இலங்கைக்கு எதிரான ஐ.நா தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பதில் அந்த நாடு அக்கறையுடன் செயற்பட்டு வந்தது.**



**அமெரிக்கா விலகியமை இலங்கைக்கு வாய்ப்பே**

அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் சபையிலிருந்து விலகியதும் இலங்கைக்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. ஏனென்றால் இலங்கைக்கு எதிரான ஐ.நா தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பதில் அந்த நாடு அக்கறையுடன் செயற்பட்டு வந்தது. உலகின் வல்லரசு நாடு என்ற வகையில் ஐ.நாவில் அமெரிக்காவுக்கு எப்போதுமே ஒரு மதிப்பு உள்ளது. அதுமட்டுமல்லாது ஐ.நா சபைக்கு ஆண்டு தோறும் ஏற்படுகின்ற செலவில் பெரும் பகுதியை அமெரிக்காவே செலுத்தி வருகின்றது. ஐ.நா சபையின் தலைமைக் காரியாலயம் அமெரிக்காவில் அமைந்திருப்பதும் ஐ.நாவில் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரிப்பதற்கு ஒரு காரணமாகும். தற்போது அமெரிக்கா ஏற்படுத்திய வெற்றிடத்தை நிரப்ப வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு பிரிட்டனின் தலையில் வீழ்ந்துள்ளது. இதன் காரணமாகவே ஐ.நர மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்திலிருந்து இலங்கை அரசு விலகிவிடுமானால் இதற்கு எதிராக எவ்வாறான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பிரிட்டன் பிரதமரின் சிறப்புப் பிரதிநிதி கலந்துரையாடியமை முக்கியத்துவம் பெறுகின்றது. அது மட்டுமல்லாது ஐ.நா மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் இலங்கை விடயம் தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளன எனவும் அதில் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள்விடுத்தார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இம்முறை தனக்கு எதிரான தீர்மானத்தை இலங்கை தட்டிக் கழித்துவிட முடியாது என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே ஜெனிவாத் தொடர் இம்முறை இலங்கைக்கு உவப்பானதாக அமையப் போவதில்லை என்பது மட்டும் வெள்ளிடைமலை.

# தமிழர் பண்பாட்டில் மறந்தவையும் நலிந்தவையும்



செல்வநாதன் எழிலன்
3ஆம் வருட மாணவன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனிதனை மனிதத்துவம் உடையவனாக்க அவனாலேயே உருவாக்கப்பட்ட எண்ணிலடங்காத விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், நல்லொழுக்கலாறுகள், நடை, உடை, பாவனை என்ற ஏராளமான சமூக நடத்தைகளை ஒருங்கே கொண்டு அமைந்த ஓர் எண்ணக்கருவையே 'பண்பாடு' என வரையறை செய்யலாம். மனிதனுள் மனிதம் பேணுவதில் இன்றியமையாத இப் பண்பாடு, அவ்வவ் இனக் குழுமங்களிடையே வழக்கில் இருக்கும் மொழி, கலாசாரம் என்பவற்றை மூலாதாரமாக அடியொட்டியே கட்டியெழுப்பப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் சங்கம் அமைத்து தமிழ் எனும் அரும் பொக்கிஷத்தைக் காக்க எண்ணுவதற்கு விளைந்த எம் 'தமிழ் மொழி' தனித்தன்மையைப் பெறுவது வெளிப்படை உண்மை.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடியாய் நம் தமிழ்க்குடி தனக்கெனக் கொண்டிருந்த பண்பாட்டு அடையாளங்கள் முழு உலகத்தாலும் வியந்து போற்றக்கூடிய வகையில் அமைந்தவை. அவற்றிற்கு இன்றளவிலும் இருக்கின்ற செல்வாக்கு யாவராலும் அறியப்பட்டதே. இருந்தும் காலம் தன்னகத்தே மாற்றங்களை உள்வாங்க எம் இனிய மொழியின் வழியே எம்மவர் கட்டியெழுப்பிய பண்பாட்டு அம்சங்கள் மறந்தவையாகவும், நலிந்தவையாகவும் போய்க்கொண்டு இருக்கின்றமையைத் தொடர்ந்தும் விமர்சித்து வருகின்றமையும் கண்கூடு.

ஒரு மொழி தனக்கேயுரிய தனித் தன்மையைக் கொண்டு தனக்கென்று அமைக்கவேண்டிய எத்தனை அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டுமோ அத்தனையிலும் எத்தனையை அம் மொழியை ஆதாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட பண்பாடு கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்வி தமிழ்மொழி முன்னே இல்லை. ஏனெனில் அத்தனையும் கொண்ட அரும் பொக்கிஷம் எமது பண்பாடு.

மனிதனின் நடை, உடை, பாவனை என சமூக இருப்பிற்கு அவனுக்கு இன்றியமையாத பலவற்றை எம் மொழி வடித்துத் தருமாற்றைக் காலத்தின் கண்ணாடிகளாக இலக்கிய வழிநின்று இலகுவிலேயே எடுத்துரைத்து விடலாம். இயற்கையையே தன் எல்லாமாகக் கொண்ட மனிதனுக்கு. இயற்கையோடு இணைந்த பண்பாட்டியலை அகம், புறம் என்ற பெரும் கோட்பாடுகளாக வடித்துக் கொடுத்தது நம் தமிழ் மொழி. மனிதனுக்கு இயல்பெனக் காட்டப்படும் காதலையும், காதல் சார் அம்சங்களையும் சுவையாக வகுத்த போதிலும் அதிலும் ஓர் அறம் எம் தமிழ் பண்பாட்டிற்கு 'கைக்கிளை' 'பெருந்திணை' எனும் வடிவில் தரப்பட்டமை சிறப்பானது. புறம் என்பதுள் போரும், அகம் தவிர்ந்த பிறவும் எடுத்துரைக்கப்பட்டு அதனூடு மனித சமூகத்திற்கு உரைக்கப்பட வேண்டிய போர் தர்மங்கள் மற்றும் அறங்கள் தமிழருக்கென்றே தரப்பட்டமை மறுக்க முடியாத உண்மை. அகம், புறம், அறம், நீதி, ஆசாரம், ஒழுக்கம் என்ற தூய்மையான மரபுகளினூடு செம்மையாக வடித்துத் தரப்பட்டதாகத் தமிழர் பண்பாடு உலகிலே தலை நிமிர்ந்து நிற்க, எமது பண்பாட்டு அம்சங்களில் ஏராளம் நலிவுகள் ஏற்பட்டு, தமிழராலேயே தமிழ் மரபுகள் மறக்கப்படுவதற்கும் இன்று சந்தர்ப்பம் ஏற்பட்டது எதனால்?

### அந்நியரின் ஆதிக்கத்துக்கு ஆட்பட்டுள்ளது தமிழ்மொழி

நாகரிகம் என்ற பெயரிலே அந்நியரின் ஆதிக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கக் கிளம்பிய நம்மவர்கள், மாற்றத்தை உள்வாங்குகின்றோம் என்ற நிழல் மறைப்பில் தமிழ்ப் பண்பாடுகளை மறந்து செயலாற்றுகையே கூற விளைந்த விடயம். இவ்வகையில் மனித சமூகத்தின் நல்லெழுச்சிக்காகத் தமிழர் பண்பாடு என்பதனுள் முக்கியமான 'அறங்கள்' இன்றைய மக்களால் மறக்கப்பட்டுவிட்டன. திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, முதுமொழி வெண்பா, இன்னா நாற்பது, இனியவை நாற்பது என வரிசைப்படுத்தலுக்குள் அடங்காத எம் பண்பாட்டின் பிரதிபலிப்புக்களினூடு கூறப்பட்ட அறப்பண்புகள் பெருமளவில் மறக்கப்பட்டுவிட்டன. இலக்கியங்களிலே கூறப்பட்ட நல்லொழுக்கங்களுக்குத் தக்க சான்றெனக் கூறக்கூடிய திருக்குறளிலே அகம், பொருள், இன்பம் எனப் பட்டியலிடப்பட்டவை இக்காலத்திற்கே பெரிதும் பொருந்தும்.

இப்படி ஒரு காலம் பிறக்கும் என ஊகித்தே வள்ளுவர் இலக்கியம் படைத்தார் எனப் பாராட்டிப் பேசப்படும் இக்காலத்தின் பண்பாட்டியலில் ஏற்பட்ட நலிவு இதனூடாகவே வெளிப்படுகின்றது.

மனித வாழ்விலே இன்றியமையாத நடை, உடை, பாவனை நடத்தைகளில் ஏற்பட்ட ஏராளமான பிறழ்வுகளும், பிறரை வருத்தி உலகில் இன்னொன்றைப் பெற்றுக் கொள்ளும் இன்றைய பண்பாட்டு பிறழ்வுகளும் ஏற்கத்தகாதவை.

'கற்க கசடுஅறக் கற்பவை
கற்றபின் நிற்க அதற்குத் தக.'

எனும் திருக்குறளினூடு தமிழ் இலக்கியம் கூறும் எந்த நன்னெறியை நாம் பின்பற்றுகின்றோம். எமது செம்மொழி கற்பித்த எதனை நடைமுறைப்



படுத்துகின்றோம்? என்ற கேள்வி எம்மவரிடையே ஏற்படுகின்றது.

'யாதும் ஊரேயா வரும் கேளீர்'

எனக் கூறிய புறநானூறும் இன்றைய தமிழர்களால் மறக்கப்பட்ட விழுமியங்களுக்குப் பெரும் எடுத்துக்காட்டாகின்றது.

### கேலிக்கூத்தாகியுள்ள தமிழ்ப் பண்டிகைகள்

மனித வாழ்வின் உயரிய நோக்கின் நிமித்தம் கொண்டாடப்படுகின்ற பண்டிகைகள் இன்று வெறுமனே கேலிக் கூத்துக்களாக மட்டுமே பார்க்கப்படுகின்றன.

ஞானம், அறம், தவம், தாளாண்மை, முயற்சி, அறிவு என்னும் வகையில் கூறப்பட்ட உயரிய நன்னெறிகள் பசி வந்திடப் பறந்து போவதைப் போன்றே நாகரிகம் தழைத்தோங்கும் இவ்வுலகில் பறந்து போய்விட்டன. கலாசாரம் என்பதனுள் இன்றைய திருமண வைபவங்களையே எடுத்துக்காட்டாக நோக்கலாம். பணச் செலவுகளின் மத்தியிலே ஆடம்பரமே முன்னிலைப் படுத்தப்பட்டு, ஆடைக் கலாசாரங்கள் கூட மீறப்பட்டு திருமண வைபவங்கள் நடந்தேறுகின்றமை எமது பண்பாட்டை நலிவடையச் செய்த எம்மவரின் பெரும் சோகம்.

ஒரு பண்பாட்டின் உயர்வும், அதன் தாழ்ச்சிக் கிடக்கையும் தீர்மானிக்கப்படுவது அதனைப்பின்பற்றுவோர்களினுடைய செயற்பாடுகளினாலேயே. எனவே உலகமே போற்றும் பெறுமதியான எமது பண்பாட்டில் பிறந்தவையும், நலிந்தவையும் எனச் சுட்டக் கூடிய அத்தனையையும் சமூக மாற்றத்துக்கு ஏற்றவகையிலே உள்வாங்கி எமது பண்பாட்டை அழியாது பேணுதலே ஒவ்வொரு தமிழ் மக்களினதும் தலையாய கடமை.



'மாற்றம் ஒன்றே மாறா விதி' என்னும் எண்ணக் கருவின் கீழ் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' எனும் சிந்தனையின் கீழ் நாம் செய்யும் எமது பண்பாட்டுக்கு எதிரான செயற்பாடுகளை தனி மனித மனதளவில் மாற்றம் ஏற்படுத்துவதன் மூலம் மாற்றி அமைத்துப் பண்பாடு பேண விளைவோமாக.



# உழவனே உலகின் முதல்வன்

பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி



‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். வீணில் உண்டு களித்திருப்பவரை நிந்தனை செய்வோம்’ என்ற பாரதியாரின் பாடல்வரிகள் உலகறிந்தவையாக இருக்கலாம். ஆனால் அதன் உண்மைத் தன்மை இன்றைய நிலையில் உணரப்படுகின்றது.

ஏனெனில் உழவு என்பது உன்னதமான தொழில் என்பதைவிட தமிழரின் மரபு என்பதே சரியானதாகும். இதனைப் பண்பாட்டு ரீதியாகவும் மரபு வழியாகவும் காத்திரமாகவும் கரிசனையாகவும் பயன்படுத்தி பல பயன்களைப் பெற்றவர்கள் எமது முன்னோர்கள். இன்றோ உழவு அதன் காத்திரத் தன்மையை இழந்து நிற்கின்றது.

எமது பாட்டன் மாடுகட்டி ஏர்தொடுத்து நில முழுது உழவுத் தொழிலை நேர்த்தியாகவும் நேர்மையாகவும் நெஞ்சுரத்துடன் நெற்றி வியர்வை சிந்தி மண்ணை வளமாக்கி, நெல்லை விதையாக்கி, விதையை வரமாக்கி நெல் மணிகளை குவித்துத் தானும் வாழ்ந்து மற்றவனையும் வாழ வைத்தான்.

### உயிர்காத்தது உழவு

உழவுத் தொழில் தமிழரை ஒரு போதும் உயிர் போக்கியது கிடையாது. மாறாக உயிர்காத்து வந்தது. இங்கு உழவன் மண்ணையும், மழையையும், சூரியனையும், மாடுகளையும், உழைப்பையுமே நம்பி இருந்தான். எல்லாவற்றுக்கும் மேலாக கடவுளை வணங்கியே எந்தக் காரியத்தையும் ஆரம்பிப்பான். இதனால் உழவனிடம் தன்னம்பிக்கை இருந்தது உடல் ஆரோக்கியம் இருந்தது. இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருந்தது. இதன் மூலம் சூழலைப் பாதுகாத்தான். இயற்கையைநேசித்தான் இயன்றவரை மண்வளத்தைப் பாதுகாத்தான். ஆன்மிகம் இயற்கையையே கடவுளாக்கி வணங்க வைத்தது. இன்றைய காலகட்டத்தில் எல்லாமே தலைகீழாக மாறியுள்ளது. வேலைக்காக போராட வேண்டிய சூழல். அது மட்டுமன்றி பலபேரினது கைகால்களில் விழ வேண்டிய சூழலும் கையூட்டல் வழங்கவேண்டிய சூழலும் உருவாகியுள்ளன. இதனை மாற்றியமைக்க உழவுத் தொழிலுக்கு உயிர் கொடுத்து உணர்ச்சி மிக்க உன்னதமான சமூகத்தைக் கட்டியெழுப்புவது மிக அவசியம். இதனையே ‘கற்றவர் எத்துணைப் பாக்கியராயினும் காதல் காமத்தினில் சற்றுமிலாது ஊற்றிடும் உத்தியோகம் வேணுமென்று ஓடித்திரிகின்றார் சங்கமின்னே’ என்றும் துரையப்பாப் பிள்ளையின் அற்புதமான பாடல் எடுத்துரைக்கிறது. யாழ்ப்பாணத்தில் ‘கமக்காரர்’ என்றால் பெருமதிப்புக்குரியவராக இருந்தார். உண்டிகொடுத்து உயிர் கொடுக்கும் மகத்தான கருமத்தைச் செய்யும் உழவன் உயிரிலும் மேலாக நேசிக்கப்படுபவன். உயர்ந்த இடத்தில் வைத்திருக்கப்பட வேண்டியவன் இன்று சமூகத்தில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டே இருக்கிறான்.

பணத்துக்காக பலரும் பல விதமான தொழில்களை ஆற்றலாம் ஆனால் பசி என்று ஒன்று வரும்போது பணத்தையா கொடுக்கிறார்கள். பசிவந்தால் பத்துமே பறந்து போய்விடுகிறது. பணத்தை உண்டு மனிதன் பசியாற முடியுமா? முடியாது ஆகவே அனைவரது பசியைப் போக்க உணவு தேவை. உணவுக்கு ஆதாரமான தொழில் உழவுதான். அதைத்தான் தன்னை அலுப்பின்றி அர்ப்பணித்து உழைப்பினால் தருபவன் உழவன்.

### வடக்கில் வேண்டும் திருப்பம், விருப்பம்

வடமாகாணத்தில் உழவுக்கான மூலதனம் உள்ளது. ஆனால் முயற்சியற்றவர்களாக எம்மவர்கள் காணப்படுகின்றார்கள். அதே நேரம் விளைச்சல் நிலங்கள் இராணுவ முகாமாகவும் உள்ளன. மண்ணுக்குப் போராடிய இனம் அந்த மண்ணைப் பயன்படுத்தத் தவறினால் மண்செய்த குற்றமா அல்லது தமிழன் செய்த குற்றமா? என்பதை சிந்திக்க வேண்டிய காலம் இது.

உழவன் சேற்றில் கால்வைக்காமல் நாம் சோற்றில் கைவைக்க முடியாது’ என்பதை இன்றைய இளைஞர்கள் உணரவேண்டும். எமது மூதாதையர்கள் இதனை நம்பியே நம்பிக்கையோடு உழவுத் தொழிலைச் செய்தனர். இப்படியாக தமிழர் வரலாற்றுடன் இரண்டறக் கலந்து இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் உழவுத் தொழிலை மறக்கவும் முடியாது மறைக்கவும் முடியாது.

## உழவர்களை போற்றுவோம்!

உணர்வை வெளிக்காட்டி
உடலை வருத்தி
உள்ளத்துறைவோனை துதித்து
உலவரம் கொண்டு
உழைப்பவர்கள் உழவர்கள்.

உழலும் வறட்சியிலும்
உறையும் பனியிலும்
உறைத்துளி நீரிலும்
உறுதியுடன் நின்று
உழைப்பவர்கள் உழவர்கள்

உயிர் வாழ்வதற்கு
உண்டி நிறைக்க
உம்பல் துரத்தி
உணக்கம் கொள்ளாது
உழைப்பவர்கள் உழவர்கள்

உவாமதி நேரத்திலும்
உறக்கம் தவிர்த்து
உலா வந்து
உவப்பு அடையும்
உழைப்பாளிகள் உழவர்கள்

உலகத்திலுள்ளோர் சேர்ந்து
உழவனுக்கு விழாவெடுக்கும்
உன்னத நாளில்
உள்ளம் மலர்ந்து
உழவர்களைப் போற்றுவோம்!

வ.துசாந்தன்



## தவமறிந்து பிறந்துவா...

சாப்பிட்டோம், சமிக்கவில்லை தினமும்
சத்தியம் செய்தோம் சாத்தியமாகவில்லை
காப்புக் கட்டினோம் காலாவதியானது
காணியைக் கேட்டோம், கைதிகளானோம்

வருடங்கள் பிறக்கின்றன, வாகனங்களும் மோதுகின்றன
வாள்வெட்டுக்கு இரவும் பகலும் இரையாகின்றன
தெருவெல்லாம் கண்ணீர் தேங்கி நிற்கின்றது
தேசமெல்லாம் தண்ணீருக்காய் அலைகிறது

போதையும் பலாத்காரமும் குறைந்த பாடில்லை
போர் முடிந்தும் நொந்தவர் இன்னும் நிமிரவில்லை
சீதைகள் வாழ்வதற்கேற்ற பாதுகாப்பில்லை
தீரயோசித்து புதுவருடமே தீர்வு கொண்டு வா

கதைக்கப் பேச எழுத இங்கு முடியவில்லை
காடுகளும் யானைகளும் வாழ முடியவில்லை
எதையெடுத்தாலும் ஊழலுக்குக் குறைவில்லை
இந்த மண்ணின் தவமறிந்து விடிவு கொண்டு வா!

தே.எஸ்.சிவஞானராஜா.



## பொங்கலா! தமிழருக்கா?

ஆண்டாண்டு காலமாய்
அடக்கப்பட்டு அழிக்கப்பட்டோம்
ஐம்பத்தாறுகளில் இருந்தே
கொலை செய்யப்படுகிறோம்
முள்ளிவாய்க்காலில்,
முட்கம்பிச்சிறைகளில் அடைபட்டோம்

போரின்பின் ராசபக்ச 13 10
என்று கூப்பாடு போட்டார்
இப்போது 13ம் இல்லை 10ம் இல்லை
அபிவிருத்தி மட்டுமே தீர்வாம்
பயங்கரவாதச் சட்டம்
மறுபடி எங்கள் பூமியெங்கும்

அரசபடைகளின் பிரசன்னம்
படைகளினூடே எம் தமிழ் மக்கள்
பல் இன நாட்டில்
பௌத்தத்துக்கே முன்னுரிமை
அடித்துஉடைக்கப்படும்மதத்தலங்கள்
அமைக்கப்படும் புத்தர் சிலைகள்

கச்சேரி, காவல்துறை எங்குமே
சிங்கள மேலாதிக்கம்
நல்லிணக்க அரசு போய்
குரக்கன் சால்வையைக் கைவிட்டுக்
கோட்டுப் போட்ட அதியுத்தமர்
கோத்தாபய வந்தென்ன

தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வுமே
கிடையாது இதுவே யதார்த்தம்
எவர் வந்தாலும்
பேரினவாதக்குட்டையில்
ஊறிய மட்டைகளே

இது புரியாமல் ஏமாந்து போய்
பேரினவாதத்தின் காலைப்பிடிக்கும்
எமது அரசியல் தலைமைகளும்
எதையுமே தர மாட்டோமென்று
எட்டி உதைக்கும் சிங்களமும்
இந்த நிலை மாறி இன்னல்கள்
தீரும்வரை பொங்கவா முடியும்
பொங்கலா! எங்களுக்கா?

கவிதா, ஏறாவூர்.

## இனிய பொங்கல்

பசியைப் போக்குதற்குப்
பகலிரவாய் பாடுபட்டு
பயிர் வளர்க்கும் விவசாயி -
வசிப்போர் வளமாக
வாழ்வதற்கு உணவளிக்க
விவசாயம் செய்கின்ற விவசாயி
புசிப்பதற்கு ஏற்றளவு
புத்தரிசி பெற்று
புதுப்பானை பொலிவுதர
மங்கலமாய் உசிதமாய் சூரியனிற்
உயர்வாய் நன்றி சொல்ல
இனிய தைப்பொங்கல்
பொங்குகிறான்

குளப்பிட்டி க.அருமைநாயகம்

# f வலை உலா...






## குட்டி கதைகள்

அவன் கேட்டான், "நீ இந்துவா முஸ்லிமா?" பதில் வந்தது. "எனக்கு பசிக்கிறது!"

மனிதனும் கடவுளும் சந்தித்தார்கள். இருவருமே வியந்தார்கள்,"என்னைப் படைத்தவன்!"

இப்போதெல்லாம் நாம் நண்பர்களை உருவாக்குவதில்லை. சேர்க்கிறோம்!

பட்டினியால் இறந்த விவசாயி வாயில் போட்டார்கள் விதை நெல்லை!

பேய் வீடென்று குறிப்பிட்ட வீடுகளில் எப்போதும் வாழ்கிறது ஊராரின் பயம்.

நாளையில் இருந்து படிக்கிறேன்'னு சொன்னவனும், `நாளையில் இருந்து குடிக்கலை'னு சொன்னவனும் ஜெயிச்சது இல்லை!

## உன்னை உயர்த்தும் 7 அதிசயங்கள்



7. பதவியிலும் பணிவு
6. துன்பத்திலும் துணிவு
5. கோபத்திலும் பொறுமை
4. செல்வத்திலும் எளிமை
3. ஏழ்மையிலும் நேர்மை
2. தோல்வியிலும் விடாமுயற்சி
1. வறுமையிலும் உதவி செய்யும் மனம்

## ருவீற்ஸ்...

முகமூடி™ @mugamoodi11

நல்லதை தனியாக செய்பவன்
தண்டிக்கப்படுகிறான்..!!
தவறையே கூட்டமாக செய்பவர்கள்
தப்பித்து கொள்கிறார்கள்..!!

செங்காந்தள் @kumarfaculty

ஸ்டிக்கர் பொட்டு வந்த பிறகு பாத்
ரூம்களும் சுமங்கலிகள் ஆகி
விட்டன...!!!

ச ப் பா ணி @manipmp

மூளையை அழுக்காய்
வைத்திருக்காதே!
எளிதில் சலவை
செய்துவிடுவார்கள்

mekalapugazh

அலாரம் வைப்பது என்பது
எழுந்து கொள்வதற்காக
அல்ல; எத்தனை மணிக்கு
எழுந்துகொள்ளலாம் என்று
முடிவெடுப்பதற்கே.

ச ப் பா ணி @manipmp

தவறு ஒன்றே
நாம் முயற்சி
செய்ததற்கான ஆதாரம்


ச ப் பா ணி @manipmp

சண்டைக்கு பிறகு நாம்
அனுப்பும் சமாதான ஒப்பந்த
சான்றிதழ் எதிர்
இருப்பவரின்
மனநிலையை பொறுத்தே
செயல்படுகிறது..

எந்தச் சிக்கலுமே
உன்னை சிதைக்க
வந்தது அல்ல செதுக்க
வந்ததே...




மட்டம் தட்டப்படும் மனமும் மட்டம் தட்டப்படுகின்ற தரையும் என்றும் பலமானதாகவே இருக்கும்.












சி.நற்குணலிங்கம்

# தற்கொலை த குமா?



தற்கொலை என்றால் உள்நோக்கோடு ஒருவர் தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளல். இது விருப்பத்துடன் ஒருவர் தன்னைத்தானே கொலை செய்து கொள்ளும் செயலாகும். தற்கொலை என்பது உளரீதியான எண்ணம் சார்ந்தது. தற்கொலை முயற்சியில் ஒருமுறை ஈடுபட்டு உயிர் தப்பித்த ஒருவர் எதிர்காலத்தில் மீண்டும் தற்கொலைக்கு முயற்சிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம். இறப்புக்குப் பின்னர் பிரச்சினைகளிலிருந்து முற்றாக விடுபடலாம் என்பதே அவர்களது ஒரே நம்பிக்கை. தற்கொலை நிரந்தர தீர்வல்ல.


**கவலைதரும் புள்ளிவிவரம்**

இலங்கையில் நாளொன்றுக்கு சராசரியாக 8 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். இவ்வாறு இறப்பவர்களில் 80 வீதத்தினர் ஆண்களே. காவல் துறையின் தகவல்களின்படி 2015ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 389 ஆண்கள் உள்ளிட்ட 3 ஆயிரத்து 58 தற்கொலைகள் பதிவாகியுள்ளன. 2016ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 339 ஆண்களும் 668 பெண்களும் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர்.

2016ஆம் ஆண்டிலிருந்து தற்கொலைகள் இடம்பெறும் சதவீதம் அதிகரித்துள்ளது. 2017ஆம் ஆண்டில் தற்கொலைகள் அதிகமாக இடம்பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலாம் இடத்தில் இருந்தது. 2018ஆம் ஆண்டு அடிக்கடி மரண ஓலம் கேட்கும் இடமாக மட்டக்களப்பு கல்லடிப்பாலம் விளங்கியது. கல்லடிப் பாலத்திலிருந்து குதித்து அதன் கீழுள்ள வாவியில் விழுந்து தற்கொலை செய்வோர் அதிகமாக இருந்தது. மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் 63 தற்கொலைகளில் 14 தற்கொலைகள் கல்லடிப் பாலத்தில் அடையாளப்படுத்தப்பட்டன. 2019ஆம் ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் ஆயிரத்து 597 தற்கொலைகள் நிகழ்ந்துள்ளன. அதில் ஆயிரத்து 275 பேர் ஆண்கள். 322 பேர் பெண்கள். 2019ஆம் ஆண்டு வடக்கில் 176 பேர் தற்கொலை செய்து கொண்டனர். 827 பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். இதில் பெண்களே அதிகமாகக் காணப்பட்டனர். 2019ஆம் ஆண்டில் தற்கொலை 35.3 வீதமாகக் காணப்பட்டது.

அபிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்புநோக்கின் இளைஞர்கள் மத்தியில் தற்கொலைகள் விகிதம் இப்போதும் இரு மடங்காகவே காணப்படுகிறது. 15 வயது முதல் 29 வயது வரையானவர்களிடமே தற்கொலைகள் அதிகமாகக் காணப்பட்டது.

உலகில் மூன்றில் இரண்டு தற்கொலைகள் வளர்முக நாடுகளில் ஏற்படுகின்றன. உலகில் கிட்டத்தட்ட 8 லட்சம் பேர் ஒவ்வொரு ஆண்டும் தற்கொலையால் இறக்கின்றனர். உலக அளவில் ஒவ்வொரு 40 நொடிகளில் நாம் ஒரு உயிரை தற்கொலையால் இழக்கின்றோம் உலகளாவிய ரீதியில் மரணத்துக்கு காரணமாக விளங்கும் பத்தாவது முக்கிய காரணி தற்கொலையாகக் கருதப்படுகிறது.



**தனிநபர் சார்ந்த பிரச்சினையல்ல**

வாழ்க்கையை சிறப்பான முறையில் வாழ வழி தெரியாதோரே உயிரை அழித்திட வழி தேடுகின்றனர். இன்றைய கால நகர்வில் தற்கொலை என்பது எமது சமூகத்தின் மிகச் சாதாரணமான செயற்பாடாகிவிட்டது. தற்கொலை தனியன் ஒருவனை மையப்படுத்திய பிரச்சினை என்றாலும் சமூகத்திலும் அதன் தாக்கம் பெரிதே. மனிதப் பெறுமானத்தை சரிவர உணர முடியாமலும் குறுகிய மனப்பான்மையுடனும் அவசரமாக எடுக்கப்படும் முடிவுகள் தற்கொலைகளாக பரிணமிக்கின்றன. தற்கொலைகள் கொடிய பாவச்செயலாகவே கருதப்படுகின்றன. பிரச்சினைகளுக்கு வடிகாலாக தற்கொலையை நாடுவது மூடத்தனமானதாகும்.

**காரண காரணிகள்**

மனஅழுத்தம், மனப்பிறழ்வு, ஆளுமைச் சிதைவு, மது பாவனை, குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், கடுமையான உடல்வலி, பொருளாதார சிக்கல்கள், உறவுகளின் பிரச்சினை, மன அழுத்தத்தில் இருக்கும்போது விடயங்களை அந்தக் கணத்தில் குறுகிய மனப்பான்மையோடு பார்த்தல், பரீட்சையில் தோல்வி, காதலில் தோல்வி, விரக்தி நிலைக்கு உள்ளாகுதல், இழப்புக்களால் பாதிக்கப்படுவோர், கடன் தொல்லை, மனவெழுச்சி மாறுதல்கள் (பதகளிப்பு, கோபம், பயம்) தனிமை, புரிந்துணர்வின்மை, பொறுமை குறைவு, நிதானமற்றவர்கள், தவறான அபிப்பிராயங்கள், முரண்பாடுகள், முடிவெடுக்கும் திறன் குறைவு, தன்னம்பிக்கையின்மை, மணமுறிவு, குடும்ப வன்முறை, ஆறுதலை நாடாமை, அன்பு குலைதல், வறுமை, வேலையில்லாப் பிரச்சினை ஆகிய காரணிகள் தற்கொலையைத் தூண்டும் காரணிகளாக உள்ளன.

தற்போது பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்ற தற்கொலைகளானவை உணர்வைச் சிதைக்கும், உள நெடுக்கீட்டின் தாக்க மேலீட்டால் நிகழ்பவையாகும். நவீன உலகில் பறக்கும் நாம் கைபேசிகளையும் கணினிகளையும் மட்டுமே உற்ற நண்பர்களாக பார்ப்பதும் நம் துக்கங்கள், கவலைகள், உள நெருக்கீடுகளை பகிர முடியாமைக்குக் காரணமாகும். யதார்த்தத்திலே பெரும்பாலான தற்கொலைகள் சொற்கள் மற்றும் நடத்தைகள் மூலமாக முன்கூட்டியே வெளிப்படுத்தப்படும் எச்சரிக்கை சமிக்ஞைகளாகக் கொண்டிருக்கின்றன. அத்துடன் நான் இறப்பதே மேல், நான் குடும்பத்துக்கு பாரமாகிவிட்டேன். எனக்கு வாழப் பிடிக்கவில்லை. நான் வாழத்தான் வேண்டுமா? என யாராவது சொன்னால் அந்த வார்த்தைகளை சும்மா என எடுக்கக் கூடாது. அவை மனச்சோர்வின் வெளிப்பாடான வார்த்தைகளே. ஒவ்வொரு தற்கொலையின் பின்னணியிலும் உயிரியல், உளவியல், சமூகக் காரணிகள் அடங்கியிருக்கும். 90 வீதத் தற்கொலைக்கு மன அழுத்தம் தான் காரணமாகும். தற்கொல்ல நடத்தைக்கான காரணங்களை எல்லைப் படுத்த முடியாது.

**அதிகம் பாதிப்புறும் வறிய வர்க்கத்தினர்**

இலங்கையில் கிராமப்புறங்களில் புள்ளி விவரங்களின்படி தற்கொலை முயற்சிக்கான அதிக ஆபத்தைக் கொண்ட சனத்தொகையுள் நான்கு துணைக்குழுக்கள் கண்டறியப்பட்டன. விவசாயிகள், தினசரிக் கூலித் தொழிலாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், வெளிநாடு சென்றவர்களைக் கொண்ட குடும்பங்கள் தற்கொலையில் சமூக காரணிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. வடக்கில் தற்கொலை அதிகரிப்புக்கு நுண்கடன் திட்டமே முக்கிய காரணிகளில் ஒன்று. இதனால் பெண்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அதிலும் இதுசார் தற்கொலைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகம் என ஆய்வுகள் கூறுகின்றன. அக, புறக் காரணிகளின் தூண்டுதல் காரணமாக ஒருவருக்கு உளப்பாதிப்பு, நெருக்கீடு ஏற்படுமிடத்து அதிலிருந்து அவர் உடனடியாக விடுபட முயற்சிக்க வேண்டும்.

காலம் நீடிக்குமாயின் அவர் தற்கொலையில் ஈடுபடும் சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும். அதிலிருந்து விடுபட உற்ற நண்பரை அல்லது உறவினரை நாட வேண்டும். உணர்வுபூர்வமான ஒரு துணை கட்டாயம் தேவை. அன்போடும், நட்போடும் அணுகுவதன் மூலம் அவரை மீட்டெடுக்கலாம். மனம் திறந்து தமது பிரச்சினைகளை பகிர்வதன் மூலம் விலக்கிக் கொள்வது இலகுவாகும். கோபம் மற்றும் முரண்பாடுகளை கட்டுப்படுத்தும் தன்மை மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். மதுபாவனை, உளரீதியான பிரச்சினைகள் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம் என உளநல மருத்துவர்கள் கூறு கின்றனர்.


சுகாதார அமைச்சு உளவள ஆற்றல் சேவைகளை நாடளாவியதாக அரச வைத்தியசாலைகளில் மன அழுத்தத்தைக் கையாளுதல், சாதகமாக சிந்தித்தல், ஆற்றலைக் கட்டியெழுப்புதல் என்பவை இளைஞர்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி தீர்வுகளை கண்டறிய வழிகாட்டும் நோக்கில் CCC Line 1333 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மன அழுத்தத்திலிருந்தும் தற்கொலை எண்ணத்திலிருந்தும் விடுபட தொலைபேசி ஊடாக உரையாடலாம். இவ் அமைப்பின் ஸ்தாபகராக ரணில் திலகரத்ன விளங்குகிறார். நாம் ஒவ்வொருவர் உள்ளிலும் சவால்களை சமாளிக்கும் தன்மை புதைந்து கிடக்கிறது. தற்கொலை செய்வது சட்டவிரோதமானது. அதனால் வாழ்வதற்கான வழியைத் தேடுங்கள்.

# வித்தியாசமானவன்



பஸ் தரிப்பு நிலையங்களில் தரிப்பதும் புறப்படுவதுமாக ஓடிக் கொண்டிருந்தது அந்த அரச பஸ். பிரயாணிகள் தம்பாட்டுக்கு ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தனர். நெரிசல் சற்று அதிகமாகத்தானிருந்தது. இது வழமையான காலை நேரத்து சம்பவம்தான்.

மிருசுவில் தமிழ்தாசன்



அந்த அரச பஸ் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. உள்ளே நடத்துநரும் முன்னும் பின்னுமாக ஓடிக்கொண்டுதானிருந்தார். ஆனால் யாருக்கும் ஒழுங்காக பயணச்சீட்டுக் கொடுத்ததாகத் தெரியவில்லை.

"என்னப்பா உந்தக் கொண்டக்டர்' வேலைக்கு புதிசோ! இன்னும் ரிக்கெற் தரயில்லை. ஏதோ ஓடித்திரியுறான் மனிசன். ரிக்கெற் தாற நோக்கத்தைக் காணயில்லை" நாஷனல் சட்டை வயோதிபர் வாய்க்குள் முணுமுணுத்தார்.

"அதொண்டுமில்லை பாருங்கோ! ஆக்களின்ரை வீட்டு விலாசம், அடையாள அட்டை நம்பர் எல்லாம் கேட்டெழுதுறாராம் கொண்டக்டர். அதுதான் கொஞ்சம் சுணங்குது. வேறை ஒண்டுமில்லை"

பக்கத்து சீற்றிலமர்ந்திருந்த இளைஞன் ஒருவன் சிரிக்காது ஜோக் அடித்தான். அதைக் கேட்டு பஸ்ஸுக்குள் அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் கொல்லென்று கோரஸாகச் சிரித்தனர்.

பஸ் தரிப்பிடங்களில் தரிப்பதும் புறப்படுவதுமாக ஓடிக் கொண்டிருந்தது அந்த அரச பஸ். பிரயாணிகள் தம்பாட்டுக்கு ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தனர். நெரிசல் சற்று அதிகமாகத் தானிருந்தது. இது வழமையான காலை நேரத்து சம்பவம்தான்.

⊛⊛⊛⊛⊛⊛

வயது நாற்பதாவது தேறும். அழகு போதாவிட்டாலும் அணிந்திருந்த ஆபரணங்கள் அந்தப் பெண்மணியை ஓர் அழகியாகவே காட்டின. பஸ்ஸில் தொற்றிக் கொண்டவள் உள்ளே சனக்கூட்டத்தைக் கண்டதும் தன்னையுமறியாது மூக்கைச் சுளித்தாள். இருக்கையிலமர்ந்து உல்லாசப் பயணம் செய்பவர்கள் அனைவருக்கும் அன்றைய தினத்து ராசிபலனில் சுகப்பிரயாணம் என்று இருந்திருக்கும். ஏனைய 'வௌவால்' பிரயாணிகளுக்கு பிரயாணக் கஷ்டம் என்று தானிருந்திருக்க வேண்டும். ஏலவே கேட்டுக் கம்பியில் தொங்கியபடி பயணம் செய்து கொண்டிருந்த வௌவால்களுடன் மேலும் ஒரு வௌவாலாக அந்தப் பெண்மணியும் இணைந்து கொள்ள வேண்டியது அந்தத் தருணத்து சூழ்நிலைக் கட்டாயமாக இருந்தது. முகட்டுக் கம்பியை எட்டிப் பிடிக்கலாமென்றால் அதுவும் அவளுக்கு எட்டித் தொலையவில்லை. இன்னுமொரு இரண்டு மூன்று அங்குலங்களாவது உயரமாக வளர்ந்திருப்பாளாகில் முகட்டுக் கம்பியை எட்டிப் பிடித்திருப்பாள். பாவம்! குட்டையாயிருந்த படியால் பிரயாணம் மிகவும் சிரமமாகவே அமைந்திருந்தது.

போதாதற்கு அவ்வப்போதைய பஸ்வண்டியின் ஆட்டங்கள் குலுக்கல்கள் அவளை மேலும் இம்சைப்படுத்திக் கொண்டிருந்தன. சுகப்பிரயாணிகளில் யாராவது இளவயதினர் எழுந்து அந்தப் பெண்ணுக்கு இருக்கையைக் கொடுத்திருக்கலாம். ஆனால் அதெல்லாம் வீண் வேலை என்பது போல பார்வையை வேறெங்கோ செலுத்துவது போன்ற பாவனையில் குத்துக்கல்லாட்டமிருந்தனர்.

"அம்மா! இதிலை வாங்கோ! பாவம் அம்மா கஷ்டப்படுறா. இந்தச் சீற்றிலை இருங்கோ" குரல் வந்த திசையை அனைவரும் ஆச்சரியத்துடன் நோக்கினர். வயது இருபத்தைந்துக்குமேல்கணிக்கமுடியாது. கறுப்பு ஜீன்ஸ். கட்டம் போட்ட ஷேர்ட். 'புல்ஸ்லீவில்' அது கனவான்தனம் காட்டியது. சற்று கறுப்பாகவிருந்தாலும் கம்பீரமான தோற்றம். தற்காலத்து இளைஞர்களின் தாடியோ கிருகதாக்களோ இல்லாது சுத்தமாக மளிக்கப்பட்ட பளிச்சென்ற முகம். இத்தனைக்கும் சொந்தக்காரனான அந்த இளைஞன் இதுவரை சௌகரியமாக அமர்ந்திருந்த இருக்கையை யாரோ ஒரு முகம் அறியாத பெண்ணுக்கு தாரை வார்த்துவிட்டு முகட்டுக் கம்பியைப் பிடித்தபடி அநாயாசமாகப் பயணித்துக் கொண்டிருந்தான். மடிப்புக் குலையாது நேர்த்தியாக அணிந்திருந்த அவனுடைய உடைகள் சனநெரிசலில் அகப்பட்டு அழுக்கடைந்து கொண்டிருந்தன. அது ஒன்றையும் அவன் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. உண்மையில் சொல்லப்போனால் அவன் ஓர் உயர் பதவி வகிக்கும் அரச அலுவலர் போன்றே தோற்றமளித்தான். ஏதோ சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக அரச பஸ் வண்டியில் பயணிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதோ என எண்ணத் தோன்றியது.

⊛⊛⊛⊛⊛⊛

"கடவுளே! இந்தக் காலத்திலை இப்பிடியொரு பிள்ளையோ! இத்தனை ஆக்களும் பிடிச்சு வைச்ச பிள்ளையார் போலை பிடிச்ச சீற்றை விட்டு எழும்பாமல் அப்பிடியே இருக்கினம். பாரப்பா இந்த இளந்தாரிப் பெடியன் அதுவும் ஏதோ பெரிய உத்தியோகக்காரன் போலை கிடக்குது. பார் அதுக்குள்ள இரக்கத்தையும் மனிதாபிமானத்தையும் ஆர்பெற்ற பிள்ளையோ! நல்லாயிருக்க வேணும். இந்தப் பெடியனைப் பார்த்து இப்பத்தைய பிள்ளையளும் திருந்த வேணும். உண்மையிலை இந்தக் காலத்திலை ஒரு வித்தியாசமான பிள்ளையப்பா. உண்மையாய்த்தான். வித்தியாசமானவன்.

பயணிகள் பலரும் பலவிதமாகப் புகழ்ந்து கொண்டிருந்தனர். ஆனால் அவனிடமிருந்து இருக்கையைப் பெற்றுக் கொண்ட அந்தப் பெண்மணி மட்டும் இன்னமும் வாய் திறந்து அவனுக்கொரு நன்றி சொல்லவில்லை என்பதை எண்ணி மனதுக்குள் வருத்தப்பட்டிருப்பாளோ என்னவோ!

"தம்பி உமக்குப் போற வழிக்குப் புண்ணியம் கிடைக்கும் அப்பன்" வாயைத் திறந்து மனப்பூர்வமாக நன்றி கூறித்தான் விட்டாள்.

"ஐயோ இதென்ன இது. ஆரேன் கஷ்டப்படுறதைப் பார்த்தால் எனக்கு மனம் தாங்காது. உள்ளதைச் சொன்னால் என்ன எனக்குக் கொஞ்சம் இளகின மனம். மனிசனாய் பிறந்தவைக்கு அன்பும், மனிதாபிமானமும் உதவி செய்யுற மனப்பான்மையும் வேணும். இதை என்ரை பெற்றார்தான் சொல்லித் தந்தவை. நானும் அப்படியே வளர்ந்திட்டன். நீங்கள் இதைப் பற்றிக் கவலைப்படாமல் சந்தோசமாயிருங்கோம்மா" மிகவும் நிதானமாக சொல்லி முடித்தான் அந்த இளைஞன். என்னதான் சொன்னாலும் அவன் ஒரு வித்தியாசமானவன்தான்.

⊛⊛⊛⊛⊛⊛

சாரதிக்கு ஏன் அப்படியொரு குஷி பிறந்து விட்டதோ! இப்போது பஸ் வண்டி முன்னையதைவிட இரட்டிப்பு வேகத்தில் விரைந்து கொண்டிருந்தது. இருக்கையைப் பெற்றுவிட்ட அந்தப் பெண்மணி உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். திடீரென்று அவளுக்கு என்ன வந்ததோ!

"ஐயோ என்ரை சங்கிலியைக் காணயில்லை. கையிலை கிடந்த கைச்செயினையும் காணயில்லை. பித்தளைக் காப்பு மட்டும் கிடக்குது. கடவுளே! கலியாண வீட்டுக்குப் போறதுக்காக பக்கத்து வீட்டு பரிமளம் மாமியிட்டை இரவல் வாங்கிப் போட்டுக் கொண்டு வந்த நகையள். ஐயோ! கடவுளே! இப்ப நான் என்ன செய்ய?"

அந்த நடுத்தர வயதுப் பெண்மணி பரிதாபமாகக் கத்திக் கொண்டிருந்தாள்.


"பஸ்ஸை நிப்பாட்டுங்கோ" எல்லாரையும் சோதிச்சுப் பாக்கவேணும்"

இப்போதுதான் நடத்துநர் உஷாரடைந்திருந்தார். பிரயாணிகள் அனைவரையும் சோதனை செய்தாயிற்று. களவு போன நகை யாரிடமும் கண்டுபிடிக்கப்படவில்லை. அது சரி எங்கே அந்த மனிதாபிமானமுள்ள இளைஞன். அந்தப் பெண்மணிக்கு இருக்கையைக் கொடுத்துவிட்டு அவளருகில் நெருங்கி நின்று ஏதோ ஒருவித உரிமையுடன் பிரயாணம் செய்தானே அவன் எங்கே. அவன்தான் பாதி வழியில் இறங்கிவிட்டானே. போக வேண்டியது எங்கேயோ. இறங்கியது எங்கேயோ! உண்மையில் அவன் ஒரு வித்தியாசமானவன்தான். எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.



# தீபிகாவுக்கு வந்த சோதனை!






பிரபல நடிகை தீபிகா படுகோகேவின் விளம்பர வாய்ப்புக்கள் தற்போது வெகுவாகக் குறைந்துள்ளனவாம்.
இந்திய அரசு அறிமுகப்படுத்திய குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக தீபிகா குரல் கொடுத்தார். இந்திய மத்திய அரசுக்கு எதிராக புதுடில்லிப் பல்கலைக் கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தி லும் பங்கெடுத்தார். இதன் விளைவாக தீபிகாவை வைத்து எடுப்பதற்குத் திட்டமிட்ட விளம்பரங்களை இந்திய மத்திய அரசு கைவிட்டுள்ளது மட்டுமல்லாமல் பல்வேறு நிறுவனங்கள் இந்தியாவில் தீபிகாவுக்கு ஏற்பட்டுள்ள திடீர் எதிர்ப்பை அடுத்து அவரை விளம்பரங்களில் இருந்து புறக்கணித்துள்ளனவாம்.






## ஓரளவு வெடித்துள்ளது ஆங்காங்கே புகைத்துள்ளது

தந்தையைக் கொன்ற வில்லனைப் பழிவாங்கி, தாயின் சபதத்தை நிறைவேற்றும் மகனின் கதைதான் 'பட்டாஸ்'.
நண்பனுடன் சேர்ந்து திருடுவதை வழக்கமாக வைத்திருக்கும் தனுஷ், தன் எதிர் வீட்டில் குடியிருக்கும் மெஹ்ரீனின் தொந்தரவு தாங்க முடியாமல், அவர் வேலை பார்க்கும் குத்துச்சண்டைப் பயிற்சி மையத்தில் உள்ள மெடல், கோப்பைகளைத் திருடுகிறார்.
எனவே, மெஹ்ரீனின் சம்பளத்தை ஒரேயடியாகக் குறைப்பதோடு, தொலைந்துபோன பொருட்கள் கிடைக்கும்வரை வேறெங்கும் வேலைக்குச் செல்லக்கூடாது என உத்தரவு போடுகிறார் பயிற்சி மையத்தின் நிர்வாகி. மெஹ்ரீனின் சான்றிதழ்கள் அங்கு இருக்க, தன் தவறுக்கு பிராயச்சித்தமாகவும், தன் மனதுக்குப் பிடித்த பெண் என்பதாலும் அந்த சான்றிதழ்களைத் திருடச் செல்கிறார் தனுஷ்.
இன்னொரு பக்கம், வெளிநாட்டுக்காரன் ஒருவனைக் கொன்ற குற்றத்துக்காக கேரளாவில் உள்ள சிறையில் ஆயுள் தண்டனை அனுபவிக்கிறார் சினேகா. தண்டனைக்காலம் முடிந்து வெளியே வரும் சினேகா, வில்லன் நவீன் சந்திராவைக் கொல்வதற்காக, அவனுடைய குத்துச்சண்டைப் பயிற்சி மையத்துக்குச் செல்கிறார். அங்கு, இறந்துவிட்டார் என நினைத்த தன் மகன் தனுஷைப் பார்க்கிறார் சினேகா.
சினேகா - மகன் தனுஷை பிரிந்தது ஏன்? அப்பா தனுஷ் என்னவானார்? நவீன் சந்திரா வில்லன் ஆனது ஏன்? போன்ற கேள்விகளுக்கு விடைசொல்கிறது மீதிக்கதை.
அப்பா (திரவியப் பெருமாள்) மகன் (பட்டாஸ் என்கிற சக்தி) என இரட்டை வேடங்களில், அந்தந்த கதாபாத்திரங்களுக்குத் தேவையானதை 100 சதவீதம் தந்துள்ளார் தனுஷ். மீசை, தாடியை மழித்தாலே போதும்... சின்னப்பையன் லுக், எந்தவித மெனக்கிடலும் இல்லாமல் தானாக அமைவது தனுஷுக்கு கிடைத்த வரம். திருடனாக மகன் கதாபாத்திரத்தில் அவர் அடிக்கும் லூட்டிகள், நிஜமாகவே பட்டாஸ் ரகம். சதீஸுடன் சேர்ந்து அவர் செய்யும் காமெடிகள், வெடித்துச் சிரிக்க வைக்கின்றன.
அதேசமயம், பொறுப்புள்ள தற்காப்புக்கலை வீரனாக தந்தை கதாபாத்திரத்திலும் தன்னை நிரூபித்துள்ளார் தனுஷ். சங்க இலக்கியங்களில் கூறப்படும் ஆண்மகனின் காதல், வீரம் இரண்டையுமே செம்மையாக வெளிப்படுத்தியுள்ளார். அடிமுறை கலையில் அவர் அடியெடுத்து வைத்ததைப் பார்க்கும்போது, நம் நரம்புக்குள்ளும் 'ஜிவ்'வென்று ரத்தம் பாய்கிறது. கன்னியாகுமரி கதாபாத்திரத்தில் அப்பா தனுஷுக்கு மனைவி, மகன் தனுஷுக்கு அம்மா என நிறைவாகச் செய்துள்ளார் சினேகா. சில வருட இடைவெளிக்குப் பின் நடிப்பது, தனுஷுக்கு அம்மாவா என்ற விமர்சனங்களையெல்லாம் தாண்டி, சினேகாவின் சினிமா வாழ்க்கையில் பேசப்படும் படமாக இது நிச்சயம் அமையும். படத்தின் மையப் பாத்திரமே சினேகாதான். அவரை வைத்துத்தான் கதையே நகர்கிறது. சிறிது உடல் எடை கூடிவிட்டது என்பதைத் தவிர வேறெந்தக் குறையும் அவரிடத்தில் இல்லை.
அடிமுறைக் கலையை சொல்லித்தரும் ஆசானாக, அந்தக் கதாபாத்திரத்துக்குண்டான மரியாதையைத் தன் நடிப்பின் மூலம் நிலைநிறுத்தியிருக்கிறார் நாசர். இந்தப் படத்தின் மூலம் காமெடியனாக அறிமுகமாகியிருக்கும் 'கலக்கப்போவது யாரு' சதீஷ், கிடைக்கிற கேப்பில் அடித்தாடுகிறார். அவருடன் சேர்ந்து சில இடங்களில் முனீஸ்காந்தும் சிரிக்க வைக்கிறார். மகன் தனுஷ் ஜோடியாக நடித்துள்ள மெஹ்ரீன், முதல் பாதியில் சொதப்பியிருக்கிறார். இரண்டாம் பாதியில் ஒன்றிரண்டு காட்சிகளில் வந்தாலும், கச்சிதமாக நடித்துள்ளார். தனுஷுக்கு நிகரான கதாபாத்திரமாக வில்லனாக வரும் நவீன் சந்திரா கதாபாத்திரம் சரியாகக் கட்டமைக்கப்படவில்லை.
விவேக் மெர்வின் இசையில் பாடல்கள் எதுவும் மனதில் பதியவோ, கொண்டாடப்படும் அளவுக்கோ இல்லை. அறிவு எழுதி, பாடியுள்ள 'மவனே' பாடல் மட்டும் ரசிக்க வைக்கிறது. பின்னணி இசை பரவாயில்லை. ஓம் பிரகாஷின் ஒளிப்பதிவு ரம்மியமாக இருக்கிறது.
அடிமுறைக் கலையைப் பற்றி எடுத்துக்கொண்ட இயக்குநர் ஆர். எஸ்.துரை செந்தில்குமார், அதை இயல்பாகக் காட்சிப்படுத்தியிருந்தாலே நன்றாக இருக்கும். ஆனால், கமர்ஷியலுக்காக சில மாஸ் விஷயங்களைச் சேர்த்ததில், இயல்பும் அடிபட்டுப்போய், மாஸும் எடுபடாமல் நிற்கிறது.
ஒரு பஞ்ச் வசனத்தைத் தவிர, தனுஷ் ரசிகர்கள் கொண்டாடும் படியான வசனங்களோ, பாடல்களோ பெரிதாக அமையவில்லை. ஆனாலும் தமிழர்கள் கண்டுபிடித்த அடிமுறைக் கலையில் இருந்துதான் கராத்தே, ஜூடோ உள்ளிட்ட பிற தற்காப்புக் கலைகள் தோன்றின என்ற விஷயத்தைத் தமிழர் திருநாளில் தமிழனுக்கு நினைவுபடுத்தியிருக்கிறது 'பட்டாஸ்'. மொத்தத்தில் பட்டாஸ் ஓரளவு வெடித்துள்ளது. • ஆங்காங்கே புகைத்தும் உள்ளது எனலாம்.








அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து....







## பொங்கலோ பொங்கல்

தென்கிழக்குப் பகுதியிலுள்ள தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் இம்முறை தைப்பொங்கல் வெகுகுதூகலமாகக் கொண்டாடப்பட்டது. இல்லங்களிலெல்லாம் பொங்கல் இடம்பெற்றதுடன் பொங்கல் தினமன்று ஆலயங்களில் சிறப்புப் பூசை வழிபாடுகளும் இடம் பெற்றன.

அதேவேளை பிரதேச விளையாட்டுக்கழகங்கள், இந்து இளைஞர்மன்றங்கள்போன்றவைபாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகளுடன் கூடிய பொங்கல் விழாக்களையும்சிறப்புறநடத்தின.கல்முனைபிராந்திய தமிழ் இளைஞர் சேனை மூன்றாவது தடவையாகவும் கல்முனை ஐக்கிய சதுக்கத்தில் பொங்கல் விழாவை வெகு சிறப்பாக நடத்தியது. அதேவேளை கிழக்கு மாகாண ரீதியிலான பொங்கல் விழா எதிர்வரும் 22ஆம் திகதி நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவில் நடைபெறவிருக்கின்றது.

**உழவர் திருநாள் உலகப் பொதுவிழா**

## கொடியேற்று விழா



கிழக்கிலங்கை பிரசித்தி பெற்ற கல்முனை கடற்கரைப் பள்ளிவாசலின் 198ஆவது வருடாந்த கொடியேற்றுவிழா எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ளது. கல்முனை நாகூர் ஆண்டகை தர்காவில் இடம்பெறும் இந்தக்கொடியேற்றுவிழாவையொட்டி 12 தினங்களும் விசேட மார்க்க சொற்பொழிவுகள் பக்கீர்ஜமா அத்தினரின் ராத்திரிபு மஜ்லிஸ் என்பன இடம்பெறவிருப்பதுடன் பெப்ரவரி 6ஆம் திகதி கொடி இறக்குதல், விசேட துஆ பிரார்த்தனை, அன்னதானம் வழங்கல் என்பவற்றுடன் கொடியேற்று விழா நிறைவுபெறும்.

**தமிழ் - முஸ்லிம் நல்லுறவு களமாக அமையும் பெருவிழா**



## திடீர் வீழ்ச்சி

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் நெல் விலை திடீர் வீழ்ச்சி கண்டுள்ளது என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். 66 கிலோ கொண்ட ஒரு மூடை நெல்லின் விலை அண்மைக்காலம் வரை நான்காயிரம் ரூபா வரை உயர்ந்திருந்தபோதிலும் தற்சமயம் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் ஒரு மூடை மூவாயிரம் ரூபாவை விடவும் வீழ்ச்சி கண்டுள்ளது.

தனியார் நெல் வியாபாரிகளும் அரிசி ஆலை உரிமையாளர்களதும் திட்டமிட்ட செயற்பாடே இந்த நெல் விலை வீழ்ச்சிக்குக் காரணமெனக் கூறப்படும் அதேவேளை உத்தரவாத விலையில் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய அரசு உடன் ஆவன செய்ய வேண்டும் எனவும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

**சந்தர்ப்பவாத சூழ்ச்சி இது.**



## வறிய மாணவர்களுக்கு பாதணிகள்

கல்முனை நகர லயன்ஸ் கழகம், சர்வதேச லயன்ஸ் கழக ஸ்தாபகர் மெல்வின் ஜோனின் பிறந்த தினத்தையொட்டி வறிய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு ஒன்றை கல்முனை மணற்சேனை விபுலானந்தா வித்தியாலயத்தில் நடத்தியது. கல்முனை நகர லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். அரசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேற்படி பாடசாலையைச் சேர்ந்த 35 வறிய மாணவ, மாணவியர்களுக்குப் பாதணிகள் கழகத்தால் வழங்கப்பட்டன.

**சேவை ஒன்றே நோக்கு**




## வருடாந்த பொதுக்கூட்டம்

கல்முனை அரச ஊழியர் பொதுச்சேவைகள் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஓய்வுநிலை அதிபர் ஆர். தர்மலிங்கம் தலைமையில் கழக மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் வேதநாயகம் ஜெகதீஸன் பிரதம அதிதியாகவும் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

கல்முனையில் ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்டதும் சுமார் 74 வருட கால வரலாற்றைக் கொண்டதுமான இக்கழகத்தின் மனிதநேய செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை" என மேலதிக மாவட்டச் செயலர் கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார். வறிய பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் கூட்டத்தின் போது வழங்கப்பட்டன.

**அரச சேவையாளர் கௌரவம் காப்போம்**



## டிஜிட்டல் தராசு

கல்முனை மாநகர சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள அனைத்து இறைச்சிக்கடைகளிலும் கட்டாயம் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் என கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். அத்துடன் குறித்த கசாப்புக்கடைகளின் சுத்தம், சுகாதாரம் கண்டிப்பாகப் பேணப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ள மேயர் றகீப் குறித்த விதிமுறைகளை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாநகர சபையால் வழங்கப்படும் வியாபார அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

**கசாப்புக்கடைக்காரர்களே கவனம்!**

## தாராளம்!

இலங்கையின் நெல் உற்பத்தியில் முக்கிய மாவட்டமாகத் திகழும் அம்பாறை மாவட்டத்தின் நெற்செய்கைக்கு முக்கிய நீர்ப்பாசனம் வழங்கும் சேனநாயக்க சமுத்திரத்தின் நீர் மட்டம் 611600 ஏக்கரடியாக தற்சமயம் உயர்ந்துள்ளதாக அம்பாறை மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுதத்கமகே தெரிவித்தார்.

கடந்த இடைப்போக நெற்செய்கையின்போது இந்தச் சமுத்திரத்தின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்திருந்த போதிலும் அண்மைய அடைமழையைத்தொடர்ந்து எதிர்பாராத அளவு நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது என தெரிவித்த அவர் நீர் தாராளமாக உள்ளபோதிலும் எதிர்வரும் போக நெற்செய்கையின்போது வீண்விரயங்களைத் தவிர்த்து சிறந்த நீர் முகாமைத்துவத்துடன் பாசன நீர் வழங்கப்படுமெனவும் கூறினார்.

**புதிதாகப் பதவியேற்ற உங்கள் ராசிதான்**

## மேடம்

பெரும்பான்மையான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். உறவினரின் ஆதரவு ஊக்கம் தரும். சமூகப் பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பிள்ளைகளின் சொல்லும், செயலும் பெற்றோருக்கு பெருமை சேர்க்கும். எதிரியால் உருவான தொந்தரவு குறையும். குடும்பநலன் சிறக்க மனைவி தேவையான பணி மேற்கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி, பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பருக்கும் உதவுவர்..

## இடபம்

நவக்கிரகங்களில் சந்திரனால் நன்மை உண்டாகும். பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்றுவது நல்லது. உடன் பிறந்தவர்கள் அன்பு பாராட்டுவர். பெற்றோரின் வழிகாட்டுதலால் பிள்ளைகள் நற்பலனைப் பெறுவர். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். வழக்கு, விவகாரத்தில் மாற்று வழியை பின்பற்றினால் தீர்வு கிடைக்கும். மனைவியிடம் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. தொழில். வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் புதிய பயிற்சி பெறுவர்.

## மிதுனம்

நண்பர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பயணம் எளிதாக அமையும். பிள்ளைகள் படிப்பு, வேலைத் திறன்களை வளர்த்துக் கொள்வர். வழக்கு, விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி அதிக அன்பு, பாசம் கொள்வார். குடும்பத்தில் சுப நிகழ்வு கைகூடும். உறவினரின் வருகை மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரம் செழிக்கும். கூடுதல் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, சலுகை பெறுவர். பெண்கள் வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

## கடகம்

கேது, சனீஸ்வரர், சுக்கிரன், சந்திரன் சிறப்பான பலன் தருவர். பேச்சில் நிதானம் தேவை. உடன்பிறந்தவர்களால் உதவி உண்டு. குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். வெளியூர் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகள் சில செயல்களில் பிடிவாதம் கொள்வர். சத்தான உணவுகளை உண்டு மகிழ்வீர்கள். மனைவியின் செயல்களை பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டங்களை தவறாமல் பின்பற்றவும். பிள்ளைகள் நலனில் பெண்கள் அக்கறை கொள்வர். மாணவர்கள் கவனமாக படித்து அதிக மதிப்பெண் பெறுவர்.

## சிம்மம்

சூரியன், புதன், ராகு, குருவினால் கூடுதல் பலன் கிடைக்கும். பணி நிறைவின் மூலம் புதிய அனுபவம் கிடைக்கும். உடன் பிறந்தவர்கள் ஒற்றுமையுடன் உதவுவர். வாகன பயன்பாடு சீராக இருக்கும். பூர்வ சொத்தை கவனிப்பதற்கு நம்பகமானவர்களை பணியமர்த்தினால் நல்லது. பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவதால் மகிழ்ச்சி அடைவர். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள். மனைவிக்கு விரும்பிய பொருளை வாங்கித்தருவீர்கள். தொழிற்சாலை பணியாளர்கள் பாதுகாப்பை பின்பற்றவும். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பரின் உதவி கிடைக்கும்.

## கன்னி

செவ்வாய், சந்திரன் நன்மை தருவர். அபார திறமையினால் புதிய முயற்சி நிறைவேறும். புகழ், பணவரவு அதிகரிக்கும். இஷ்ட தெய்வ அருள் கிடைக்கும். வாகன பராமரிப்பு செலவு கூடும். பிள்ளைகளின் படிப்பு, வேலைத்திறன் மேம்பட உதவுவீர்கள். உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படும். உறவினர் குடும்ப விவகாரங்களை மனைவியிடம் பேச வேண்டாம். தொழிலில் இடையூறுகளை சரி செய்வதால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டங்களை தவறாமல் பின்பற்றவும். ஆசிரியரின் அறிவுரையால் மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.



# இந்த வார ராசிபலன்

**19.01.2020 முதல் 25.01.2020 வரை**

## துலாம்

சுக்கிரன், புதன், சனீஸ்வரர், கேது அனுகூல அமர்வில் உள்ளனர். புதிய நிகழ்வுகள் நன்மை தரும். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். வெளியூர் பயணத்தால் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். பிள்ளைகள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவர். பூர்வ சொத்தில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். முக்கிய தருணங்களில் மனைவியின் ஆலோசனை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். மாணவர்கள் அயராது படித்து பாராட்டு பெறுவர்.

## விருச்சிகம்

சூரியன், குரு, சுக்கிரன், சந்திரன் சுப பலன் தருவர். பேச்சில் நிதானம், தெளிவு இருக்கும். எதிர்பாராத நன்மை கிடைக்கும். தாய் வழி உறவினர் அன்பு, பாசம் கொள்வர். பிள்ளைகள் பெற்றோரிடம் நண்பர்களாக பழகுவர். ஆரோக்கியம் மேம்பட சத்தான உணவு, சீரான ஓய்வு அவசியம். மனைவியின் செயல் நிறைவேற உதவுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். அரசு சார்ந்த உதவி எளிதில் கிடைக்கும். பணியாளர்கள் இலக்கை முடித்து சலுகை பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவர். மாணவர்கள் அபார ஞாபகத்திறனால் படிப்பில் முன்னேறுவர்.

## தனுசு

சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். பணிகளை உத்வேகமாக தொடங்குவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமையை பாதுகாப்பது அவசியம்.
அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தரக் கூடாது. பிள்ளைகளின் குறைகளை இதமான அணுகுமுறையால் சரி செய்யவும். வழக்கு, விவகாரத்தில் தீர்வு பெற நல்ல வாய்ப்பு வரும். மனைவியின் உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு சீராக கிடைக்கும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிவது அவசியமாகும். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பை ஏற்க வேண்டாம்.

## மகரம்

செவ்வாய், சுக்கிரன், ராகு, சந்திரனால் யோகம் உண்டாகும். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். புதியவர்களின் நட்பு கிடைக்கும். தாய் வழி சார்ந்த சொத்து, பூர்வ புண்ணிய பலன் கிடைக்கும். பிள்ளைகளின் செயல் வியப்பு, மகிழ்ச்சி தரும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வழக்கு, விவகாரத்தில் சமரச தீர்வு கிடைக்கும். மனைவியின் அன்பு, பாசம் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் தாய் வீட்டுக்கு உதவுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## கும்பம்

குரு, சனீஸ்வரர், கேது, சுக்கிரன் நற்பலன் தருவர். பணிகளை மதி நுட்பத்துடன் நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தினர் அன்பு, பாசம் கொள்வர். சமூக நிகழ்வுகள் இனிய அனுபவம் தரும். வாகனப் பயன்பாடு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகள் பெற்றோரிடம் வெளிப்படை மனதுடன் பழகுவர். உடல் ஆரோக்கியம் சீராக சிகிச்சை தேவைப்படும். மனைவி கருத்து இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகரமாக இருக்கும். சேமிப்பு பணம் செலவாகும். பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். மாணவர்கள் கலைகளை விரும்பி பயில்வர்.

## மீனம்

சூரியன், புதன், சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டாகும். பொது இடங்களில் நண்பர்களிடம் நிதானித்து பேசுவீர்கள். செயல்களில் முன்னேற்றம் ஏற்படும். தாய் வழி உறவினர் தாமாக முன்வந்து உதவுவர். பிள்ளைகளின் செயல் நிறைவேற தெய்வ அருள் துணை நிற்கும். குடும்பத்தில் வெகுநாள் பிரச்சினைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். மனைவியின் செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு கூடும். பணியாளர்கள் சிறப்பாக பணி புரிந்து பாராட்டு பெறுவர். உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த பெண்கள் உதவுவர். மாணவர்கள் படிப்பில் அதிக மதிப்பெண் பெறுவர்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 604

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| | ■ | 9 | | | 10 | | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | ■ | 19 | |
| | ■ | 20 | | | 21 | | |
| ■ | 22 | | | ■ | 23 | | |

**அனுப்புபவர் பெயர்:.............................................**

**முழுமையான தபால் விலாசம்: .................................**

**...........................................................................**

**கையொப்பம்:......................................................**

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப் போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. செருக்கு
6. மாணவர்களுக்கு இது வாங்கினால் மகிழ்ச்சியே.
7. ஒருதிசையின்குறுகியசொல்
8. ஒரு குறி
9. ஒரு பிரபந்த வகை
11. சாமன்யன்
13. வேகம்
14. ரகம்
15. தாயிடம் குடிப்பது
17. சிரசு
18. தாண்டு
19. வடிவம்
20. வியாபாரத்துக்கு இது தேவை.
22. வேகம்
23. ஒரு விளக்கு வகை

### மேலிருந்து கீழ்

1. நிகழக் கூடாதது.
2. எரிந்த பின் மிஞ்சுவது
3. புலவன்
4. ஒரு கயிறு வகை
5. விடாய்
8. சேறு
9. கை
10. வெளிச்ச வேளை
12. சிறு பிள்ளை
15. படிப்பது இதனை
16. ஒரு தாவரம்
18. திருட்டு
19. பசளை
21. முக்கனிகளில் ஒன்று

**சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 602 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

இடமிருந்து வலம்
(1) சமுத்திரம் (6)தாடை (7)கைம் (8)சோலை (9)தர்ப்பை (10) தவி (11)வேல் (12) பனை (14) ஓசை (16) விநாயகர் (19)வீதி (20)கல்வி (21) விரல் (22)நாம் (23)தைமாதம்

மேலிருந்து கீழ்
(1) சதா (2)முடைதல் (3) திகைப்பு (4)ரம்பை (5) தலைவி (8) சோதனை (11)வேள்வி (12)பசை (13) கயல் (14) ஓர் (15)மதில் (17) நாகம் (18)கவிதை (19)வீரம் (21) வித

### பாராட்டுப் பெறுவோர்

லக்ஸ்மன் கபிஷா,
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

இ.விக்னேஸ்வரி,
கைதடி கிழக்கு,
கைதடி.

திருமதி ஆர்.எம் தயானந்தன்,
15ஆம் கட்டையடி,
உடுப்பிட்டி

சொற்சிலம்பம் போட்டி 602 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி, தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள இயலும். போட்டியில் கலந்துகொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் **குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.**

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில்கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றிபெறும்முதல்ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.604**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (29.01.2020 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.604 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 02.02.2020 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:** 602 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ஜெ.காயத்திரி,
இல.57, 2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா.

**2 ஆம் பரிசு**
சி.எலிசபெத்,
4ஆம் வட்டாரம், வங்காலை,
மன்னார்..

**3 ஆம் பரிசு**
குணராசா விஜிதன்,
6.ஆம் வட்டாரம்,
குமுழமுனை, முள்ளியவளை.

**4 ஆம் பரிசு**
வே.கோகிலன்,
நாவற்காடு,
வரணி.

**5 ஆம் பரிசு**
து.மாணிக்கவாசகர்,
வேம்பன் வீதி,
உரும்பராய் தெற்கு, உரும்பராய்.



# ஓர் இளவரசனின் வருகை...

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அவர் விடுதலை செய்யப்பட்ட பின்பு முன்பை விட வேகமாக இனக்குரோத பிரசாரங்களை மேற்கொண்டார்.

**அன்று தர்மபால**
**இன்று அவர் வழியினர்**

எனினும் 1915இன் கலவரத்தின் காரணமாகப் பெருமளவு முஸ்லிம்களின் வர்த்தகம் சிங்களவரால் கைப்பற்றப்பட்டன. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் கைமாறியதுடன் மலையாள முஸ்லிம்கள் தங்கள் வியாபாரங்களைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினர். எப்படியிருந்த போதிலும் அது இனக் கலவரம் என்றாலும்கூட அதன் விளைவு முஸ்லிம்களின் வர்த்தக ஆதிக்கம் சிங்களவர்களால் கைப்பற்றப்பட்டு விட்டதென்பதே உண்மையாகும்.

1915ஆம் ஆண்டில் சிங்களவர்கள் பெரும்பான்மையினர் என்ற ஒரே வலிமையைக் கொண்டு இன அழிப்பையும் வன்முறைகளையும் கையிலெடுத்து வர்த்தக ஆதிக்கத்தைக் கைப்பற்றினர் என்பது முக்கிய விடயமாகும். அதன் அடிப்படையில் தூய பௌத்த சிங்கள தேசம் என்ற அநகாரிக தர்மபாலவின் இலட்சியத்தின் ஒரு பகுதியாகவே நிறைவேற்றப்பட்டது.

1915ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைக்கு பௌத்தத் துறவியான அநகாரிக தர்மபால தார்மீகத் தலைமையாக விளங்கினாரோ அவ்வாறே 2015ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதிகளில் தொடர்ச்சியாக நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டமை, முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் தாக்கியழிக்கப்பட்டமை, பேருவளை அளுத்கம பகுதிகளில் முஸ்லிம் மக்கள் மேல் நடத்தப்பட்ட கொலை, கொள்ளை உட்பட்ட இனக்குரோத வன்முறைகள், அம்பாறை, கண்டி ஆகிய பகுதிகளின் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் பொதுபலசேன, சிஹல உறுமய, இராவணபலய போன்ற பௌத்த தேரர்களின் வழிகாட்டலிலேயே இடம்பெற்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலையடுத்து வடமேல் மாகாணத்தில் பல இடங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதற்கும் அத்துரலிய ரத்னதேரர், ஞானசாரதேரர் போன்றவர்களே நெறிப்படுத்தினர் என்பதும் உண்மை.

1958ஆம் ஆண்டில் பண்டா- செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறிய வைப்பதில் பிரதான பாத்திரம் வகித்ததும் 1958, 1977, 1983 தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு வன்முறைகளில் பௌத்த பிக்குகள் முன்னின்று செயற்பட்டனர் என்பதையும் மறந்துவிட முடியாது.

இவ்வாறு முஸ்லிம் மக்களுக்கும் தமிழ்மக்களுக்கும் எதிராக இந்த நாடு அனைவருக்கும் சொந்தமானது என்ற கருத்தை எதிர்த்த தர்மபாலவின் இலட்சியத்தின்படி பௌத்த குருமாரால் இனவிரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதையே மஹிந்த ராஜபக் ஷ ஆட்சி மாற்றத்துக்கு பௌத்த சங்க சபையினர் தலைமையேற்று வரலாற்றுச் சிறப்பு மிக்க பெறுப்பை உச்ச அளவில் நிறைவேற்றியுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே தமிழ் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளில் முன்னின்று செயற்பட்டு அந்த இனங்களின் மீதான வெறுப்புணர்வைச் சிங்கள மக்கள் மத்தியில் வலுப்படுத்திய பௌத்த அமைப்புக்கள் ஏப்ரல் 21 தாக்குதலுடன் சிங்கள பௌத்த நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து வந்துவிட்டதெனவும் நாட்டைப் பாதுகாக்கும் தலைவராக கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கும்படியும் பிரசாரம் செய்து உச்சளவில் செயற்பட்டனர்.

அதாவது அநகாரிக தர்மபால எதிர்பார்த்த இளவரசனாக இன்று கோத்தாபய ராஜபக்ஷவை ஆட்சி பீடத்தில் ஏற்றியுள்ளனர். இந்த இளவரசனின் வருகையானது தூய பௌத்த சிங்கள நாட்டை இலட்சியமாகக் கொண்டது என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகவே தெரிய ஆரம்பித்துவிட்டன. ■




# நித்திய சுகம் 453

உடலே கோயில்

# மருத்துவரை சந்திக்கும்போது...

சி. சிவன்சுதன்,
பொதுவைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.



நீங்கள் மருத்துவரைச் சந்திக்கும் பொழுது சில விடயங்களைத் தெரிந்து வைத்திருப்பீர்களாக இருந்தால் அது உங்களுக்கு மிகவும் பயனுடையதாக இருப்பதுடன் அநாவசிய தாமதம் அலைச்சல், செலவு என்பவற்றைக் குறைத்துக் கொள்ளவும் உறுதுணையாக இருக்கும்.

உங்கள் மருத்துவம் சம்பந்தமான குறிப்புகள், துண்டுகள், சோதனை முடிவுகள் அனைத்தையும் ஒரு கோப்பில் அல்லது பை ஒன்றில் போட்டுப் பாதுகாப்பாக வைத்திருங்கள். வைத்தியரைச் சந்திக்கச் செல்லும் பொழுது அவை அனைத்தையும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். அவை உங்களுக்குப் பொருத்த மான மருத்துவப் பராமரிப்பைத் தீர்மானிப்பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். இவற்றை எடுத்துச் செல்ல நீங்கள் தவறினால் உங்களுக்குப் பொருத்தமான சிகிச்சையை ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படலாம். சில முக்கியமான ஆவணங்களை நிழற்படப் பிரதி எடுத்து வைத்துக் கொள்வது உங்கள் மருத்துவத் தகவல்கள் தொலையும் சந்தர்ப்பங்களில் மிகவும் பயனுடையதாக அமையும்.

* * *

வைத்தியர் சோதிக்கும் கருவியை (ஸ்ரெதஸ்கோப்) காதில் மாட்டியிருக்கும் பொழுது அவருடன் பேசுவதைத் தவிர்த்தல் வேண்டும். காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் கதைப்பது வைத்தியருக்கு கேட்காது. நீங்கள் கதைத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்தக் கருவியினால் உங்களைச் சோதித்துப்பார்ப்பதும் கடினமாக இருக்கும். எனவே வைத்தியர் காதில் 'ஸ்ரெதஸ்கோப்' மாட்டியிருக்கும் நேரத்தில் வைத்தியருடன் கதைப்பதைத் தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்.

உங்களுடைய நோய் நிலை சம்பந்தமாக நீங்களே வைத்தியருக்கு விவரிப்பது நல்லது. உங்களுக்கு இருக்கும் உண்மையான சரியான அறிகுறிகளை உங்களால் மட்டுமே முழுமையாக விவரிக்க முடியும். அதாவது ஒரு நோயாளியின் நோய் நிலை சம்பந்தமாக அவரின் குடும்ப உறுப்பினர்கள் விவரிப்பதிலும் பார்க்க அந்த நோயாளியே நேரடியாக வைத்தியருக்குச் சொல்வது சிறந்தது. நோயாளிக்குப் பேசும் ஆற்றலில் அல்லது சிந்திக்கும் ஆற்றலில் தடுமாற்றங்கள் இருந்தால் அல்லது மயக்க நிலை வலிப்புநிலை ஏற்பட்டால் குடும்ப உறுப்பினர்கள் அவரின் நிலை சம்பந்தமாக விவரிக்க வேண்டிய தேவை ஏற்படலாம்.

நீங்கள் பாவித்துக் கொண்டிருக்கும் மாத்திரைகளின் பெயர்களை அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். மாத்திரைகளின் நிறத்தையும் வடிவத்தையும் சொல்லி அதனை அடையாளப்படுத்த முனைவது சில சமயம் ஆபத்திலும் முடியலாம். ஒவ்வொரு வகையான மாத்திரைகளும் பல்வேறுபட்ட வடிவங்களிலும் நிறங்களிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே நீங்கள் குறிப்பிடும் வடிவத்தையும் நிறத்தையும் வைத்து நீங்கள் என்ன மாத்திரை பாவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை வைத்தியரினால் கண்டறிவது சிரமம் எனவே ஒவ்வொருவரும் தாம் பாவிக்கும் மாத்திரைகளின் பெயர்களைத் தெரிந்து வைத்திருப்பது மிகவும் பயனுடையதாகும்.

வைத்தியரைச் சந்திக்கும்போது உங்கள் நோய்நிலை சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். உதாரணமாக உங்களுக்கு என்ன நோய்கள் இருக்கின்றன உங்கள் குருதி அமுக்கம் எவ்வளவு? ஒவ்வொரு மாத்திரைகளும் எதற்காக தரப்படுகின்றன? அவற்றின் பெயர் என்ன? செய்யப்பட்ட சோதனையின் முடிவு என்ன? உங்கள் உணவு முறை எப்படி அமையவேண்டும்? நீங்கள் என்ன வகையான உடற்பயிற்சிகள் செய்ய முடியும்? போன்ற வினாக்களுக்கான விடைகளைத் தெரிந்து கொள்வது உங்களது உரிமையும் கடமையுமாகும்.

* * *

வைத்தியரைச் சந்திக்கச் செல்லும் போது எந்த நோய் நிலைக்காக வைத்தியரைச் சந்திக்கச் செல்கிறீர்களோ அந்த நோயுடன் தொடர்புடைய வைத்தியரைச் சந்தித்துச் சிகிச்சை பெற்றுக் கொள்வது சிறந்தது. சிறிய மருத்துவப் பிரச்சினைகளுக்கும் மருத்துவ நிபுணரைச் சந்திக்க வேண்டும் என்ற அவசியமில்லை. உங்கள் வீட்டின் அருகில் உள்ள அரசாங்க வைத்தியசாலையில் வைத்தியரைச் சந்தியுங்கள். தேவை ஏற்பட்டின் மேலதிக சிகிச்சைக்கான ஒழுங்குகளை அந்த வைத்தியர் செய்து தருவார்.

உங்கள் நோய் நிலை சம்பந்தமாக உங்களுக்கு ஏதாவது சந்தேகம் அல்லது பயம் அல்லது நேரடியாக வைத்தியருடன் கதைப்பதில் தயக்கம் இருப்பின் உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்வது நல்லது. நீங்கள் ஒவ்வொரு தடவையும் வைத்தியரைச் சந்திக்கச் செல்லும் போதும் அதே உதவியாளரை அழைத்துச் செல்வது நல்லது. வைத்தியர் கூறும் மருந்துகளைப் பாவிப்பதற்கு உங்களுக்கு விருப்பமில்லையானால் நீங்கள் அதனை வைத்தியரிடம் தெரிவித்து அதற்கான மாற்று வழிகளை அறிந்துகொள்ள முடியும்.

வைத்தியர் கூறும் சிகிச்சை முறைகளையும் ஆலோசனைகளையும் ஏற்றுக் கொள்வது உங்களுக்கு கஷ்டமாக இருந்தால் அதனைத் திறந்த மனத்துடன் வைத்தியருக்கு நீங்கள் தெரியப்படுத்த முடியும்.

வைத்தியர் உங்களுக்கு கூறுவது ஆலோசனையே தவிர உத்தரவு அல்ல. உங்களுடைய விருப்பத்துக்கு அமைவாகவும் உங்களின் அனுமதியுடன் மட்டுமே சிகிச்சை முறை இறுதியில் வடிவமைக்கப்படும். எனவே வைத்தியரின் ஆலோசனையைக் கேட்ட பின் உங்களது விருப்பத்தையும் தீர்மானத்தையும் வைத்தியருக்குத் தெரியப்படுத்துவது உங்களது உரிமையும் கடமையும் ஆகும்.

* * *

வைத்தியர் பரிந்துரைக்காத மருந்துகளைப் பாவித்தல் கூடாது. அத்துடன் மருந்துகளை மருந்தகங்களில் வாங்கும் போது அதனைப் பாவிக்கும் முறை பற்றியும் கேட்டறிதல் வேண்டும். மருந்து காலாவதியாகும் திகதியையும் பார்த்து வாங்குதல் வேண்டும்.


ஒருவருக்குச் சிக்கலான நோய்நிலை ஒன்று ஏற்பட்டுவிட்டால் அவரின் உண்மையான உடல்நிலையையும் அவருக்கு ஏற்படக்கூடிய மற்றைய பாதிப்புக்களையும் அந்த நோயாளிக்குத் தெரியப்படுத்தவேண்டிய கடமை ஒவ்வொரு மருத்துவருக்கும் இருக்கிறது.

ஆனால் கடுமையான நோய்நிலை சம்பந்தமாக நோயாளிக்குத் தெரியப்படுத்துவதில் சிக்கல்களும் இருக்கின்றன. ஆகவே நோயாளியின் மன நிலையையும் பொருத்தமான தருணத்தையும் அறிந்து நோயாளிக்கு அல்லது நோயாளியின் நெருங்கிய உறவினர்களுக்கு இதுபற்றி வைத்தியரால் கூறப்படும். உங்களது மருத்துவ நிலை சம்பந்தமான பூரணமான நிலைமையைத் தெரிந்து கொள்ள நீங்கள் விரும்பப்படாதவிடத்து அதனை வைத்தியருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

உங்களுக்கு இருக்கும் அறிகுறிகளைக் கூட்டியோ, மறைத்தோ அல்லது குறைத்தோ வைத்தியருக்குத் தெரியப்படுத்தினால் அது உங்களுக்கான வைத்திய முறையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். எனவே வைத்தியரை உங்கள் நண்பராகக் கருதி உண்மை நிலையை அவருக்குத் தெரியப்படுத்துவது நல்லது. உங்களது மருத்துவத் தகவல்களின் இரகசியத் தன்மை எப்பொழுதும் வைத்தியர்களால் பேணப்படும்.

> **வைத்தியர் உங்களுக்கு கூறுவது ஆலோசனையே தவிர உத்தரவு அல்ல. உங்களுடைய விருப்பத்துக்கு அமைவாகவும் உங்களின் அனுமதியுடன் மட்டுமே சிகிச்சை முறை இறுதியில் வடிவமைக்கப்படும். எனவே வைத்தியரின் ஆலோசனையைக் கேட்டபின் உங்களது விருப்பத்தையும் தீர்மானத்தையும் வைத்தியருக்குத் தெரியப்படுத்துவது உங்களது உரிமையும் கடமையும் ஆகும்.**

# 26 ஜனவரி 2020 இறைவார்த்தை ஞாயிறு



அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக வருகை விரிவுரையாளர்,*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*

2020ஆம் ஆண்டின் பொதுக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு தினமான ஜனவரி 26ஆம் திகதியை இறைவார்த்தை ஞாயிறாகத் திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார். அதுதொடர்பில் இந்தக் கட்டுரை பேசுகின்றது.

திருத்தந்தை பிரான்சிஸ் இந்த இறைவார்த்தை ஞாயிறு பற்றிய அறிவிப்பை 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி அப்பறுயிற் இல்லிஸ் என்ற தலைப்பில் இலத்தீன் மொழியில் தன் சொந்த விருப்பத்தின் பேரில் வெளியிட்ட திருத்தூது மடல் ஊடாக அறிவித்தார். ஜனவரி 26ஆம் திகதி சிறப்பிக்கப்படும் இந்த இறைவார்த்தை ஞாயிறு வழியாக கடவுள் மற்றும் அவரது வார்த்தை மீது ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி அன்புசெலுத்தி பிரமாணிக்கத்துடன் சாட்சி பகர நமக்கு அழைப்பு விடுக்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். உலகின் அனைத்து மறைமாவட்டங்களும், பங்குத்தளங்களும் இறைவார்த்தை ஞாயிறை மிகுந்த படைப்பாற்றலுடனும் புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளுடனும் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**மறைநூலை அறியாதவர்**
**கிறிஸ்துவை அறியாதவர்**

இந்த இறைவார்த்தை ஞாயிறுபற்றி பேசியுள்ள புதிய வழி நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவைத் தலைவர் பேராயர் ரீனோ பிசிக்கெல்லா, இறைவார்த்தையைக் கொண்டாடி அதை ஆழ்ந்து படித்து உள்வாங்கி பரப்புவதற்கென அர்ப்பணிக்கப்பட்ட இந்த சிறப்பான நாள் நம் வாழ்வில் இறைவார்த்தை எவ்வளவு முக்கியம் என்பதை உணர்வதற்கு உதவுகின்றது. உலகில் அதிகம் விநியோகம் செய்யப்பட்டுள்ள நூலே திருவிவிலியம் எனவும் இந்த நூல் நம் கைகளில் இல்லாததால் அது நன்கு பத்திரப்படுத்தப்பட்டு தூசு படிந்துள்ளதாக உள்ளது என்றும் கூறியுள்ளார்.

திருவிவிலியத்தின் பெரும்பகுதியை இலத்தீனில் மொழி பெயர்த்த புனித ஜெரோம், இறைபதம் அடைந்ததன் ஆயிரத்து 600ஆம் ஆண்டு நிறைவு 2019ஆம் ஆண்டில் நினைவுகூரப்பட்டது. மறைநூலை அறியாதவர் கிறிஸ்துவை அறியாதவர் என்று சொன்னவர் புனித ஜெரோம். 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் பதிவின்படி விவிலியம் முழுவதும் 698 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதோடு புதிய ஏற்பாடு மட்டும் ஆயிரத்து 548 மொழிகளிலும் விவிலியத்தின் சில பகுதிகள் அல்லது கதைகள் மேலும் ஆயிரத்து 138 மொழிகளிலும் விவிலியத்தின் சிலபகுதிகள் குறைந்தது 3 ஆயிரத்து 385 மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.




**இறைவார்த்தை ஞாயிறு பற்றி**
**திருத்தந்தையின் திருத்தூது மடல்**

திருத்தந்தை பிரான்சிஸ், இறைவார்த்தை ஞாயிறுபற்றி தாம் வெளியிட்ட திருத்தூது மடலை ஆண்டவர் இயேசு உயிர்த்த பின்னர் விண்ணேற்ப டைவதற்கு முன்னர் செய்த மிக முக்கியச் செயலில் இருந்து ஆரம்பிக்கிறார். தமது சீடர்கள் திருமறை நூலை நடந்த சம்பவங்களின் அடிப்படையில் இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ள அவர்கள்முன் தோன்றி அப்பத்தை பிட்டு இறைவார்த்தையை புரிந்து கொள்ளுமாறு அவர்களின் மனங்களைத் திறக்கிறார் என தெரிவிக்கும் திருத்தந்தை, ஆண்டவர் இல்லாமல் மறைநூலின் ஆழத்தை புரிந்து கொள்ள முடியாது என்பதை மறைநூலை அறியாதவர் கிறிஸ்துவை அறியாதவர் என்று சொன்ன புனித ஜெரோமின் வார்த்தைகளை அடிப்படையாக்கி விளக்குகிறார். திருத்தந்தை பிரான்சிஸ் இறைவார்த்தை ஞாயிறு பற்றிய திருத்தூது மடலை பின்வருமாறு தொடக்குகிறார்.

அப்போது மறைநூலை புரிந்து கொள்ளுமாறு அவர்களுடைய மனக்கண்களைத் திறந்தார். (லூக்கா 24:45). உயிர்த்தெழுந்த ஆண்டவர் தமது விண்ணேற்பிற்கு முன்னதாக புரிந்த இறுதி செயல்களில் இதுவும் ஒன்றாகும். ஒன்று கூடிய சீடர்களுக்கு இயேசு தோன்றி அவர்களுடன் அப்பத்தை பிட்டு இறைவார்த்தையை புரிந்து கொள்ளுமாறு அவர்களின் மனங்களைத் திறந்தார். அவர் அவர்களிடம் மெசியா துன்புற்று இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும் பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள் எனவும் (லூக்கா 24: 26, 46-47) அவர்களுடைய அங்கலாய்ப்பிலும் அச்சத்தின் மத்தியிலும் பஸ்காவின் மறைபொருளின் அர்த்தத்தை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். மீட்பின் மறைபொருளுக்கு சாட்சியம் பகர, வல்லமையை அளிக்கும் தூய ஆவியாரை அனுப்புவதாக அவர் வாக்களித்தார். (லூக்கா 24:49)

கிறிஸ்தவர்கள் என்னும் அடையாளத்தை நிலைநாட்ட உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கும் இறை நம்பிக்கையாளர் சமூகத்திற்கும் தூய மறைநூலுக்குமிடையிலான உறவு மிகவும் இன்றியமையாதது. எமது உள்ளத்தை திறக்கவல்ல ஆண்டவர் இல்லாமல் மறைநூலின் ஆழத்தை புரிந்துகொள்வது இயலாத காரியமாகும். இருப்பினும் அதன் எதிர்மறைக் கருத்தும் உண்மையானது மறைநூல் அல்லாமல், இயேசுவினதும் திருஅவையினதும், இவ்வுலகத்தின் பணியின் நிகழ்வுகள் புரிந்து கொள்ள முடியாததாகவே இருக்கும். ஆக திருவிவிலியத்தை அறியாமை கிறிஸ்துவை அறியாமை ஆகும் என புனித ஜெறோம் கோருவது பொருத்தமானதா கும். (எசாயா நூல் விளக்கவுரை முன்னுரை 24.17 பி)

**வார்த்தையின் புதையல்**

திருத்தந்தை பிரான்சிஸ் இறைவார்த்தை ஞாயிறுபற்றி தாம் வெளியிட்ட திருத்தூது மடலின் இலக்கம் இரண்டில் திருவழிபாட்டு ஆண்டின் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமையை இறை வார்த்தைக்கு அர்ப்பணிப்பது உயிர்த்த ஆண்டவர் தமது வார்த்தையின் புதையலை எமக்கு திறக்கி றது. இவ்வுலகின் முன்னே அளவிட முடியாத செல்வங்களை பறைசாற்றவும் திருஅவையை புத்துணர்வுடன் அனுபவிக்க வழி சமைக்கிறது என்கிறார்.

இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் நிறைவில் ஆண்டவருக்கும் அவர் மக்களுக்கும் இடையில் நடைபெறும் தொடர் உரையாடலாக விளங்கும் அளவுகடந்த செல்வங்களை மதிக்கும் இறைவார்த்தைக்கு ஒரு ஞாயிறு தினத்தை ஒதுக்கி முழுமையாக அர்ப்பணிக்குமாறு நான் பரிந்துரை செய்தேன். திருவழிபாட்டு ஆண்டின் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமையை இறை வார்த்தைக்கு அர்ப்பணிப்பது உயிர்த்த ஆண்டவர் தமது வார்த்தையின் புதையலை எமக்கு திறக்கவும் இவ்வுலகின் முன்னே அளவிட முடியாத செல்வங்களை பறைசாற்றவும் திருஅவையை புத்துணர்வுடன் அனுபவிக்க வழி சமைக்கிறது. புனித ஜேரோமின் போதனை இங்கே நமக்கு நினைவுறுத்தப்படுகின்றது. ஆண்டவரே உமது வார்த்தையில் ஒரு சொல்லினாவது அதன் முழுமையான செழுமையை யார்தான் புரிந்து கொள்ள முடியும்? நாங்கள் நீரூற்றிலிருந்து பருகும் மிகுந்த தாகமுடையவர்கள் போன்றவர்கள். உமது வார்த்தை அதனை கற்பவர்கள் கொண்டிருக்கும் பல கண்ணோட்டங்களைப் போன்று பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. ஆண்டவர் தம்முடைய வார்த்தையை பல வர்ண அழகினால் வர்ணம் பூசியுள்ளார். ஆதலால் அதனை கற்பவர்கள் தமது தூண்டுதலுக்கு ஏற்ப ஆழ்தியானம் செய்ய முடியும். அவருடைய வார்த்தையில் அனைத்து செல்வங்களையும் புதைத்துள்ளார். அதனால் நாம் ஒவ்வொருவரும், எம் ஆழ்தியானத்தில் அதன் செழுமையைக் காணமுடியும்.

**கடவுளுடைய வார்த்தை முக்கியமானது**

இம் மடலின் மூலம் இறைவார்த்தை ஞாயிறு தினத்தை முழு திருஅவையும் ஒன்றிணைந்து கொண்டாடும் நோக்கத்தை, இறைமக்கள் என்னிடம் வெளிப்படுத்திய பலகோரிக்கைகளுக்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன். கிறிஸ்தவ குழுமம் தம் அன்றாட வாழ்க்கைக்கு கடவுளுடைய வார்த்தை எவ்வாறு முக்கியமானது என்பதைப் பற்றி சிந்திக்க நேரத்தை ஒதுக்குவது இப்போது மிகவும் பொதுவானது. தங்கள் நம்பிக்கையாளருக்கு மறைநூல் கிடைக்கக்கூடியதாகவும் இந்த உன்னத கொடைக்கான நன்றியை அதிகரிப்பதற்கும் அதனது படிப்பினைகளுக்கு தனது அன்றாட வாழ்வில் உருகொடுத்து சான்று பகரவும் பல்வேறு தள திருஅவைகள் வளமுள்ள முனனெடுப்புக்களை மேற்கொண்டுள்ளன. என்றும் புதிதாக படித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமை வாய்ந்த ஏடாகிய இறைவெளிப்பாடு என்னும் கொள்கைத் திரட்டைக் கொண்டுள்ள இரண்டாம் வத்திக்கான் சங்கம் கடவுளுடைய வார்த்தையை மீளக் கண்டுபிடிக்க பேரார்வத்தைத் தந்துள்ளது. திருஅவையின் வாழ்விலும் பணியிலும் இறைவார்த்தை என்ற தலைப்பில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் 2008ஆம் ஆண்டில் ஆயர்களின் மாநாட்டைக் கூட்டினார்.

எமது திருஅவை குழுமங்களுக்கு அடிப்படையன போதனைகளைக் கொண்ட ஆண்டவரின் வார்த்தை என்ற திருத்தூது அறிவுரை ஏட்டினையும் வழங்கினார். இந்த ஏடானது அதாவது இறைவார்த்தையின் செயல் திறனுக்கு குறிப்பாக முக்கியத்துவம் அளிப்பதோடு சிறப்பாக வழிபாட்டு சூழமைவில் அதன் தனித்துவமான அருளடையாள பண்புகளையும் முன்னுரிமைபடுத்துகிறது. ஆண்டவர் தனது மணமகளுடன் பேசுவதில் ஒருபோதும் சோர்வடையாத அவர் அன்பிலும் உண்மையுள்ள சாட்சிகளிலும் வளரும்படி உயிருள்ள வார்த்தையுடனான இந்த தீர்க்கமான உறவால் எமது மக்களின் வாழ்க்கை தொடர்ந்து குறிக்கப்படுவது பொருத்தமானது.

**இறை வார்த்தையை எடுத்துரைப்போரை**
**பயிற்றுவிப்பது அவசியம்**

தொடரும் திருத்தந்தை பீடத்துணையாளர்கள் மற்றும் நற்கருணை பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பது ஏற்கனவே நடைமுறையில் இருப்பது போல நம்பிக்கையாளருக்கு இறை வார்த்தையை தகுதியான எடுத்துரைப்போரை பயிற்றுவிப்பது முக்கியமானது என்கிறார்.

இதன்விளைவாக, பொதுக்காலத்தின் மூன்றாவது ஞாயிறை இறைவார்த்தைக் கொண்டாட்டம், அதனைக் கற்றல் மற்றும் அதனை பரப்புதல் ஆகியவற்றிற்கு அர்ப்பணிக்கப்படும் என்று நான் அறிவிக்கிறேன். இவ் இறைவார்த்தை ஞாயிறு யூத மக்களுடன் எமது உறவை பலப்படுத்தவும், கிறிஸ்தவ ஒன்றிப்புக்காக மன்றாடவும் ஊக்குவிக்கும் காலமாக இவ்வாண்டின் பொருத்தமான காலமாக அமையும். இது காலப்போக்கில் ஒரு தற்காலிக நிகழ்விலும் மேலானது: இறைவார்த்தை ஞாயிறு கொண்டாட்டம் திருஅவைகளுக்கிடையிலான உரையாடல் பண்பைக் கொண்டுள்ளது, ஏனெனில் இறைவார்த்தை அதனை கேட்போருக்கான உண்மையான நிலையானதுமான ஒற்றுமைக்கான பாதையை சுட்டிக் காட்டுகிறது.

இந்த ஞாயிறை மேன்மையான கொண்டாட்டமாக அமைய வெவ்வேறு குழுக்கள் தமக்குரிய வழிகளை கண்டுபிடிப்பார்கள். இறைவார்த்தையின் நெறிமுறை மதிப்பை இறை மக்களின் கவனத்தை ஒருமுகப்படுத்தும் நோக்கில் திருப்பலிக் கொண்டாட்டத்தின் போது இறைவார்த்தையைக் கொலு ஏற்றவேண்டியது மிக முக்கியமானதாகும்.

# இருண்ட பாதையில் இளையோரின் பயணம்



உடுவிலூர் கலா

போர் முடிவடைந்த பின்னரும் கூட வடமாகாண மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடவில்லை. வாள்வெட்டு, வன்புணர்வு, கொலை, கொள்ளை, போதை கடத்தல் என அருவருக்கத்தக்க வன்முறைகள் தலை தூக்கின. அண்மைக் காலங்களில் எம் சமூகத்தில் வன்முறைகளும், அட்டூழியங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. போர்க்காலங்களில் ஷெல் விழுமா? வெள்ளைவான் வருமா? துப்பாக்கி ரவைகள் பதம்பார்க்குமா? எம் பிள்ளைகளைப் பறிகொடுப்போமா? என்கின்ற அச்சத்தில் உறங்க மனமின்றித் தவித்தோம். இப்போது வாள்வெட்டுக் கும்பல் வீட்டுக்குள் நுழையுமா? கொள்ளையர்கள் எம் வீடுகளில் தம் கைவரிசையை காட்டுவார்களா? பெண்களுக்கு பாதுகாப்புக் கிடைக்குமா? என்கிற ஏக்கத்தில் மறந்தும் தூங்காது விழிக்க வேண்டிய பரிதாப நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இரவு வேளைகளில் அடுத்தவர் வீடுகளுக்குள் நுழைந்து, உடைமைகளைச் சேதமாக்கியும், கொள்ளையடித்தும் பாலியல் வன்புணர்வு செய்தும் வன்முறைக் கலாசாரங்களை பதிவு செய்யும் சில கும்பல்களால் யாழ் குடாநாடு அச்சத்தால் உறைந்துள்ளது.


**இனத் துரோகிகள்**

இத்தகைய நாசகாரச் செயல்களில் ஈடுபடுபவர்கள் யார்? வேற்று இனத்திலிருந்து வேற்றுச் சமூகத்திலிருந்து வந்தவர்களா? வாள்வெட்டுக்கும்பலா? கொலைஞர்களா? கொள்ளையர்களா? வன்புணர்வாளர்களா? இல்லை. வன்முறைகள் சகலதும் தெரிந்த நாசதாரிகளா? சிந்திக்க வேண்டும். களைப்பு, நோய், துன்பம், சோர்வு என தம் சொந்த வீடுகளில் நிம்மதியாகத் தூங்காவிடாது இத்தகைய அட்டூழியங்கள்செய்கின்ற இனத்துரோகிகளை எப்படித்திருத்துவது? யார் திருத்துவது? திருந்தவே மாட்டார்களா? இன்று எம் சமூகம் கொண்டுள்ள பெரிய பிரச்சினையாக கொலை, கொள்ளை, வன்புணர்வு, வாள்வெட்டு என்பன இருந்தாலும், இவையாவர்க்கும் அடிநாதமாகப் போதைப் பொருள்களே உள்ளன. இந்த அழிவுக் கும்பலில் 18-30 வரையான இளையோர் உள்ளனர் எனக்கூறப்படுகின்றது. இவர்களில் சிலர் மாணவர்கள் என்பது கசப்பான உண்மையாகும். இவர்களது எதிர்காலம் என்னவாகும்? இவர்களது குடும்ப மதிப்பு என்னவாகும்? சமூகத் துரோகிகளாக இனத்துரோகிகளாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவர்களை உரிய தண்டனை கொடுக்க வேண்டியதும், சமூகத்தை விட்டு அப்புறப்படுத்த வேண்டியதும் காலத்தின் கட்டாய அழைப்பாணையாக உள்ளது.

ஊர் உறங்கும் வேளையில் வீதிகளில் மோட்டார் சைக்கிள்களில் வாள்களோடு வீரமுழக்கம் செய்கின்றனர். சில கோயில் வெளிகளில், பற்றைகளில் கூடும் இளைஞர்கள் பலர் புகைப் பிடிப்பதும், மது அருந்துவதும் கெட்ட வார்த்தைகள் பேசுவதுமாக காணப்படுகின்றனர். இவர்களைச் சுற்றி இருப்பவர்களால் இந்தச் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த முடிவதில்லை. தெருவில் செல்லும் பெண்ணின் அருகே சென்று அவளது தங்கச் சங்கிலியை அறுக்கிறார்கள். கொள்ளையர்கள் தாம் தப்பித்துக் கொள்வதற்காக வயோதிபப் பெண்களை வன்புணர்வு செய்து கொலை செய்கிறார்கள். இப்படியும் கடைநிலை மனிதர்களா?

**போர்க் காலத்திலும் அதன் பின்னரும்**

தொடர்ந்த போர் தந்தவடுக்கள் ஆறவில்லை. குருதி வெள்ளத்தில் குற்றுயிராய் கிடந்தும் ஒழுக்கமாய் வாழ்ந்த நாம் இன்று ஒழுக்கம் கெட்டவர்களாக வாழ்வது நியாயமா? போர்க்காலத்தில் இராணுவக் கெடுபிடியால் இளைஞர்களைப் பாதுகாக்க பதறியடித்து ஓடினோம். கல்வைத்த இடமெல்லாம் கடவுள் என வணங்கினோம். அதன் பயன்தான் இதுவா? எஞ்சியிருப்பவர்களை பாதுகாக்க வேண்டியவர்களே எம்மினத்தை அழித்து மகிழும் கொடுமையல்லவா இது. 2009இற்கு முன் இளைஞர்கள் ஒழுக்கத்தை முகவரியாக கொண்டு தமது உயிரைக் கையிலேந்தி வாழ்ந்தவர்கள். போர் நிறைவுற்றதும், மேய்ப்பன் இல்லாத மந்தைகள் என்பதை நிரூபிக்க போதைப் பொருள்களுக்கு அடிமையாகி வாள்வெட்டுக் கும்பல்களை உருவாக்கி யாழ்ப்பாணத்தை அமைதியிழக்கச் செய்கிறார்களே. இளையோர் சமூகம் போதையின் துணையோடு இருளை நோக்கி நீண்டதூரம் பயணித்து விட்டது. நாளைய இவர்களது நிலை என்ன? சிறைக்குள் அடைப்பட்டு தமது காலத்தை நாசமாக்குகின்ற அடாவடித்தனத்தில் ஈடுபடுகின்ற ஒவ்வொரு இளைஞனும் ஒரு தாயின் மகனே. தாய் எப்படி தனது மகனைக் கைவிட்டாள்? பத்துமாதம் சுமந்து வலியுணர்ந்து தனது உதிரத்தையே பாலாக ஊட்டியவள் மகனின் பாதையை கவனிக்காது விட்டது ஏன்? ஆடம்பர மோகமா? பணத்தாசையா? இன்று



வாள்வெட்டுக்கோ கொலைக்கோ கொள்ளைக்கோ வன்புணர்வுக்கோ தன்னை அர்ப்பணித்து கடைநிலை மனிதனாக சமூகச் சீரழிவுக்கு காரணமாகியுள்ள ஒவ்வொரு இளைஞனுக்கும் சிறை வாழ்க்கைக்கும் தாயே பொறுப்புக்கூற வேண்டும். ஊசி திருடிய போது கண்டிக்காத தாயை மிகப் பெரிய திருடன் என தண்டனைக்காளாகிய பின்னர் தாயின் காதைக் கடித்த மகனை ஒவ்வொரு தாயும் நினைவில் கொள்ள வேண்டும்.

**போதை தரும் பாதை**

இன்று சில கிராமங்கள் போதைப் பொருள்களாலும் வன்முறைகளாலும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. முப்பது வருடங்களுக்கு முன்னோக்கி நகர்ந்தால் கிறிஸ்துவுக்காக இளைஞர் சங்கம், கிறிஸ்தவ சபைகள் என்பன கிராமங்கள் தோறும் ஓய்வுநாள் பாடசாலை வாலிப பாசறை என நடத்தி சிறுவர்களையும், வாலிபர்களையும் ஆன்மிகத்துக்குள் வழிநடத்தினர். இந்தச் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதேபோல அறநெறிப்பாடசாலைகளுக்கு பிள்ளைகளை பெற்றோர் அனுப்பி வைக்க வேண்டும். மதத்தலைவர்கள் கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி இளைஞர்கள் வாழ்வியல் நெறிமுறைகளை புனருத்தாரணம் செய்ய வேண்டும். எம்முடைய பிள்ளைகளா? என்ற சுயநலமின்றி கல்விமான்கள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் தடுமாறி சீர்குலைந்து நிற்கும் இளையோர் வாழ்வியலை செப்பனிட உடனடியாக களமிறங்க வேண்டும். பார்வையாளராக அன்றி பங்காளிகளாக எமக்காக எம் சமூகத்துக்காக, எம் இனத்துக்காக எம்மை நாமே அர்ப்பணித்துச் செயற்பட வேண்டும். ஒழுக்கப் பிறழ்வுடைய பிள்ளைகளை இனம்கண்டு திருத்தும் பணியை யாவரும் முன்னெடுக்க அரசும், சட்டமும் ஒன்றிணைய வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக்கு பயந்து வாழும் நிலையை விடுத்து பெற்றோரை பயபக்தியோடு பிள்ளைகள் வணங்கும் நிலையை கொண்டு வரவேண்டும். பயந்து ஒதுங்குவதால் வன்முறையாளர்கள் வாந்திபேதிக் கிருமியாய் பல்கிப் பெருகுவர். இதனால் அநியாயமாக அவர்களது எதிர்காலம் காவுகொள்ளப்படுகிறது. ஏராளமான இளைஞர்கள் வாள்வெட்டில் ஈடுபட்டு ஏனைய அட்டூழியங்களையும் செய்து, அடுத்தவர்களையும் துன்புறுத்தி தமது வாழ்வியலையும் நாசமாக்கியுள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால் சமூகவெளி குப்பை மேடாகிவிடும். எம்மினம் தொடர்ந்து அழுகிறது. அழிக்கப்படுகிறது.

போரில் எண்ணுக்கடங்காத இளைஞர்கள் காவு கொள்ளப்பட்டார்கள். ஆனால் மண் மீட்க, மொழி மீட்க இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடினார். களச்சாவடைந்தனர்.

**தாய்மாருக்கு...**

இன்று நடப்பதென்ன? எம்மினப் பெண்களை பாதுகாக்க வேண்டியவர்கள் வேலியே பயிரை மேய்வது போல் செய்கிறார்களே. உலகினுக்கு நாகரிகம் போதித்தவன் தமிழன். தமிழ் மரபில் வந்து தமிழினத்தையே கொன்று போடலாமா? கொச்சைப்படுத்தலாமா? அன்பான தாய்மாரே, உங்கள் பிள்ளைகள் உங்கள் கைகளில் அடங்கி இருக்கும் புத்தகம் போன்றவர்கள். அதனைப் படித்துப் பார்க்காது வீசுவதோ, மூடிவைப்பதோ பாரதூரமான குற்றமாகும். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே.... என்ற சினிமாப் பாடல் வரிகள் தாய்க்குலத்தை தட்டி எழுப்புகின்றதை ஒவ்வொரு தாயும் உணர்ந்து கொள்ள வேண்டும். உங்களுடைய பிள்ளைகளை திருடன், கொலைஞன், வன்முறையாளன் என சமூகம் காறி உமிழ்வதை உங்களால் சகித்து வாழ முடிகிறதா? உங்கள் பிள்ளைகள் மேல் கண்ணும் கருத்துமாக இருங்கள். அவர்களது பாதையை செப்பனிடுங்கள். பொலிஸோ, சட்டமோ ஒவ்வொரு இளைஞனையும் குற்றவாளிகள் பட்டியலில் இட்டு வரிசைப்படுத்த முன் தாய்மாரே உங்கள் பிள்ளைகளை கருத்தூன்றிக் கவனியுங்கள்.

# பாறைகளில் பவளம்!

'உலக பவளப் பாறை' அடுக்கு பற்றி, கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆஸ்திரேலியக் கண்டத்தில் உள்ள, வடகிழக்கு கடற்கரையை ஒட்டிய பகுதியில், இந்தப் பவளப் பாறைத் திட்டுகள், காணப்படுகின்றன.

இது, 20 ஆயிரம் கி.மீ., துாரத்திற்கு, தொடர்ச்சியாக அமைந்துள்ளது. விண்வெளியில் இருந்தும், இந்தப் பவளப்பாறை அடுக்கைப் பார்க்க முடியும்.


பல கோடி ஆண்டுகளாக, பல லட்சம் பவளப் பாறை பாசியினங்கள் வாழ்ந்து, மடிந்து, படிந்து, பவளப் பாறைகளாக உருமாறுகின்றன.

இவை, வண்ணமயமான, கடலடித் தோட்டங்களாக அமைந்துள்ளன; கடல் வாழ் உயிரினங்களின், மிக முக்கிய வாழ்வாதார மையமாக விளங்குகின்றன.

'பவள பாலிப்' எனப்படும், கடல் நுண்ணுயிர்களே, வளர்ந்து, பவளப் பாறைகளாகின்றன.

'வழு...வழு...'ப்பான உடல் கொண்ட பவள பாலிப், பாறை மீது ஒட்டிக் கொள்ளும். உருளை போன்ற உடலும், ஒக்டோபஸ்ஸின் கைகள் போன்ற விழுதுகளும் உடையவை.

விழுதுகளின் மேல்புறம், தட்டு போன்ற அமைப்பு இருக்கும்; அது, திறந்து மூடும் வாய் போன்று செயல்படும். சின்னச் சின்ன உயிரினங்கள், தன்னைக் கடந்து செல்லும் போது, விழுதுகளால் வளைத்துப் பிடித்து, இரையாக்கிக் கொள்கின்றன.



'பவள பாலிப்புகள்' வளர்ச்சி அடையும் போது, 'சிமென்ட்' போன்ற தாதுவை உருவாக்கி, பாறையுடன், இறுக ஒட்டிக் கொள்கிறது. இது, சுண்ணாம்புக்கல் போன்றது; இதுவே, பவளப் பாறையின் அடிப்படை கட்டமைப்பாக விளங்குகிறது; பாலிப்புகள் வளர வளர, ஆயிரக்கணக்கான புதிய பாலிப்புகளாகப் பிரிகிறது.

இவை, பெற்றோர் பாலிப்புகளுடன் இணைந்து, பெருகி, பெரிய பாறை அடுக்கு போலாகிறது.

இப்படியாக, பல கோடி ஆண்டுகளாக உருவானவை தான், பவளப்பாறைத் திட்டுகள்.

பவளப் பாறைகள், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உயிர் வாழக் கூடியவை; சில பவளப்பாறைகள், வெறும், சுண்ணாம்புத் திட்டு போல் காணப்படும். ஆனால், அதன் உள்ளே, பாலிப்புகள் ஓய்வாக இருக்கும்; இரவில், கடல் நுண்ணுயிர்களையும், சிறிய மீன்களையும் விழுது போன்ற அமைப்புகளால் பிடித்து, இரையாக்கிக் கொள்கின்றன.

நீரில் அலையும் விழுதுகள், ஒரு தாவரம் போன்ற தோற்றத்தை உருவாக்கும். மேலும், பாறைப் படிவுகளில், பள்ளங்களும், பொந்துகளும் இருக்கின்றமையால், பல்வேறு உயிரினங்களின் வசிப்பிடமாகவும், திகழ்கின்றன பவளப் பாறைகள்.

இவற்றின் உடலில், சில பூஞ்சை இனங்கள் ஒட்டி, உயிர் வாழ்கின்றன.

இவை, பவளப் பாலிப்புகள் வெளியிடும் கழிவுகளை, உணவாக உட்கொண்டு வாழ்பவை.

இந்த நுண்ணுயிர்கள் வெளியிடும் ஒக்சிஜன் மற்றும் சத்துக்கள், பவள பாலிப்புகளுக்கு, மிகவும் அவசியம். இந்தப் பூஞ்சைகள் வளர, சூரிய ஒளி அவசியம்; எனவே, பவளப் பாறைகள், ஆழம் குறைவான கடல் பகுதியில் தான் வளரும்.



## நன்றியுள்ள தென்னை!

தென்னை மரத்தின் இளநீரில்
தித்திப் பூட்டும் குணமுண்டு
தின்னும் தேங்காய் சுவையூட்டும்
சிறப்பும் உண்ட நலமுண்டு!

சிறிய தென்னை மரத்தைநாம்
தென்னம் பிள்ளை என்கின்றோம்
அரிய பயன்கள் தருகின்ற
அழகுத் தென்னை மரம்இதுவே!

நின்று தளரா வளர்தெங்கு
நிதமும் கொடுக்கும் இளநீரை
நன்றியுள்ள மாந்தருக்கே
நிகராய் ஔவை சொன்னாரே!

தேங்காய்ப் பருப்பை உலர்த்தியபின்
சீராய் நெய்யை எடுத்திடுவர்
பாங்காய் தலைக்குத் தேய்த்திடுவர்
பலகாரங்கள் செய்துண்பர்!

# மயிலும் கொக்கும்!



சுந்தரபுரம் என்ற அழகிய கிராமத்தைச் சுற்றி, பசுமையான மலைகள் அரணாக அமைந்திருந்தன. மலை அடிவாரத்தில், ஓர் அழகிய குளம் இருந்தது. அதைச் சுற்றி, நிறையக் கொக்குகள் வசித்தன. வழி தவறி வந்த ஒரு மயில், கொக்குக் கூட்டத்தைப் பார்த்து நின்றது. ஒரு கொக்கை அழைத்தது. கொக்கு மெதுவாக நடந்து வந்தது.

மயிலுக்கு, தன் அழகான தோகையைப் போன்ற அமைப்பு, வேறு, எந்தப் பறவைக்கும் இல்லை என்ற கர்வம் உண்டு. இந்தக் கர்வத்தால், மெதுவாக நடந்து வந்த கொக்குவிடம், "என்னைப் போல், நீ அழகாக இல்லா விட்டாலும், சற்று வேகமாக நடந்து வர முயற்சிக்கலாமே..." என்றது.

இதைக் கேட்ட கொக்குக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனால், பொறுத்தபடி, "எதற்காக அழைத்தாய்..." என்றது.

"உன் அழகை ரசிக்க அழைக்கவில்லை; என் அழகான தோகையைப் பார்க்க உன்னை அழைத்தேன்..." என்று ஏளனமாகக் கூறியது. இந்த முறையும், கோபத்தை அடக்கியபடி அருகே வந்தது கொக்கு.

அப்போது மயில் தோகையை அழகாக விரித்து, "என்னைப் போல், உன்னால் தோகையை விரித்துக் காட்ட முடியுமா..." என்று கேட்டது. வருத்தமும், வேதனையும் அடைந்தாலும், கொக்கு வெளியே காட்டவில்லை.

"உன் தோகைகள் அழகுதான், ஒத்துக் கொள்கிறேன்; அதனால், உனக்கு என்ன உபயோகம் என்று தெரியவில்லை; நீ பகைவரிடம் இருந்து தப்பிக்க, தோகைகள் எந்த வகையிலும் உதவப் போவதில்லை; அதே நேரம், என் இறக்கைகள், அழகில்லாவிட்டாலும், ஆபத்து காலத்தில், தப்பித்து பறக்க, உதவி செய்கிறது..." என்றது கொக்கு. இதைக் கேட்ட மயில், வெட்கத்துடன் தலைகுனிந்து சென்றது.

**கர்வம் பிடித்தவர்களாய் இருக்கக் கூடாது; தாழ்மை, வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய வைக்கும்.**






## விடுகதைகள்

1. உள்ளே இருந்தால் ஓடித் திரிவான் வெளியே வந்தால் உடனே மடிவான் அவன் யார்?
2. கேடயமுள்ளவனுக்கு வாய் இல்லை அவன் யார்?'
3. அகன்ற கிணற்றைச் சுற்றி.. அக்கடுக்காய் வெள்ளைக் கற்கள் அது என்ன?
4. ஒரு குட்டையைச் சுற்றி ஐந்து வீடு அது என்ன?
5. சுட்டிக் குழந்தைகளுக்கு எந்தக் கை பலமான கை?
6. குடுக்கை நிறைய வைரமணி சிவப்பு நிறத்திலே இருக்குது அது என்ன?

## விடைகள்

6. மாதுளம்பழம்
5. அழுகை
4. உள்ளங்கை விரல்கள்
3. பற்கள்
2. ஆமை
1. மீன்

## முதுகில் உள்ள பொட்டுக்களைக் கூட்டி விடைகளை எழுதுங்கள்



# பொங்கல்விழா



வவுனியா,ஜன.19

வவுனியா புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகத்தின் பொங்கல் விழா கடந்த புதன்கிழமை கழக மைதானத்தில் நடைபெற்றது. பொங்கல் விழாவை முன்னிட்டு மறைந்த பொ.பத்மநாதன் ஞாபகார்த்தமாக நடத்திய மாபெரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் அன்றையதினம் நடைபெற்றன.

வவுனியா மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதல் நிலை பெற்ற மாணவி கௌரவிக்கப்பட்டார். அத்துடன் அவருக்குகழகத்தின் சார்பில் சிறுதொகைநிதியும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சரவணாஸ்சில்க்ஸ் உரிமையாளர் சூரசங்காரன் கலந்துகொண்டார். (ஐ-222)

# பகிடிவதையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம்

*கொழும்பு, ஜன.19*

*பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் பகிடிவதை காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கெனச் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று தகவல், தொடர்பாடல் தொழிநுட்பம், உயர்கல்வி, தொழிநுட்பப் புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.*

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்தக் குழு அதன் அறிக்கையை மூன்றுமாதகாலப்பகுதிக்குள்ஆராய்ந்து வழங்கும் எனவும் இதற்கான திட்டம் தற்போது வகுக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் சலீம் மர்சுக், முன்னாள் உபவேந்தரான நாரத வர்ணசூரிய, பேராசிரியர் சங்கைக்குரிய மாகம்மன பஞ்ஞானந்த தேரர், கலாநிதி வணக்கத்திற்கு பெனட் சாந்த அடிகளார், கலாநிதி சந்திரா அம்புல்தெனிய மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி பிரசன்னலால் டி அல்விஸ் ஆகியோர் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

குழுவின் அமைப்பாளராகவும் செயலாளராகவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவர் திருமதி ஜனிதா லியனகே செயற்படவுள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரம் பேர் பகிடிவதை காரணமாக பல்கலைக்கழக கல்வியைக் கைவிட்டுள்ளனர். இவர்கள் உள ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தல்களுக்கு ஆளானமையே இதற்கான காரணமாகும்.

வருடத்திற்கு 30 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்றனர். என்றாலும் 2 ஆயிரம் பேர் வரை பல்கலைக்கழக கல்வியை பகிடிவதை காரணமாக கைவிடுகின்றனர். 20 ஆயிரம் வரையான மாணவர்கள் வெளிநாடுகளின் பல்கலைக்கழகங்களை நோக்கி நகர்கின்றனர். இதனால் வருடத்துக்கு 50 பில்லியன் வரையான அந்நிய வருவாயை நாம் இழக்கின்றோம். உலகில் இலவசக் கல்வி காணப்படும் ஒருசில நாடுகளில் இலங்கையும் ஒன்று.

ஆகவே, இவ்வாறான அநீதியை கண்டும் நாம் வெட்கமடைய வேண்டும்.

கடந்த 5 வருட காலப்பகுதியில் பகிடிவதை காரணமாக பல்கலைக்கழக கல்வியைக் கைவிட்ட மாணவர்களுக்கு மீண்டும் பல்கலைக்கழக கல்விக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்-என்றார். (எ-24)

# 2020க்கான வேலைகள் பொங்கலன்று ஆரம்பம்



கிளிநொச்சி, ஜன. 19

இந்தஆண்டுக்கான கரைச்சி பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தைப்பொங்கல் தினத்தன்று கிளிநொச்சி பொன்நகரில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக கிளிநொச்சி பாரதிபுரம் பொன்நகர் கிராமங்களின் இணைப்பு வீதியான செபஸ்திரியார் வீதி கனகரக வாகனங்கள் மூலம் சீரமைப்பு ஆரம்பமானது.

அவை மட்டுமன்றி பாரதிபுரம் தெற்கு கிராமத்துக்கான வீதி மின் விளக்குகள் பொருத்தும் பணியும் இடம்பெற்றது.

பொன்நகரில் அமைந்துள்ள 50 வீட்டுத்திட்டம் 17 வீட்டுத்திட்டம் 25 வீட்டுத்திட்டம் வேதா குடியிருப்பு ஆகியனவற்றில் வாழும் மக்கள் வருடம் முழுவதும் குடிதண்ணீர் இன்றி அல்லற்படுகின்றார்கள் என்று கூறப்பட்டது.

இது பற்றி அந்தப் பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளருக்குச் சுட்டிக்காட்டியிருந்தனர். அதையடுத்து குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர், பாரதிரபுரம் வட்டார உறுப்பினர் சிவகுமாரன், கல்மடுநகர் வட்டார உறுப்பினர் ஜீவன் மற்றும் கிராமிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-6)

# நூல் வெளியீடு

மானிப்பாய்,ஜன.19

மானிப்பாய் இந்து நாடக மன்றத்தால் பகிர்வு 01 நூல் கடந்த வியாழக்கிழமை பாடசாலை காலைப் பிரார்த்தனையின் போது வெளியிடப்பட்டது.

காலைப்பிரார்த்தனையின் போது மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் வகையில் இந்த நூல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

கல்லூரியின் நாடக ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் நூலாசிரியராகவும் மன்றத்தின் இணைப்பாளர் ஆ.சயிந்தன், மன்றத்தின் தலைவர் யே.சானுயன் ஆகியோரை துணை நூலாசிரியராகவும் கொண்டு இந் நூல் வெளிவந்துள்ளது. (ஐ)



# கால்கோள் விழாக்கள்



வவுனியா,ஜன.19

வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை வித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் இ.நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிரதிக்கல்வி பணிப்பாளர் எஸ்.அமிர்தலிங்கம், சிறப்புவிருந்தினர்களாக பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எம்.தினேஸ், பழைய மாணவர் சங்க செயலாளர் ப.கார்த்திக் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-18)

*******

வவுனியா,ஜன.19

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் வலய மட்ட கால்கோள்விழா கடந்த வியாழக்கிழமை வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் செ. யேசுநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு கல்விப்பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் கலந்துகொண்டார். (ஐ)





# திருநாள் விழா



யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணம் கருகம்பனை இந்து இளைஞர் கழகம் மற்றும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத் தைத்திருநாள் விழா இளவாலை உயரப்புலம் கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.

மரதன் ஓட்டப்போட்டியுடன் ஆரம்பமாகி கலைகலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தலையணை சண்டை, வழுக்கு மரம் ஏறுதல், கயிறிழுத்தல், தயிர்முட்டி உடைத்தல் மற்றும் சிறுவர்களுக்கான நிகழ்வுகளும் நடைபெற்றன. (து-222)

# 2025 தான் கடைசி

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட போவதில்லை எனக் கூறியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடிசில்வா தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அதாவது தற்போதைய சூழ்நிலையில் கட்சியை வலுப்படுத்துவது தொடர்பாக அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைமைத்துவம் தொடர்பாக 2023ஆம் ஆண்டின் பின்னர் கருத்தில் கொள்ளுங்கள் எனவும் அவர் கூறியுள்ளார். (எ)

# காரைநகரில் வயல்விழா





காரைநகர், ஜன.19

காரைநகரில் சேதன நெற்செய்கை வயல்விழா கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் மொந்திபுலம் வயல் பிரதேசத்தில் நடைபெற்றது.

2019/20 பெரும்போகத்தில் 30 ஏக்கர் வயல் நிலத்தில் சேதன முறையில் நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வாக இந்த வயல் விழா ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. தொல்புரம் காரைநகர் விவசாயப் போதனாசிரியர் எஸ்.நிரோஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார், யாழ்ப்பாணம் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன், காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.ஈஸ்வரதாசன், காரைநகர் பெரும்போக உத்தியோகத்தர் எஸ்.மயூரன், காரைநகர் பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி ஆர். பானுமதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போதுசேதன முறையில் செய்கை பண்ணப்பட்ட மாதிரி வயல் பார்வையிடப்பட்டது.

விருந்தினர்களின் உரைகளைத் தொடர்ந்து காரைநகரில் இம்முறை சேதன முறையில் நெற்செய்கையில் ஈடுபட்ட 30 விவசாயிகள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-250)

## "சேம் சைட் கோல்"

# ஹரீனுக்கு வந்தது சந்தேகம்

கொழும்பு, ஜன.19

பொதுத் தேர்தலில் ஆளும் தரப்பினர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு எமது தரப்பில் இருக்கும் சிலர் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கின்றனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மரக்கறி விலைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலைமை தற்போது "கோட் சூட்டில்" மீண்டும் வந்துள்ளதா என்று கருதக் கூடிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. ஆனால் அது தொடர்பாக எவரும் பேசவில்லை.

ரஞ்சன் ராமநாயக்கவின் கைது மற்றும் கட்சிக்குள் காணப்படும் பிரச்சினைகளை மட்டும் பெரிதுபடுத்திக் காண்பித்து ஏனைய முக்கிய பிரச்சினைகளுக்கு வழங்கப்பட வேண்டிய அவதானம் திசை திருப்பப்ப ட்டுள்ளது. இதைவிட எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆளும் தரப்பினர் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதற்கு எமது தரப்பிலிருக்கும் சிலர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனரா என்ற சந்தேகமும் இப்போது தோன்றியுள்ளது-என்றார். (எ)

# 100ஆவது ஆண்டு சிறப்புப் பொங்கல்

கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சிஇரணைமடு குளத்தின் 100ஆவது ஆண்டு சிறப்புப் பொங்கல் நிகழ்வு கிளிநொச்சி கனகாம்பிகைஅம்மன்கோவில் முன்றிலில் நேற்று முன்தினம் முற்பகல்10.30 மணியளவில் நடைபெற்றது.

விசேட வழிபாட்டைத் தொடர்ந்து பிரதான பொங்கலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் விவசாயத் திணைக்கள பொறியியலாளர்கள் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். இரணைமடு குளத்தின் 100ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் சிறப்புநூல்ஒன்றும்வெளியிடப்பட்டது. நூலை நாடாளுமன்றஉறுப்பினர்சி.சிறிதரன் மற்றும் பொ.ஐங்கரநேசன்ஆகியோர்இணைந்து வெளியிட்டனர். (த-6)



# பொங்கல் விழா





ஊர்காவற்றுறை, ஜன.19

காவலூர் மைந்தர்கள் அமைப்பின் பொங்கல் விழா கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

'பாரம்பரிய விளையாட்டுக்களை இளம் தலைமுறைக்கு சொல்லிக்கொடுப்போம்' என்ற நோக்கில் நடைபெற்ற நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெற்றன.

கிளித்தட்டு, தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல் மற்றும் சிறுவர்களுக்கான போட்டிகள் என்பன நடைபெற்றன.

கிளித்தட்டு போட்டிகளில் கரம்பொன், தம்பாட்டி மற்றும் ஊர்காவற்றுறை அணிகள் மிகவும் ஆர்வமாக பங்குபற்றின. பலத்த போட்டியின் மத்தியில் ஊர்காவற்றுறை அணி வெற்றியீட்டியது.

15 மேற்பட்ட இளைஞர்கள் பங்குபற்றிய விறுப்பான தலையணைச் சண்டையில் க. மெறோயன் வெற்றி பெற்றார். இதனைத் தெடர்ந்து முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல் மற்றும் சிறுவர்களுக்கான நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தவிசாளர் ம. ஜெயகாந்தன், சிறப்பு விருந்தினராக காவலூர் மைந்தர்கள் அமைப்பின் ஆலோசகர் இ. ஜெயால்ட் அன்ரனி கௌரவ விருந்தினராக கிராம சேவையாளர் மரிஸ்டீன் பாலா டினேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-154)



வவுனியா செட்டிகுளம் மில்கோ பால் குளிரூட்டும் நிலையத்தின் பொங்கல் விழா அண்மையில் நிலைய முன்றிலில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. (ஐ-222)

# கற்றல் கருவிகள் கையளிப்பும் சாதனையாளர் கௌரவிப்பும்


சுன்னாகம், ஜன.19

சுன்னாகம் கந்தரோடை அருள்விநாயகர் சனசமூக நிலையத்தால் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கலும், கௌரவிப்புநிகழ்வும்அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் கடந்த வருடம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடமும், யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் முதலிடமும் பெற்ற மாணவனான நிலக்ஷன் மற்றும் பளுதூக்கல் வீராங்கனை ஆர்சிகா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக



வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் வலி.தெற்கு பிரதேச சபையின் (சுன்னாகம்) கந்தரோடை வட்டாரத்தின் உறுப்பினர் திருமதி. யோகாதேவி ரவிக்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## போதையில் சாரத்தியம்; தலா 25,000 தண்டம்

மதுபோதையில்வாகனம் செலுத்திய நான்கு சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்று தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

மதுபோதையில் சாரதிய அனுமதிப்பத்திரம் மற்றும் தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 52 ஆயிரத்து 500 ரூபாவும் மதுபோதையில் தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும் மதுபோதையில் வாகனம்செலுத்திய இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (த-9)

# தேர்தலில் யானையை மக்கள் புறக்கணிப்பர்



## டிலான் பெரேரா ஆருடம்

**கொழும்பு, ஜன.19**

**ஐக்கிய தேசியக் கட்சியைப் பொதுத் தேர்தலில் மக்கள் முற்றுமுழுதாகப் புறக்கணிப்பார்கள். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தற்போது மும்முனைப் போட்டி நடக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதித் தேர்தலில் பகுதியளவில் நிராகரிக்கப்பட்ட இந்தக் கட்சி பொதுத் தேர்தலில் முழுமையாக மக்களால் புறக்கணிக்கப்படும் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும்.

அரசின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் எதிர்க்கட்சி ஒன்று நாடாளுமன்றத்தில் செயற்படுவது சிறந்த ஆட்சிக்குச் சாதகமாக அமையும். ஆனால் நடைமுறையில் பலமான எதிர்க்கட்சி ஒன்று கிடையாது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய குரல் பதிவுகளின் பின்னணியில் இருந்தவர்களும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான குழுவினராலேயே இவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. ஆனால் பழிகள் அனைத்தும் ரஞ்சன் ராமநாயக்கவின் மீதே சுமத்தப்பட்டுள்ளன -என்றார். (எ)







## எம்.ஜி.இராமச்சந்திரனின் பிறந்த தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.19

தமிழக முன்னாள் முதலமைச்சரும் பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் பிறந்த தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டன.

எம்.ஜி.இராமசந்திரனின் தீவிர ரசிகனும், நண்பருமான யாழ்ப்பாண எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஏற்பாட்டில் பிறந்ததின நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து நினைவு கூரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்,தமிழ் தேசியக் கூட்டமைபின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வலி கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் ராசேந்திரம் செல்வராஜா உட்பட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் கோப்பாய் சுந்தரலிங்கம் தன்று சொந்த நிதியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ஐ-20)

## மின் தடை

யாழ்ப்பாணம்,ஜன.19

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை

**வவுனியா மாவட்டத்தில்**

சூடுவெந்தபுலவு, பகலஅளுத்த கிராமம், சாளம்பைக்குளம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## வவுனியாவிலும் எம்.ஜி. ஆர்.பிறந்ததினம்



வவுனியா,ஜன.19

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான எம். ஜி. இராமச்சந்திரனின் பிறந்த தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் மாலை வவுனியாவில் நடைபெற்றன.

வவுனியா எம். ஜி. ஆர். நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் மன்றத்தின் தலைவர் கோ. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் எம்.ஜி. ஆரின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன், சிறப்புரைகளும் நிகழ்த்தப்பட்டன.

நிகழ்வில் வவுனியா நகரசபை உறுப்பினர் ரி.கே. ராஜலிங்கம்,சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஸ். ஸ்ரீனிவாசன்,தமிழ்விருட்சம் அமைப்பைச் சேர்ந்த சந்திரகுமார் கண்ணன், மாணிக்கம் ஜெகன் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ஐ-110)



மக்கள் நலன் காப்பகத்தின் 'அறிவுச்சோலை சிறப்புத்திட்டம்'' ஊடாக வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் பதினொராம் தரத்தில் கல்விகற்கும் மணிபுரம் வவுனியாவைச் சேர்ந்த செல்வி. முருகையா ரிஷானிக்கு 17ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான [illegible] வழங்கப்பட்டது. கனடா மக்கள் நலன் காப்பகம் ஊடாக அந்நாட்டில் இயங்கிவரும் சமாதானம் மற்றும் புனர்வாழ்வுக் கழகத்தினர் இதை வழங்கியுள்ளனர். (து-222)

## மாட்டு வண்டி சவாரி போட்டி

**கிளிநொச்சி,ஜன.19**

கிளிநொச்சி மாவட்ட மாட்டு வண்டி சவாரிச் சங்கத்தின் அனுசரணையுடன் பூநகரி விவசாயப் பெருமக்கள் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை அக்கராயன் மத்திய சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (ஐ)

## உற்பத்தியாகும் மின்சாரத்தை கொண்டுசெல்வது பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 19

பூநகரியில் 132 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருவாக்கப்படவுள்ள மின் உற்பத்தி நிலையத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்தை அங்கிருந்து கொண்டு செல்லும் வழிமுறை தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட சுற்றுச் சூழல் அதிகார சபையின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கௌதாரிமுனைப் பகுதியில் இந்த மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

அரச நிலம், தனியார் நிலம் மற்றும் வனவளத் திணைக்கள நிலம் ஆகியவற்றை உள்ளடக்கி 132 ஹெக்ரேயர் நிலத்தில் இது அமைக்கப்படவுள்ளது.

காற்றாடி மற்றும் சூரிய மின்கலம் என்பவற்றில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு பூநகரி மற்றும் பரந்தன் சந்தி ஊடாக வவுனியா கொண்டு சென்று பிரதான மார்க்கத்துடன் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு தனியார் நிலத்தை விடுவிக்க உடன்பாடு இல்லை என்றும் இந்தப் பகுதியில் மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதால் எதுவித பாதிப்பும் ஏற்படாத என்பதை விளக்கும் அனைத்துத் தரப்பின் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்குமாறும் [illegible] தமை குறிப்பிடத்தக்கது. (த-105)

# ஆசிரியருடன் பெற்றோர் கைகோர்ப்பது அவசியம்

## வலயக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு



**தலைமன்னார், ஜன. 19**

**30 வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர்களுக்கும் கல்வி சார்ந்தவர்களுக்கும் இருந்த பதற்றத்தைவிட, தற்போதுள்ள ஆசிரியர்களுக்குத்தான் பதற்றம் அதிகம். ஆகவே ஆசிரியர்கள் சவாலுக்கு மத்தியில் மாணவர்களுடன் பயணிக்கும்போது பெற்றோரும் இவர்களுடன் கைகோர்த்துச் செயற்படவேண்டும் என்று மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் கே. கே.பிறெட்லி தெரிவித்தார்.**

மன்னார் வலய மட்ட தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா பேசாலை சென் மேரிஸ் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

30 வருடங்கள் முன்னோக்கிப் பாருங்கள், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரிய அவதிகள் இருந்திருக்கமாட்டா. 2050ஆம் ஆண்டில் தலைவர்களாக வரக்கூடிய இந்த மாணவர்களை உருவாக்கும் பணி சவால் நிறைந்தது. ஒரு யூத எழுத்தாளர் தனது நூலில் 2050, 2100 ஆம் ஆண்டுகளில் உலகில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது பெரும்பாலான தொழில்கள் எல்லாம் தானாக இயங்கும் நிலைகளுக்கு உருவாகிவிடும் என்று கூறுகின்றார். ஒன்று சுப்பர் மனிதர். அதாவது நல்ல அறிவுள்ள ஆய்வு செய்யக்கூடியவர்கள்.

இரண்டாவது அறிவு சார்ந்த, தொழிநுட்பம் தெரியாதவர்கள். இவர்கள் வேலையற்று இருப்பவர்கள். இந்த இரண்டாம் குழுவை சார்ந்தவர்கள் அரசு மாதாந்தம் கொடுப்பதை வைத்து தங்கள் வாழ்க்கையை ஓட்டுபவர்களாக இருப்பார்கள் என்று எதிர்காலம் பற்றி கூறுபவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

அத்தகைய காலத்தில்தான் தற்போதைய மாணவர்கள் காலடிகளை எடுத்து வைக்கப்போகின்றார்கள். அத்தகைய மாணவர்களே இன்று எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்- என்றார். (கு-60)

# வெடிமருந்துக் குச்சிகள் மீட்பு; சந்தேகத்தில் இருவர் கைது


## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜன.19

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வெடிமருந்துக் குச்சிகள் மீட்கப்பட்டன. சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து ஒன்றை வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மறித்து சோதனை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இதன்போது ஜெலக்னேட் எனப்படும் வெடிமருந்து குச்சிகள் 51 கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.



வெடிமருந்துக் குச்சிகளை மீட்ட இராணுவத்தினர், அவற்றைக் கொண்டு வந்தனர் என்ற குற்றச்சாட்டில் தனியார் பேருந்துச் சாரதி மற்றும் நடத்துநரைக் கைது செய்தனர். தனியார் பேருந்தும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட சாரதி மற்றும் நடத்துநரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த வுள்ளனர் எனத் தெரிவித்தனர். (ஜ-18,110)





# இல்ல மெய்வன்மைப் போட்டி

கிளிநொச்சி,ஜன.19

கிளிநொச்சி சிவபாத கலையக அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

அதிபர் திருமதி பரமேஸ்வரி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற போட்டியில் பிரதமவிருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான மு.சந்திரகுமார், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆ.பவானந்தன், அயற்பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

மூன்று இல்லங்களாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. ஞானபிரகாசர்இல்லம்623புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், விபுலானந்தர் இல்லம் 574 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், நாவலர் இல்லம் 500 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஜ-159)

# ரஜினிகாந்த் வருவதற்கு எந்தத் தடையுமில்லை

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

தென்னிந்திய நடிகர் ரஜினிகாந்த் இலங்கை வருவதில் எந்தத் தடையுமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது டுவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

"நடிகர் ரஜினிகாந்த் இலங்கை வருவதில் எந்தத் தடையுமில்லை. அது பற்றிய வதந்திகளில் எந்த உண்மையுமில்லை. நானும் எனது தந்தை யாரும் ரஜினிகாந்த் திரைப்படங்களின் பெரும் ரசிகர்கள். அவர் இலங்கை வர விரும்பி னால் நிச்சயம் வரலாம், ஒரு தடையுமில்லை" என நாமல் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நடிகர் ரஜினிகாந்தை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். எனினும், அரசியல் ரீதியான பயணங்களுக்கு அவருக்கு அனுமதி வழங்கப் போவதில்லை என இலங்கை அரசு கூறிய தாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில் ரஜினிகாந்துக்கு விசா வழங்க மறுப்பு தெரிவிக்கப்பட்டதாக வெளியான செய்தியை இலங்கை அரசும் அண்மையில் மறுத்திருந்தது. (ஏ)

# விளையாட்டு வீரர்களுக்கு உதவிகள்

உடுவில்,ஜன.19

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 24 விளையாட்டு வீரர்களுக்கு சீருடைகள், சப்பாத்துக்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

உடுவில் பிரதேசசெயலாளர் பிரிவின் சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவினால் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதியுதவியில் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளில் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் முதல்மூன்று இடங்களையும் பெற்று சாதனை படைத்த மாணவர்களுக்கு வசதியளித்தல் 2019 திட்டத்தில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

சுன்னாகம் சமுர்த்தி வங்கியில் வைத்து நேற்றுமுன்தினம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மகளிர் ,சிறுவர் விவகாரம் மற்றும் சமூகபாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, சமுர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர்கள் மற்றும் சமுர்த்தி திணைக்கள உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-39)

# ஐக்கிய அரபு இராச்சியம் கோத்தாவுக்கு அழைப்பு



ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு வருமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு அபுதாபி அரசின் முடிக்குரிய இளவரசர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதித்தலைவருமான ஷேக் மொஹமட் பின் சயிட் அல் நஹ்யன் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு அவர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த விரும்புகிறார் என்றும் கூறியுள்ளார். முடிக்குரிய இளவரசரின் வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, அவரது அழைப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ)

**விற்பனைக்கு**

Dachsshund (டாசவுன்)
9 மாதம் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**077 967 2599**

**வீடு வாடகைக்கு**

ஆனைக்கோட்டையில் நல்ல சுற்றாடலில் வீடு வாடகைக்குண்டு.

**071 838 1119**

**BOC Travels**
SUBSIDIARY OF BANK OF CEYLON

கடந்த தசாப்தகாலமாக சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றில் அனுபவம் மிக்க உலகின் முன்னணி IATA நிறுவனத்தினால் பரிந்துரைக்கப்பட்ட முதல் 10 தர இடங்களுக்குள் BOCTravels நிறுவனமும் ஒன்றாகும்.

இந் நிறுவனமானது முன்னணி விமானபயண முகவர்களுடனும் நட்சத்திரவிடுதிகளுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு வாடிக்கையாளர்களுக்கு அதி உன்னத சேவையை வழங்கி வருகிறது.

எங்கள் அனுபவமிக்க பணியாளர்களோடு இணைந்து சேவை செய்வதற்கு திறமையான செயல்திறன் மிக்க அர்ப்பணிப்புள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## TRAVEL EXECUTIVES

### வவுனியா கிளைக்கான பதவி வெற்றிடம்

தகைமை :

- விமான பயணச்சீட்டு வழங்கல் ஆசன ஒதுக்கீடு என்பவற்றில் விமான சேவை டிப்ளோமா தகைமைச்சான்றிதழ் இருத்தல் வேண்டும். இத்துறையில் 3-4 வருட அனுபவமும் மேலதிக தகைமையாக Galileo Reservation முறைமை சம்பந்தமான அறிவும் இருத்தல் வேண்டும்.
- வவுனியா / யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர் 35 வயதிற்கு உட்பட்டவராகவும் தொடர்பாடல் தகைமையுடன் சரளமாக ஆங்கிலம் எழுத பேச தெரிந்திருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**மேற்குறித்த பதவிக்கு பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையுடன் அண்மையில் எடுத்த புகைப்படம் மற்றும் இரண்டு உறவினர்கள் அல்லாத பரிந்துரையானவர்கள் விபரத்துடன் இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஏழு (7) நாள்களுக்குள் பின்வரும் மின்னஞ்சல் (email) முகவரியினூடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**

**Careers@boctravels.com**

## ஓஸ்ரியா போட்டோ

தொழில்சார் பயிற்சியுடன்

வவுனியா, மன்னார் மற்றும் கிளிநொச்சி கிளைகளுக்கு...

**Graphic Designers** 05
VAVUNIYA & MANNAR BRANCH
(Corel Draw, Illustrator, Photoshop)

**Receptionist** 02
VAVUNIYA & KILINOCHCHI BRANCH
(Knowledge on Tamil & Sinhala or English)

**Production In-charge** 01
VAVUNIYA BRANCH
(Knowledge on Frame Making)

**Production Assistant** 03
VAVUNIYA BRANCH

### உடனடி வேலைவாய்ப்பு

விண்ணப்பங்களை Email முகவரிக்கு அல்லது எமது கிளைகளில் கையளிக்கவும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களில் தெரிவு செய்யப்பட்டவர்கள் மட்டும் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர்.

AUSTRIYA PRINTING (PVT) LTD.
#50, 1st Cross Street, Vavuniya.
#203, Sebastian's Street, Mannar. #A9 Road, Kilinochchi.
077 3501095 / 077 3501045
Austriya / Austriyaalbums austriyap@gmail.com

**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**



யாழ்
## கலாலயா
பயிற்சியகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணையத்தில் பதியப்பெற்றது.
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 19.01.2020 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 20.01.2020 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

## ரோயல் மருத்துவமனையின் இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

| யாழ்ப்பாணம் | கண்டி |
| --- | --- |
| 25th January 2020 | 26th January 2020 |

முன்பதிவுக்கு: **075 40000 12, 076 0155 882**





**மகப்பேறின்மை பிரச்சனைகளுக்கான உங்கள் கேள்விகளுக்கு டொக்டர். கீதா ஹரிப்ரியா அவர்கள் பதிலளிக்கிறார்.**

**ஆலோசனைகளைப் பெற்றுப் பயனடையுங்கள்!**

பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் டொக்டர். கீதா ஹரிப்ரியா கலந்து கொள்ளும் இலவச மருத்துவ ஆலோசனை முகாம்

27 ஆண்டுகளாக இலங்கைத் தம்பதிகளின் நம்பிக்கையைப் பெற்று குழந்தைக் கனவை நனவாக்கி, உலகளவில் சிறப்பு அங்கீகாரங்களைப் பெற்ற பிரசாந்த் மருத்துவமனை!



குழந்தைப்பேற்றை உறுதிப்படுத்தும் புதிய தொழில் நுட்பங்களுடன் அதிநவீன சிகிச்சை!

## பிரசாந்த்
மருத்துவமனை தகவல் மையம்

ரோயல் மருத்துவமனை,
62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

infopfrcsl@gmail.com www.pfrcivf.lk


BLC
CAMPUS
othm
University of Chichester
QUEST INTERNATIONAL UNIVERSITY PERAK
Sri Lanka UGC Recognized
CERTIFICATE
English | Business Management
DIPLOMA
English | IT | Business Management |
Smart Up | Hospitality Management
PROFESSIONAL COURSES
ACCA | Digital Marketing
HND(HIGHER NATIONAL DIPLOMA)
Civil Engineering
Business Management
Hospitality Management
Information Technology
DEGREE / DEGREE TOP UPS
(1 YEAR for HND holders)
Bachelor of Business in Banking & Finance
Bachelor of Business Administration
Bachelor of Information Technology
Bachelor of Psychology
Bachelor of Education
MASTERS
MBA ( Master of Business administration)
MEd (Master of Education)
DOCTORATE
DBA (Doctor of Business administration)
PhD
TVEC
Approved
Centre
0777 17 4443 Sapthika
0777 07 4449 Vithya
4th Lane, Brown Road, Jaffna.
blc campus
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk




**Courses From Language,Diploma,Bachelor and Masters**

IELTS அவசியமில்லை

குறைந்ததகமை - GCE O-LEVEL

GAP ACCEPTABLE

AGE LIMIT 35

BIBM 10 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை மாணவர்களுக்கு உயர்கல்விக்கான ஆலோசனைகளையும், திட்டங்களையும் திறன்பட துரிதமுறையில் வழங்கிவருகிறது

மேலதிக விபரங்களுக்கு

BIBM
EDUCATION | CONSULTANCY
*Gateway to the future*

BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (PVT) LTD
Colombo / Jaffna
No: 238 Kasturiar Road, Jaffna
Telephone: 0212212443
HOTLINE- 0773635648 / 0777679094

## Wanted
## Web developer / Programmer

We are looking for talented PHP / MYSQL Programmers to work as Software Architects, Leader Developer, Senior or Junior Programmers

As an ideal candidate, you should have working Experience in web development and Internet based Application / Database management systems.

**Salary from 30,000 - 200,000**

Apply with your CV detailing qualification and work experience.

**job@irstha.com**
**021 221 7871**
**www.irstha.com**
**No.64, Kannathiddy Rd, Jaffna.**

(CS/24277)(11,17)

11th EDITION

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
Jaffna International Trade Fair

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

24
25
26

JITF 2020

**ஜனவரி / January**
**10.00 am - 8.00 pm**
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)

www.jitf.lk
jitf.lk

ICT | FOOD & BEVERAGE | APPAREL | AUTOMOBILE | CONSTRUCTION | AGRICULTURE

PLATINUM SPONSOR: INSEE CEMENT
ORGANIZED BY: LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH: CCIY

OFFICIAL PARTNERS
TELECOMMUNICATION: Sri Lanka Telecom Mobitel
FOOT WEAR: DSI
FOOD
COSMETICS: British Cosmetics
POWER TOOLS: DIMO
PRINT MEDIA

ENDORSED & SUPPORTED BY
PARTNER COUNTRY: India

More information: Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com

## தேவை

பணிப்பெண்கள் தேவை.
(யாழ்.நகர பகுதிக்கு அருகில் வசிக்கும்)

**077 967 2599**

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 இல் பிறந்த R.C.மதத்தைச் சேர்ந்த சூரிய செவ்வாயில் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. தரகர் தேவையில்லை.

**077 507 1817**

## வேலையாள் தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் உட்பட்ட **மருந்தகம் (Pharmacy)** ஒன்றிற்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
**(பெண்கள்)**

**077 791 7630, 077 666 9034**

## முச்சக்கர வண்டி பதிவுப் பத்திரத்திற்கு

சிறந்த தொகை
குறைந்த வட்டியுடன்
ஒரே நாளில் பெற்றுக்கொள்ளலாம்



OD
முறைப்படி
வட்டியைச் செலுத்தல்

இன்றே தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம் 0777 391 449 | வவுனியா 0769 127 751

**SINGER FINANCE**

Web: www.singerfinance.com | Facebook: SingerFinance

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

CERTIS LANKA SECURE LOGISTICS (PVT) LTD



## VACANCY

Certis Lanka is a joint venture with Certis International (Pte) Ltd., of Singapore. We are the market leader in providing loss prevention solutions, secure logistics & caring services to private and corporate clients.

Applications are invited for the following vacancy from suitable candidates.

## MANAGER - JAFFNA

The ideal candidate should be a highly motivated individual with excellent leadership and management skills, initiative and dynamism, supported by a sound academic background and a good knowledge in English. He should have a proven track record of minimum 5 years in a similar capacity. Experience as a commissioned/gazetted officer of the armed services or police would be advantageous, but not essential. Should be between 30-45 years and residing in the area of operation.

A very attractive remuneration package with medical and other benefits and a vehicle allowance is on offer.

**Please forward your curriculum vitae indicating the post applied for and contact details with the names and addresses of two non-related referees within 7 days of this advertisement by e-mail to: logisticshr@certislanka.com or by mail to:**

GROUP DIRECTOR - HR & TRAINING
Certis Lanka Group
Certis Lanka Centre
15, De Fonseka Place,
Colombo 4.

Great Place To Work Certified

certis lanka
Securing Your World

www.skillsads.com

## வேலைவாய்ப்பு

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு பின்வரும் பதவிக்கு வெற்றிடங்கள் உள்ளன.

1. விற்பனைப் பிரதிநிதிகள்
2. விற்பனை உதவியாளர்கள்
3. பணம் சேகரிப்பாளர்கள்

❂ கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும்.

❂ சாரதி அனுமதிப்பத்திரம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

தொடர்புகளுக்கு :
**077 868 7999**

(J 11045)(14.17)

## உடன் தேவை

யாழ்நகரில் இயங்கும் **போட்டோப்பிரதி செய்யும் கடை** ஒன்றிற்கு **விரைவான தமிழ், ஆங்கில கணினித் தட்டச்சு** வேலை தெரிந்திருப்பதுடன் **போட்டோப் பிரதி செய்வதில்** அனுபவமுள்ள அல்லது பழக ஆர்வமுள்ள நேர்மையும் விரைவான செயற்திறனும் கடமையுணர்வும் மிக்க பெண் ஊழியர் தேவை.

**077 356 2043**

(cs: 30665) (13.17)

## பணிப்பெண்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள குளிர்பான நிலையமொன்றுக்கு விநியோக பகுதியில் வேலைசெய்வதற்கு தகுதி வாய்ந்த பணிப்பெண்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் கீழ்வரும் தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**077 618 2725**

(CS30677)(12.17)

## நிர்வாகத்திறன் மிக்க பெண் தேவை

வவுனியாவிலுள்ள மெடிக்கல் சென்ரருக்கு அலுவலகத்தை நிர்வகிக்கின்ற நிர்வாகத்திறமை கொண்ட 25 முதல் 35 வயதுடைய பெண் ஒருவர் தேவை. வேலை நேரம் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

(CS 00547) (14.17)

**076 422 3703**

## பெண் வேலையாள்கள் தேவை

பிரபல **PHOENIX BOOK SHOP** இற்கு பெண் வேலையாள்கள் தேவை.

* **Sales girl** (வெளிவேலை இல்லை)
* **Photo Copy Operator**

யாழ் மாநகரசபைக்கு உட்பட்டோர் மாத்திரம் விண்ணப்பிக்கவும்

* Biodata with Photo கட்டாயமாக கொண்டுவரவும்

**077 063 3116**

பயணத்தின் போது இணையற்ற இணைப்பை அனுபவியுங்கள்.

உங்கள் 4G மொபைல் ரவுட்டரை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

TRC/M/SEA/19/01



| | | |
|---|---|---|
| மொபிடெல் 4G மொபைல் ரவுட்டர் | ரூ. 5,500 | Device சகிதம் 6 மாதங்களுக்கு 22GB இலவசம் |
| மொபிடெல் 4G Wi-Fi ரவுட்டர் | ரூ. 4,990 | |

டேட்டா ஆட்-ஒன் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| ரூ. 499 | ரூ. 699 | ரூ. 999 |
| 10.5GB* | 16.5GB* | 23.5GB* |

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 1717







வர்த்தக உலகில் வெற்றிகரமாக பயணத்தைத் தொடரும் உங்களுக்காக

நூறாண்டு காலமாக எதிர்பார்ப்புகளைக் கைவிடாமல் வெற்றிகரமாக முன்னோக்கிச் செல்ல நாங்கள் உங்களுக்கு ஊக்கமளித்தோம். 1920 ஆம் ஆண்டு ஈஸ்டேர்ன் வங்கி என்ற பெயரில் பயணத்தை ஆரம்பித்த கொமர்ஷல் வங்கி ஆகிய நாம், நூறாண்டு காலம் முழுவதும் உங்கள் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றினோம்.

நிதி உதவிகளை வழங்கி சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களாகிய நீங்கள் வாழ்க்கையை வெல்வதற்கு உதவி புரிய இனிவரும் காலங்களிலும் நாங்கள் உங்கள் அருகில் இருப்போம்.




நூற்றாண்டு கால நம்பிக்கையுடன் வளமான எதிர்காலத்தினை நோக்கி

COMMERCIAL BANK

உங்கள் நலனே எங்கள் நோக்கம்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
# திலகவதி திருநாவுக்கரசு



வேலணை கிழக்கு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், பழம் றோட்டை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி திருநாவுக்கரசு அவர்கள் 16.01.2020 அன்று அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும் முரளீதரன், கிரிதரன், ஸ்ரீதரன், கலாதரா, வசுந்தரா (லதா), சுமித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், பேரின்பநாயகி, திலகா, ஜெயவதனி, காலஞ்சென்றவர்களான பிரபாகரன், புஸ்பநாதன் ஆகியோரின் மாமியாரும், புனிதவதி, அமரர் சண்முகநாதன் மற்றும் பத்மாவதி, அமரர் கமலாதேவி மற்றும் இலட்சுமிதேவி, தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகசேகரம், வரதராஜா ஆகியோரின் அன்பு அண்ணியும், அமரர் ஆறுமுகம், மற்றும் அகிலத்திருநாயகி, அமரர் கணேசலிங்கம் மற்றும் குணரத்தினம், அமரர் மகேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமரர் தங்கராணி மற்றும் சிவஞானசுந்தரி ஆகியோரின் சகலியும், யசோதரா, சசிதரா, சபேசன் ஆகியோரின் சிறிய தாயாரும், சுவிலதன், கல்பலதா (கல்பனா), அமரர் சேரலதன் மற்றும் பிரகலாதன், பிரேமலதன், சிவானுஜா, சேயோன், சிவப்பிரியா, சுபேந்திரன் ஆகியோரின் பெரியதாயாரும், குமரன், காந்தன், சயந்தன், வரதன் ஆகியோரின் அன்பு மாமியும், திலக்ஷன், சஜீவன், மதுஷன், லக்ஷிகா, தனுஷியன், கௌரீசியன், ஆதிதன், அக்ஷாயினி, அகர்ஷியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (20.01.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**66/2, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**T.P 021 222 8834**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
16 . 04 . 1938

மறைவு
30 . 01 . 2019

கிளிநொச்சி - பளை, புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, உக்குளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கடந்த 30.01.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

# அமரர் மயில்வாகனம் தம்பித்துரை

**மாதங்கள் பன்னிரண்டு மறைந்திடினும்**
**மாறுமோ எம்துயர், மாண்டுவிடவில்லை**
**நீங்கள் எம் மனங்களில் மறையாது**
**என்றும் வாழ்கின்றீர்கள்**
**ஐயா ஐயா என்றழைக்க குடும்பமும்**
**பிள்ளைகளும் ஏங்கி நிற்கின்றார்கள்.**

இன்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது குடும்பத்தலைவரின் முதலாம் ஆண்டு சிரார்த்ததினம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**326/6 மில் வீதி, முதலாம் ஒழுங்கை, உக்குளாங்குளம், வவுனியா.**

**குடும்பத்தினர்.**

(CS 29872)(14.17)



# திருமதி யோகராணி நடராஜா

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி நடராஜா கடந்த 16.01.2020 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் மருமகளும், சச்சிதானந்தன், திருஞானசோதி, சுசிலாதேவி, சிவசோதி, காலஞ்சென்ற ஞானபண்டிதன் மற்றும் ஜெயராஜா, வரதராஜா, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் குகதாசன், சிவதாசன், வசந்தி, நிரஞ்சி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம் (மலேசியா), இரத்தினம் (கோண்டாவில்) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் மத்திய கல்லூரி வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.** (IN/12150)(11,17)

**தகவல்:- குடும்பத்தினர்.**

**021 224 1581**

## மரண அறிவித்தல்



மலர்வு
26 . 03 . 1934

மறைவு
17 . 01 . 2020

# அம்பலவாணர் குமாரசாமி

*(ஓய்வு நிலை பிரதம கணக்காய்வாளர் - ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபை. தர்மகர்த்தா - மிருசுவில் கோயிற்குளம் கொட்டகை அம்மன் கோவில். சமாதான நீதவான் தெஹிவளை - கல்கிசை.)*

*Chairman J.V. International (Pvt) Ltd- Ratmalanai*

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்தவரும் தற்போது மிருசுவிலில் வசித்து வந்தவருமான அம்பலவாணர் குமாரசாமி 17.01.2020 அன்று மிருசுவிலில் இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - கண்மணிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் புஷ்பராணியின் அன்புக் கணவரும் சுயா (கனடா), சுமதி (கொழும்பு புனித அந்தோனியார் ம.வி. கொழும்பு- 03), சூரியகுமார் (சுரேஸ் - கனடா), சந்திரகுமார் (ரமேஸ் - பிரான்ஸ்), சத்தியகுமார் (கணக்காளர் - நிதி அமைச்சு) , ஜெயக்குமார்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் துரைசிங்கம், சிவமோகன், சரஸ்வதி, சாமினி, கோமதி அகிலாவதி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கற்பகம், வள்ளிப்பிள்ளை, நமசிவாயம் ஆகியோரின் அன்பு சகோதரனும் தினேஸ், திவ்வியா, அபிலாஸ், ஆகாஸ், ஆஷினி, அபிரா, ஆருஜன், ஜஸ்னி, ஜெனிஷ், ஜெனிதன் லக்ஷிதா, பிறீத்தா, டிலூஷா, டிலக்ஸி, ஜெனிஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.01.2020) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு மிருசுவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில் வடக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**“ செல்வபவனம்” மிருசுவில் வடக்கு, மிருசுவில்.**

**தகவல்: சத்தியகுமார் (மகன்)**
**071 119 3053**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**மோட்சலிங்கம் செல்லம்மா**



தோற்றம்
10.05.1942

மறைவு
21.01.2016

ஆயிரம் சொந்தங்கள் அணைத்திட இருந்தாலும்.....
அன்னையே! உன் போன்று அன்பு செய்ய
யாரும் இல்லை இவ் உலகில்....
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26.03.1942 — மறைவு 01.02.2019



**திரு.கணபதிப்பிள்ளை சிவலோகநாதன்**

திதி : 21.01.2020

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம்துயரம்
ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - உம்
நினைவுகள் எம் நெஞ்சங்களில் நீங்காது நிலைத்திருக்கும்

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை**
**அன்னதான மண்டபத்தில் மதிய உணவு வழங்கப்படும்.**

தகவல் : குடும்பத்தினர் (சி.32561)

## மரண அறிவித்தல்

தோற்றம் 16.04.1950 — மறைவு 18.01.2020



**திருமதி புஸ்பவதி முத்தையா**

ஈவினை, புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி முத்தையா நேற்று (18.01.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மனைவியும், புஸ்பாஜினி, சவுதாயினி, முருகதாஸ், லவதாஸ், நாக நிரோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ரவிச்சந்திரன், விக்னேஸ்வரன், தர்சினி, மஞ்சுளா, சிவகுகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராசையா, பரராஜசிங்கம், குணசிங்கம், பூபாலசிங்கம், செல்லத்துரை, பூபதி மற்றும் புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நரேஸ்மா, யஸ்வீன், சஸ்வியா, யஸ்வியா, யதுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை, புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
குடும்பத்தினர்.

0777 168 573, 076 6370 927, 077 60 90012

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய
எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14.03.1932 — உதிர்வு 30.01.2019



திருமதி லயன் சீமாட்டி

**சரஸ்வதி பரமசிவம்**

திதி: 19.01.2020

அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து இருள் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பில் உம் வதனம்
என்றும் மகிழ்ந்திருந்தோம் இன்று வாடுகின்றோம்!
ஒவ்வொரு கணமும் உம் நினைவில் வாழ்கிறோம்
இதய மலரில் என்றென்றும் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றென்றும் நினைவுகளுடன்
லயன். வ.பரமசிவம்.ஜே.பி
குடும்பத்தினர்.

128, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



**செல்வி கதிரிப்பிள்ளை இராணி மலர்**

உடுவில் மேற்கு உடுவிலைப்பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி கதிரிப்பிள்ளை இராணிமலர் கடந்த (16.01.2020) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை இராசமணி தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான லிங்கேஸ்வரன், பரமேஸ்வரி (வவி) மற்றும் லோகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற ஜெயந்திமாலா, வனஜா, ஆகியோரின் மைத்துனியும் ராஜ்குமார், மதுஷங்கன், நிவாஷினி, மதுநிசன் ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் உடுவிலில் உள்ள அவரது உறவினர் பாஸ்கரன் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புல இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பாஸ்கரன் குடும்பத்தினர்

## வேலையாள்கள் தேவை

வயது எல்லை 21-50
ஆண், பெண் இருபாலாரும்.
அலுவலகத்தில் சுத்திகரிப்புப் பணியை செய்வதற்கு யாழ் மாநகர சபைக்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது.

தொடர்பு - 077 497 5 962

## வேலையாள்கள் தேவை

கொங்கிறீற் கல் அரியும் இயந்திரத்தில் கல் அரிய இருவரும் அத்துடன் இரண்டு மேசனும், கூலியாள்களும் தேவை.
இடம்: கோப்பாய் சந்தி

T.P 075 079 9222, 076 008 5751

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் 4பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

077 6778359/ 077 4167634

## பணிப்பெண் தேவை

மானிப்பாயில் வசித்துவரும் வயோதிப பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து அவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் தேவையாக உள்ளார். 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் மற்றும் முன்அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 077 045 6898

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் விருந்தினர் விடுதி ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. (Room boys) சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

077 192 3607

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன்தேவை.

076 584 3344

## Group class

**தரம்: 4 - 5**
**மாணவர்களுக்கானது**
பிரபல ஆசிரியர்

077 320 0884

## தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல
**ஹாட்வெயர் கடைக்கு கணக்காளர்** (பெண்) (21-25)
வேலையாள் (ஆண்) (22.30)

077 507 8272

## வீடு, காணி விற்பனைக்கு

கே.கே.எஸ் வீதி, கொக்குவிலில் (செல்வமஹால் திருமண மண்டபத்திற்கு அருகில்) வீட்டுடன் கூடிய $3\frac{1}{4}$ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தேவையைப் பொறுத்து இரண்டாகவும் பிரித்துக் கொடுக்கலாம். தரகர் தேவையில்லை.

075 927 9902

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் உள்ள பிரபல மோட்டார் சைக்கிள் சேவை நிலையத்திற்கு மெக்கானிக் அனுபவம் உள்ளோர் மற்றும் உதவியாளர்கள் தேவை.

தொடர்பு: 077 486 9567

## காணி தேவை

பின்வரும் நகரப்பிரதேசங்களில் 4 பரப்புக்காணி தேவைப்படுகின்றது.

- சாவகச்சேரி
- அச்சுவேலி
- சுன்னாகம்
- மருதனார்மடம்
- மானிப்பாய்
- உரும்பிராய்
- கொக்குவில்
- மல்லாகம்

தொடர்புகளுக்கு - 077 015 0738

## வேலையாள் தேவை

**முறுகண்டியில் இயங்கும்**
**ஐஸ்கிறீம்**
**உற்பத்தி நிறுவனத்துக்கு**

- கணக்காளர்
- சுத்திகரிப்பாளர்
- காசாளர் (Cashier)
- விற்பனை பிரதிநிதி

உடன் தேவை (இருபாலாரும்)

077 386 6250

### சி.ஐ.டி...

டப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பின்னிரவு, வீட்டுக்கு முன்பாக சந்தேகத்துக்கிடமாக மூவர் நின்றுள்ளனர். வீட்டு உரிமையாளரான ஓய்வு பெற்ற அதிபர் அவர்களிடம் கேட்டபோது, தாம் பொலிஸ் சிஐடி என்றும் கஞ்சா விற்பனையில் ஈடுபடுபவர்கள் இந்தப் பகுதியால் சென்றதாகவும், அவர்களைத் தேடியே வந்ததாகவும் பதிலளித்தனர். இந்தப் பகுதியால் யாரும் அவ்வாறு வரவில்லை எனக் கூறி அவர்களை அனுப்பி வைத்தார். சில நிமிடங்கள் கழித்து வீட்டுக்கு அண்மையில் சத்தம் கேட்பதை உணர்ந்த வீட்டு உரிமையாளர் வீட்டுக் கதவைத்திறந்த போது, முகத்தை கறுப்புத் துணியால் மூடிக்கட்டிய இருவரும் முகத்தை மூடாது ஒருவருமாக மூவர் அவரின் கழுத்தில் கத்தியை வைத்து அச்சுறுத்தினர்.

அவரையும், அவரது மனைவியையும் அறையில் அடைத்தனர். அதிபரின் மனைவி அணிந்திருந்த தோடு சங்கிலி உட்பட வீட்டில் இருந்த 10 பவுண் நகைகளையும், வீட்டில் இருந்த 5 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்து விட்டுத் தப்பிச் சென்று விட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ,ந21,26,173)

### ராணுவத்தால்...

இடையே கடந்த தைப்பொங்கல் நாள் அன்று ஏற்பட்ட முறுகல் சம்பவம் தொடர்பில் நேற்று மற்றொரு இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். இரண்டு இளைஞர்கள் இராணுவத்தினரால் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினருக்கும், நாகர்கோவில் இளைஞர்களுக்கும் இடையில் கடந்த தைப் பொங்கல் நாளான 15ஆம் திகதி முரண்பாடு ஏற்பட்டிருந்தது. இராணுவத்தினருடன் முரண்பட்ட இளைஞர்களைத் தேடி சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாகர்கோவிலை முற்றுகையிட்ட இராணுவத்தினர் வீடு வீடாகச் சோதனை நடத்தினர். இதன்போது 4 இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டார். அதன் பின்னரும் இராணுவம் தேடுதலை தொடர்ந்து முன்னெடுத்தது. இந்த நிலையில் நேற்றைய தினம் இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான். அவனைப் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கவுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ஒ,5,160)

### பருத்தித்துறையில்...

களவாடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நகரை அண்டிய கிராம அலுவலருடைய வீட்டில் நேற்று முன்தினம் பிற்பகல் திருட்டு இடம்பெற்றுள்ளது. வீட்டில் யாரும் இல்லாத அரைமணி நேரத்துக்குள், வீட்டின் கதவை உடைத்து, வெளிநாட்டுப்பணம் ரூபா 90 ஆயிரம் மற்றும் பிள்ளைகளின் உண்டியல் பணம் உட்பட மேலும் 30 ஆயிரம் ரூபா என்று ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா திருடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை மாதனையில் உள்ள வீடொன்றிலும் வீட்டின் கதவு உடைத்து திருடப்பட்டுள்ளது. வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்தபோது, வீட்டின் கதவு உடைத்து 5 பவுண் நகை மற்றும் வீட்டில் இருந்த 5 ஆயிரம் ரூபா பணம் என்பன திருட்டுப் போயுள்ளது. திருடர்கள் வீட்டின் பின்புறமாக உள்ள கதவு வழியாக தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் குறித்தும் பருத்தித்துறைப் பொலிஸில் முறைபாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த இரு சம்பவங்கள் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.ந-26)

### 3 பேரை...

நாகர்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று சிறுவர்களை நேற்று இரவிலிருந்து காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

விளையாடுவதற்குச் சென்ற சிறுவர்கள் மூன்று பேர் நேற்று இரவு வரையில் வீடு திரும்பவில்லை. அவர்களைத் தேடும் பணி நேற்று நள்ளிரவு வரையில் தொடர்ந்தது.

இராணுவத்தினரால் அந்தப் பகுதியில் தொடர் தேடுதல் நடத்தப்பட்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்ற சூழலில் சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களின் பெற்றோர், உறவினர்கள் நேற்று இரவிரவாகத் தேடுதல் முன்னெடுத்தனர். பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

(ஒ,5,26)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் பணிப்பாளர்
**கலாநிதி N. தணிகாசலம்பிள்ளை**
அவர்களின் பாசமிகு துணைவியார்
**தணிகாசலம்பிள்ளை சுபத்திராதேவி**
அவர்கள் கடந்த (15.01.2020) புதன் கிழமை இறைபதம் எய்திவிட்டார்.
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இணைப்பாளர், விரிவுரையாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள்,**
**தொழில்சார்கற்கைகள் நிறுவனம்.**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



மண் மகிழ 02.01.1938 — கண் நெகிழ 18.01.2020

**கணேசு ஐயா தனபாக்கியம்**

அளவெட்டியை பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு ஐயா தனபாக்கியம் நேற்று **(18.01.2020)** சனிக்கிழமை அதிகாலை **4.25** மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புளியடி வைரவர் வீதி, உடுவில்.**
**077 949 4602**
**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 | | 15 |
| 01 |  | 01 |
| 1945 | | 2020 |

**திருமதி.**
**தணிகாசலம்பிள்ளை சுபத்திராதேவி**

திருமதி. தணிகாசலம்பிள்ளை சுபத்திராதேவி யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை இல. 27, உருத்திரா மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தணிகாசலம்பிள்ளை சுபத்திராதேவி 15.01.2020 புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை (கல்விஅமைச்சின் முதுநிலை கல்வி ஆலோசகர் - ஓய்வுநிலை), அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசதுரை இராசம்மா தம்பதியரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்ற நாகமுத்து தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் அமரர் Dr.தில்லைநாதன். அமரர். சிவகுருநாதன். சண்முகநாதன் (முன்னாள் கிராம சேவகர் முரசுமோட்டை), அமரர் சிவானந்தன். அமரர் பரமானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும். Dr. சுசிதரன் (புற்று நோய் வைத்தியசாலை - தெல்லிப்பளை, தற்போது தேசிய வைத்தியசாலை , கொழும்பு), Eng. நந்தனன் - (Chairman- Land maark Engineering (Pvt) Ltd) சுதந்தி (Australia), தர்சினி (ஆசிரியை - கொழும்பு இந்துக்கல்லூரி), Accountant தணிகைபாலன் (Australia), ஆகியோரின் பாசமிகு தாயாரும் Dr. துஷ்யந்தி (களுபோவில வைத்தியசாலை), Eng.சுகந்தினி, நரேந்திரன் (Lead Estimator-Australia), ஜயந்திரன் (வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு), சௌமியா (Australia), ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,ஶ்ரீராம், ரகுராம், சிவாணி, தணிந்தன், ஜயதரன், சேதுசன், காணுஜன், பிரணிதன், நிகாஷன், தணிசா, தணிசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17.01.2020 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பகல் 12.30 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலை Lotus Halls அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2020) ஞாயிற்றுக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

தகவல்: குடும்பத்தினர் Tel: 0773506526 / 0766449298 / 0777316273

## மரண அறிவித்தல்



**திருமதி**
**அன்னம்மா சிவயோகலிங்கம்**

எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சிவயோகலிங்கம் 17.01.2020 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிலம்பு - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவயோகலிங்கத்தின் அன்பு மனைவியும் பேபி ரெஜீனா (ஜேர்மனி), பேபிலதா, பேபிறதிகா (லண்டன்), வாசுகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவஞானம் (U.K.) நாகரத்தினம், இலட்சுமணன் (லண்டன்), ஜெயச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஸிகா, லக்சிகன், லதிக்கா (ஜேர்மனி ), புகல்யா, சிந்துஜன் லண்டனில் வதியும் அபிலாஸ், அபர்ணா, அஜிநாத், அஜிதா, அன்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வள்ளிப்பிள்ளை, கனகம்மா, யோகம்மா, மகேஸ்வரி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் நவரத்தினம், செல்லமுத்து, சிவராசா ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற அப்புக்குட்டி மற்றும் கந்தையா, காலஞ்சென்ற நடராசா மற்றும் இராசகிளி, பராசக்தி, ஶ்ரீதரன், சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எழுதுமட்டுவாழ் இராமியன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 30290)(14.17)

**உதவியாளர் தேவை**
தனியார் நிறுவனம் ஒன்றிற்கு
பெண் உதவியாளர்
உடன் தேவை
**தொடர்பு: 077 742 1977**

**வீடு வாடகைக்கு**
கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு (புகையிரத நிலையத்தில் இருந்து 200m தொலைவில்)
**தொடர்பு - 071 622 4398**

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் **K.K.S Road** இல் (முட்டாஸ் கடைச்சந்தி) 292 ம் இலக்கத்தையுடைய கடையுடன் கூடிய 10 பேர்ச் நிலப்பரப்பு விற்பனைக்கு உண்டு.
முகப்பு 20 அடி. நீளம் 120 அடி
**தொடர்பு: 077 757 0293**

**குத்தகைக்கு**
இராசபாதையில் மாடு, ஆடு, கோழி, வளர்ப்பதற்கு (25'X100' இரண்டு கொட்டகை உள்ளது) ஏற்ற வகையில் கட்டுமானங்களுடன் குத்தகை உடன்படிக்கைக்கு உள்ளது.
**தொடர்பு - 077 773 0567**

## பணியாளர்கள் தேவை

PGT Finance நிறுவனத்தில் பணிபுரிய பணவசூலிப்பாளர்கள் தேவை. கல்வித்தகைமை மற்றும் இருசக்கரவாகனம் (மோட்டார் சைக்கிள்) இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு : கொடிகாமம் பருத்தித்துறை றோட், (கொமர்ஷல் வங்கி அருகில்)
077 719 8380/ 021 314 9797

## விநியோகஸ்தர்கள் தேவை

UNIFIELD

அதிசுத்தமான குடிநீர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு நாடளாவிய ரீதியில் விநியோகஸ்தர்கள் தேவை.

நேரடியான கொள்முதலுக்கு விஷேட விலைக்கழிவும் சலுகையும் வழங்கப்படும்.

Hotline: 0777 764 079 / 0777 325 233
Factory - Upcot - Maskeliya : 051 2235019 / 071 5204616

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள வெக்வேகன் கார் விற்பனைக்கு
தொடர்பு - 077 269 1212

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஆங்கில எழுத்து தொடர் கொண்ட லான்சர், 50. (யப்பான்)
077 662 1660

யாழ் நகரில் இயங்கும் சுப்பர் மார்க்கட் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை


- காசாளர் - பெண்
- பொதி சுமப்பவர் - ஆண் (பொருள்களை ஏற்றி இறக்குபவர்)

T.P 077 477 3481, 021 492 7080

## இலவச பாடநெறி

- முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி
- உளவியலும் உளவளதுணையும்
- ஆசிரியர் பயிற்சி நெறி
- ஆங்கிலம்
- திறன் அபிவிருத்தி பயிற்சி

மேலதிக விவரங்களுக்கு:-
AMAZON COLLEGE
87, Kandy Road, Jaffna.
(Opposite of Old Park)
Tel: 077 270 3494



கொழும்புத்துறை, நெடுங்குளம் மற்றும் அதனை அண்டிய பிரதேசத்தில் வறுமையில் உள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக "யாழ்சேரன் கல்வி வளர்ச்சிக் கழகம்" நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. (ஐ)

## உடன் இணையுங்கள்

சாதாரணதர பரீட்சை முடிவுகள் வெளிவர முன்னர் 2020 ஜனவரி மாணவர் பதிவுகளுக்கு

aat
SRI LANKA



A/L வணிகப்பிரிவில் கற்கவிருக்கும் மாணவர்களுக்கு AAT கற்கைநெறி மிகவும் உதவக்கூடியதாகும்

மாணவர்கள் உயர்தர பரீட்சைக்கு 01 வருடத்திற்கு முன்னதாக AAT கற்கைநெறியினை பூர்த்தி செய்ய முடிவதுடன் CA Sri Lanka பாடத்திட்டத்தில் வணிகமட்டம் 01 (Business Level 01) இல் 05 பாடங்களையும் வணிகமட்டம் 02 (Business Level 02) இல் 02 பாடங்களையும் விலக்களிப்பின் மூலம் பெற்று உயர்தரத்தின் பின்னர் இலங்கை பட்டயகணக்கறிஞர் (CA Sri Lanka) கற்கைநெறியை தொடர உதவுகின்றது.

AAT என்பது ஒரு தொழில்சார் கணக்கீட்டு கற்கைநெறி

- மூன்று பிரதான மொழிகளிலும் கற்க முடியும்
- முழு இலங்கையிலும் 106 அங்கீகாரமளிக்கப்பட்ட கல்வி நிலையங்கள்
- ஆகக்குறைந்த நுழைவுத்தகைமை சாதாரணதரத்தில் 06 பாடங்களில் சித்தி

நீங்கள் AAT உறுப்புரிமையை பெறுவதன் மூலம் குருணு பல்கலைக்கழகத்தில் MBA MA இற்கு விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் IPA - Australia மற்றும் IFA - United Kingdom ஆகிய நிறுவனங்களின் நேரடியாக உறுப்புரிமையை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

## இன்றே பதிவு செய்யுங்கள்...!

இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்
AAT நிலையம், இல. 540, வண. முருந்தெட்டுவே ஆனந்த நாகிமி மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.

யாழ் கிளை அலுவலகம்
021 7 559 669
www.aatsl.lk | 0777 559 669

AATSriLankaOfficial | 0777 559 669 | AAT Sri Lanka Official | 0777 559 669, 0112 559 669 | AAT_Sri Lanka | AATSri Lanka

## இலவச கருத்தரங்கு

ஆரோக்கியமான வாழ்க்கை முறையும் நவீன கற்பித்தல் முறையும்

காலம்: 26.01.2020 (ஞாயிறு)
நேரம் : பி.ப 02 மணி - 05 மணி வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் (யாழ்ப்பாணம்)

தலைப்புக்கள்:-
1. நோயின்றி எவ்வாறு வாழ்தல்
2. நோய்களுக்கான அடிப்படை காரணங்கள்
3. நோயிலிருந்து எவ்வாறு பாதுகாப்பை பெறுவது
4. திறமையான கற்பித்தல் முறைகள்
5. உளவியலின் முக்கியத்துவம்

மேலதிக விவரங்களுக்கு:
077 270 3758 | 021 561 2151
ஏற்பாடு: AMAZON COLLEGE
87, Kandy Road, Jaffna. (Opposite of Old Park)

## இலவச கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

காலம்: 26.01.2020 (ஞாயிறு)
நேரம் : 9 மணி - 12 மணி
இடம் : வீரசிங்கம் மண்டபம் (யாழ்ப்பாணம்)

வருகைதரும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்

1. எதிர்காலத்தின் சிறந்த துறைகள் எவை?
2. புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்கும் முறைகள்
3. குறுகிய காலத்தில் எவ்வாறு பட்டப்படிப்பினை நிறைவு செய்வது?
4. உள்நாட்டு வெளிநாட்டு தொழில் உயர்கல்வி வேலைவாய்ப்புகள்.

மேலதிக விவரங்களுக்கு:
077 270 3758 | 021 561 2151
ஏற்பாடு: AMAZON COLLEGE
87, Kandy Road, Jaffna. (Opposite of Old Park)

## வல்வை ஆண்கள் பெண்கள் முதியோர் இல்லம்

வல்வை ஆண்கள் முதியோர் இல்லம் முதியோருக்கான வசதிகளுடன் கூடிய புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் ஆண்கள் முதியோர் இல்லம், பெண்கள் முதியோர் இல்லம் ஆகியன தனித்தனியாக கடந்த சில ஆண்டுகளாக இயங்கிவருகின்றது.

நியாயமான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தி இந்த இல்லத்தில் இணைய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.

ஊரிக்காடு, வல்வெட்டித்துறை,
021 226 5551
077 810 6857, 077 154 2067

## அக்காவின்ர...

தானே வெண்டவா. அதால என்ன செய்யலாம் எண்டு அக்கா கனக்க யோசிச்சு, கடைசியா யானையில உலாத்தாமல், பேசாமல் 'வீட்டுக்க' போய் பாதுகாப்பா இருக்க பிளான் பண்ணினவா.

ஒருநாள் சொல்லாமல் கொள்ளாமல் 'பெரிய தலையின்ர' கொழும்பு வீட்டுக்கு அக்கா விசிட் பண்ணி இருக்கிறா. அங்க என்ன கதைச்சவா எண்டு வெளியில வராட்டியிலும், ' யானையை விடுறன், வீட்டுக்க இடம் தாங்கோ' எண்டு அக்கா கேட்டதாத்தான் கேள்வி. ஆனாலும் 'பெரிய தலை' அக்காவுக்கு ஓமெண்டு சொல்லேலப்போல. சிரிச்சுக் கொண்டு போன அக்கா, வரேக்க கொஞ்சம் அப்செட்டாத்தான் வந்தவா.

எண்டாலும் இன்னொரு பக்கத்தால , அக்கா வீட்டில போய் இருக்கப் போறா எண்டு , கதை வந்திட்டு. வீட்டுக்க இருக்கிற முக்கிய புள்ளி ஒண்டு 'சப்போர்ட்' எண்டும் வதந்தி வரத்தொடங்கிட்டு. உடனேயே அக்கா பதறித்துடிச்சு 'வந்தால் யானையில தான் வருவன்' எண்டு அறிக்கையெல்லாம் விட்டா. ஆருக்குத் தெரியும் அக்காவே கதையும் கட்டி, அறிக்கையும் விட்டிருக்கலாம்.

– முச்சந்தி முரளி–

## புதுடில்லியின்...

இதேவேளை, கடந்த வாரம் இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலர்களுள் ஒருவரான ராம் மகாதேவ், ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் மஹிந்த ஆகியோரைச் சந்தித்து இந்தியப் பிரதமர் மோடியின் முக்கிய செய்தியை வழங்கியிருந்த நிலையில், நேற்றைய தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல் தொடர்பாக இதன்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதுடன், இரு நாட்டு இராணுவத்தினருக்குமிடையே பலமான ஒத்துழைப்புகள், சமுத்திர பாதுகாப்பு, கரையோர பாதுகாப்பு படைகளுக்கிடையிலான புரிந்துணர்வு மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியாவுக்கிடையிலான சமுத்திர வலயம் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய இந்திய பாதுகாப்பு ஆலோசகர், ஏனைய பிராந்திய நாடுகளையும் கண்காணிப்பாளர்களாக இந்த செயற்பாட்டில் இணைத்துக்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

இரகசிய தகவல்களை ஒன்று திரட்டும் தொழில்நுட்பத்துக்கு இலங்கைக்கு உதவியளிக்க இந்தியா உறுதியளித்துள்ளது. பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் பலப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இலங்கை பாதுகாப்பு படையினருக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய அரசு வழங்கவுள்ளது. மேலும் பூகோள ஒருங்கிணைப்பு மையத்தை நிறுவுவது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, 2014ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்புத் துறைமுகத்துக்குச் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் வந்தமை தொடர்பில், இந்தியாவின் மோடி அரசுக்கும், ராஜபக்ஷ அரசுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. அப்போது பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்ஷ, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலுக்கு சீனநீர்மூழ்கிகள் கொழும்புக்கு வந்தமை தொடர்பில் விளக்கமளித்தபோதும் அவர் அதனைப் புரிந்து கொள்ளவில்லை என்று 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் பகிரங்கமாக விமர்சித்திருந்தார். இந்த நிலையில், கோத்தாபய ஜனாதிபதியான பின்னர் அஜித் டோவலை நேற்றைய தினம் சந்தித்துள்ளார்.

ஜனாதிபதியாக கோத்தாபய தெரிவு செய்யப்பட்ட பின்னர், அவர் முதல் தடவையாக இந்தியாவுக்கே பயணம் மேற்கொண்டிருந்தார். பிரதமர் மஹிந்தவும் அடுத்த மாதம் முதல் வாரம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## கூட்டமைப்புத்...

கொழும்பு, ஜன. 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டால், கொள்கை ரீதியாக அரசியல் பயணத்தில் இணைந்து செயற்படுவது தொடர்பில் பரிசீலிக்க முடியும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகம் சி. வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மாற்றமடையும் பட்சத்தில், மக்களின் நலன்கருதி பொது கொள்கையொன்றை முன்நிறுத்தி எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் கலந்துரையாடுவதற்கு தயாராகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஒ.5)

## அரசியல்...

சென்று பார்வையிட்டனர். இது தொடர்பில் அந்தக் கட்சியின் சட்டஆலோசகர் சட்டத்தரணி கே.சுகாஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

அரசிடம் சில கோரிக்கைகளை அவர்கள் எங்கள் ஊடாக முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, மிருசுவிலில் எட்டு பேரைக் கொலை செய்த குற்றத்துக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ அதிகாரிக்கு மன்னிப்பு வழங்கி விடுவித்திருக்கின்றார். அப்படியானால் அப்பாவிகளான எங்களை ஏன் விடுவிக்கக் கூடாது? என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

சுலக்சன் என்ற அரசியல் கைதி 11 ஆண்டுகளாக இந்தச் சிறையில் வாடுகின்றார். இவரை விட 11 பேர் இவ்வாறு இருக்கின்றனர். போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட இவர்களின் வழக்குகளும் நீண்ட காலத்துக்கு இழுத்தடிக்கப்படுகின்றது.

அவர்கள் எங்களிடம் மன்றாட்டமாக ஒரு விடயத்தைக் கேட்டார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பில் உயர் பதவிகளிலிருந்த கருணா அம்மான் போன்றோர் சுதந்திரமாகச் சுத்தித் திரிகின்றார்கள். அப்பாவிகளான எங்களை ஏன் இன்னமும் அடைத்து வைத்திருக்கின்றார்கள்? நான் ஒரு சட்டத்தரணி என்ற அடிப்படையில், அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கி விடுவிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. இது போன்று கடந்த காலங்களில் இலங்கையில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்த ஜே.வி.பியினருக்கு கடந்த காலங்களில் மன்னிப்பு வழங்கப்பட்டது. அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். இந்த முன்னுதாரணத்தைப் பயன்படுத்தி அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஏன் விடுதலை வழங்கக் கூடாது.

மன்னிப்பு வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் இருந்தால் ஆகக் குறைந்தது பிணையிலாவது அவர்களை விடுவிக்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை அவர்கள் எங்களிடம் முன்வைத்தார்கள். நாங்கள் ஊடகங்கள் ஊடாக அரசுக்கு முன்வைக்கின்றோம்- என்றார். (ஒ.5.20)

## முகாமுக்குள்...

நிலை ஏற்பட்டது. சம்பவம் தொடர்பில் அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நேற்றுக் காலை நேரில் சென்று கலந்துரையாடினார்.

சுழிபுரம் பாணாவெட்டிப் பகுதியில் தற்போது கள்ளுத் தவறணை ஒன்று உள்ளது. பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் அந்தக் கள்ளுத் தவறணை நீண்ட காலமாக இயங்கி வருகிறது. அந்தப் பகுதி தற்போது அதிகளவு மக்கள் வசிக்கும் இடமாக மாறியுள்ளது. அத்தோடு புதிய அபிவிருத்திப் பணிகளும் அங்கு இடம்பெறுகின்றன.

இந்த நிலையில் தவறணைக்கு வருபர்கள் மக்களுக்கு இடையூறு விளைவிக்கின்றார்கள் என்று கூறப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள வள்ளுவர் சனசமூக நிலையத்தைச் சேர்ந்தவர்கள் கள்ளுத் தவறணையை பாணாவெட்டிச் சந்தியிலிருந்து அகற்றுமாறு சங்கானைப் பிரதேச செயலகத்தைக் கோரி, மனுவொன்றையும் கையளித்திருந்தனர்.

பனை தென்னைக் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்தவர்களையும், சனசமூக நிலையத்தினரையும் அழைத்த பிரதேச செயலகம் அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தது. பனை தென்னைக் கூட்டுறவுச் சங்கத்தின் காணியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதால் பாணாவெட்டிப் பகுதியில் தற்காலிகமாகவே அந்தக் கள்ளுத் தவறணை இயங்குகிறது என்றவாதத்தை பனை தென்னை அபிவிருத்தி சங்கத்தினர் முன்வைத்தனர்.

நிலைமைகளை ஆராய்ந்த பிரதேச செயலகம் "பனை தென்னை அபிவிருத்தி சங்கத்துக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் விடுவிக்கும் வரை, பாணாவெட்டியில் உள்ள கள்ளுத்தவறணையால் மக்களுக்கு எந்தவித இடையூறுகளும் வரக்கூடாது. கள்ளுத்தவறணையின் சுகாதாரம் ஒழுங்காகப் பின்பற்றப்படவேண்டும்" என்ற அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தது.

சுழிபுரத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்று தெரிவித்தே வள்ளுவர் சனசமூக நிலையத்தினர் பிரதேச செயலகத்துக்கு மனுக் கொடுத்துள்ளனர். சனசமூக நிலையத்தில் உள்ள இளைஞர் ஒருவர்தான் இதற்கு சூத்திரதாரியாக உள்ளார் என்று இராணுவத்தினருக்கு சிலர் தகவல் வழங்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதன்பின்னர் சுழிபுரம் இராணுவ முகாமைச் சேர்ந்த இரண்டு இராணுவத்தினர் அந்த இளைஞரின் வீட்டை நேற்றுமுன்தினம் மாலை தேடிச் சென்றுள்ளனர். குறித்த இளைஞன் தொடர்பிலும் படையினர் விசாரித்துள்ளனர். இதனையடுத்து அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

போர்க் காலத்தில் வீடுகளைத் தேடிச் சென்று இராணுவம் விசாரணைகளில் ஈடுபடுவது போன்ற சம்பவமாகவே மக்கள் அந்தச் சம்பவத்தை பார்த்ததாகக் கூறினர்.

இராணுவத்தினரின் கண்களில் இளைஞர் சிக்காததால் ,அவருடன் அலைபேசியில் தொடர்புகொண்டு சுழிபுரம் இராணுவ முகாமுக்கு வருமாறு அழைத்துள்ளனர். இராணுவ முகாமுக்குச் சென்ற இளைஞரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இராணுவ முகாமை அகற்றுமாறு மனுக் கொடுக்கவில்லை என்பதை சனசமூக நிலையத்தின் சார்பில் எழுத்துமூலம் தருமாறு கோரி அதைப் பெற்றுக்கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இளைஞர் இது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கும் முறைப்பாடு வழங்கியுள்ளார்.

சம்பவங்களை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுக் காலை அங்கு சென்றார். இளைஞர்களிடம் அது தொடர்பில் விசாரித்தறிந்தார். இளைஞர்களை விசாரணைக்கு அழைக்கவேண்டிய அவசியம் இராணுவத்துக்கு இல்லை என்பதை தெளிவுபடுத்தினார். இளைஞர்களுக்கு இராணுவத்தால் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டால் உடன் அறியத் தருமாறும் தான் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் இளைஞர்களிடம் அவர் உறுதியளித்தார். (ஒ.5.21)

## கை முறிப்பு...

காவற்றுறைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர். அவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை நீதிவான் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,37)







# யூனியன் - சென்.நீக்கிலஸ் இறுதியில் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.19
யாழ்.கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியோடு கோண்டாவில் வடக்கு மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு கோண்டாவில் வடக்கு, மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7வீரர்கள் பங்கு பற்றும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)

# புனித லூசியா அபார வெற்றி

மன்னார்,ஜன.19
மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நானாட்டான் டைமன்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் நானாட்டான் டைமன்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில்பள்ளிமுனைபுனித லூசியா விளையாட்டுக் கழக ஏ அணிக்கும், சிறுக்கண்டல்புனிதஅந்தோனியார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பள்ளிமுனை புனித லூசியா விளையாட்டுக் கழக ஏ அணி 6 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

# சென் நியூஸ்ரார் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.19
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் சென் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும், நாமகள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென் நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)



# கரம் குழு போட்டி முடிவு


யாழ்ப்பாணம்,ஜன.19
நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் கரம் பெண்கள் அணிக்கான குழுப் போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கத்தையும், ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர். (23)



# குத்துச் சண்டை வீரர்களுக்கு விசேட வழிபாடு

வவுனியா,ஜன.19
பாகிஸ்தானில் எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ள சர்வதேச குத்துச்சண்டை போட்டிக்கு வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்து விளையாடவுள்ள வவுனியாவை சேர்ந்த 7 குத்துச்சண்டை வீரர்களுக்கும் ஆசி வேண்டி விசேட பூஜை நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

இதில், வடக்கு மாகாண ஏழாம் அறிவு தற்காப்பு கலை சங்கத்தின் தலைவரும், கிக் பொக்சிங் பயிற்றுவிப்பாளருமான எஸ்.நந்தகுமார் மற்றும் வீரர்கள் உட்பட அவர்களின் பெற்றோர்கள், சமூக சேவையாளரான க.சந்திரகுமார் கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு வீரர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர். (110)



# சதுரங்க போட்டி முடிவு

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான சதுரங்க போட்டியில் கல்வியங்காடு சம்பியன் விளையாட்டுக் கழக அணி வீராங்கனை சி.பிரணவி தங்கப் பதக்கத்தையும், நண்பர்கள் விளையாட்டுக்கழகஅணி வீராங்கனை வ.தஸ்யகி வெள்ளிப் பதக்கத்தையும், கல்வியங்காடு சம்பியன் விளையாட்டுக் கழக அணி வீராங்கனை சி.ஹம்ஷாளினி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர். (23)



## மதிப்பளிப்பு

வடமராட்சி வலய வர்ண இரவுகள் நிகழ்வில் மாகாண மட்ட வலைப்பந்தாட்டத்தில் வெண்கலப் பதக்கம் வென்ற பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வடமாகாண உடற்கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர் .இராஜசீலனால் மதிப்பளிக்கப்பட்டனர். (108)



# இந்தியா - ஆஸி. இறுதியில்
# வெல்லப் போவது யார்?

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இறுதி ஒருநாள் போட்டி இன்று பெங்களூரில் இடம்பெறவுள்ளது.
ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகின்றது.
இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் காணப்படுவதால் இறுதிப் போட்டியில் வெல்லும் அணியே தொடரைக் கைப்பற்றும் என்பதால் இறுதிப் போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. முதலாவது ஒருநாள் போட்டியை ஆஸ்திரேலியா அணி மிக இலகுவாகக் கைபற்றியது. இரண்டாவது போட்டியை இந்திய அணி இமாலய இலக்கை நிர்ணயித்ததால் மயிரிழையில் தப்பியது. இந்த நிலையில் இன்று இறுதிப் போட்டி இடம்பெறவுள்ளது.
ஆஸ்திரேலியா அணி பலம் வாய்ந்ததாக திகழ்வதால் அந்த அணியை தோற்கடிக்க இந்திய அணி கடுமையாகப் போராட வேண்டும். இரவில் பனித்துளி அதிகமாக இருப்பதால் 'டாஸ்' முக்கிய பங்கு வகிக்கும். இதனால் டாஸ் வெல்லும் அணி 'சேசிங்' செய்யவே விரும்பும். பனித்துளியால் ஈரப்பதம் இருக்கும் என்பதால் 2ஆவதாக பந்து வீசுவது சவாலானது.




இந்திய அணியைப் பொறுத்த மட்டில் ஆரம்பத்தில் களமிறங்கும் 4 துடுப்பாட்ட வீரர்களும் ரன்களை குவிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இவர்கள் அடிக்கும் ரன்களே அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றும். ஏனைய வீரர்கள் இரண்டு போட்டியிலும் பெரிதாக சோபிக்கவில்லை.
ஆஸ்திரேலியா அணியைப் பொறுத்தவரையில் பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் சமபலத்துடன் இருக்கிறது. பேட்டிங்கில் கேப்டன் ஆரோன் பிஞ்ச், வோர்னர், சிமித், லபுஷ்சேன், அலெக்ஸ்கேரி ஆகியோரும், பந்து வீச்சில் ஸ்டார்க், கம்மின்ஸ், ரிச்சர்ட்சன், ஆடம்ஜம்பா ஆகியோர் அணிக்கு பெரும் பலம். துடுப்பாட்டத்தில் ஒருவர் நிலைத்து நின்று விட்டாலே ரன் குவிப்பை கட்டுப்படுத்த முடியாது.
இன்று நடக்கவுள்ள போட்டி இரு அணிகளுக்கிடையேயான 140 ஆவது ஒருநாள் போட்டியாகும். இதில் இந்தியஅணி 51 போட்டிகளிலும், ஆஸ்திரேலியா அணி 78 போட்டிகளிலும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. 10 போட்டிகள் முடிவு இல்லை.



## காஜிசோ ரபாடாவின் தடைக்கு முன்னாள் வீரர்கள் கண்டனம்

ரபாடாவின் தடைக்கு முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலர் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.
இங்கிலாந்துக்கு எதிராக இடம்பெற்று வரும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து கேப்டன் ஜோ ரூட்டை ஆட்டமிழப்பு செய்ய பின்னர் ரபாடா நடந்து கொண்ட விதத்துக்காக அவருக்கு ஐசிசி இறுதிப் போட்டியில் விளையாட தடை விதித்ததுடன் அபாராதமும் விதிக்கப்பட்டது.
ரபாடா மீதான இந்தத் தடை அபத்தமானது என ஆஸ்திரேலியா முன்னாள் வீரர் பிரட் லீ தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் தெரிவிக்கையில்;
கிரிக்கெட்டை ஒரு விளையாட்டு உணர்வோடு விளையாட வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் விக்கெட்டை வீழ்த்திய பின்னர் ரபாடா கொண்டாட்டத்தில் ஈடுபட்டமைக்காக தடை விதிப்பதென்பது அபத்தமானது. அவரது வேட்கையை நான் ரசிக்கின்றேன் - என்றார்.
இது குறித்து இங்கிலாந்து முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன் தெரிவிக்கையில்; உலகின் சிறந்த வீரரின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியை கொண்டாடியதற்காக ஒரு போட்டிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது முட்டாள்தனமானது. பந்து வீச அதிக நேரம் எடுத்துக் கொண்டதற்கு நடவடிக்கை இல்லை. ஆனால் விக்கெட் வீழ்த்தியதை கொண்டாடியதற்கு கடுமையான தண்டனையா?' என்று கேள்வி எழுப்பினார்.

## பாபு நட்கர்னி சாவடைந்தார்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஆல்ரவுண்டர் பாபு நட்கர்னி நேற்று மும்பையில் சாவடைந்தார். அவருக்கு வயது 86.
இவர் 41 டெஸ்ட் போட்டிகளில் 88 விக்கெட் 1,414 ரன்களையும் பெற்றுள்ளார். இவர் இடது கை சுழற்பந்து வீச்சாளராவார்.
1964ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் தொடர்ச்சியாக 21 மெய்டன் ஓவர்கள் வீசி சாதனை படைத்தார். அந்த இன்னிங்சில் அவர் 32 ஓவர்கள் பந்து வீசி 27 மெய்டனுடன் வெறும் 5 ரன் மட்டுமே விட்டுக்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# இறுதிப் போட்டியில் ஆட ரபாடாவுக்கு தடை
## விதித்தது ஐசிசி

தென்னாபிரிக்கா அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா இங்கிலாந்துக்கு எதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாட ஐசிசி தடை விதித்துள்ளது.
போர்ட்எலிசபெத்தில் நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் கேப்டன் ஜோ ரூட்டை கிளீன் போல்டு செய்த ரபடா, விக்கெட் சாய்த்த உற்சாகத்தில் அவர் அருகில் சென்று ஆக்ரோஷமாக கத்தினார். எதிரணி வீரரை கோபமூட்டும் மற்றும் எரிச்சலூட்டும் வகையில் நடந்து கொண்டதாக குற்றம் ஐசிசி ரபடாவுக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 15 சதவீதம் அபராதமாக விதித்ததோடு மேலும் ஒரு தகுதி இழப்பு புள்ளியும் விதிக்கப்பட்டது.
இதையடுத்து அவரது தகுதி இழப்பு புள்ளி எண்ணிக்கை 4 ஆக உயர்ந்தது. இரண்டு ஆண்டுகளில் 4 தகுதி இழப்பு புள்ளியை எட்டும்போது ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும். இதன் படி ரபாடா இங்கிலாந்துக்கு எதிராக எதிர்வரும் 24ஆம் திகதி ஜோகனஸ்பர்க்கில் ஆரம்பமாகும் இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாட முடியாது.

### ஹோபார்ட் சர்வதேச ரென்னிஸில்
# சானியா இணை கிண்ணம் வென்றது

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் ஹோபார்ட் சர்வதேச ரென்னிஸ் தொடரில், சானியா மிர்சா இணை சம்பியன் வென்றுள்ளது.
ஹோபார்ட் சர்வதேச ரென்னிஸ்போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றது. கடந்த 2 ஆண்டுகளாக ரென்னிசை விட்டு விலகி இருந்த இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா இந்த போட்டியின் மூலம் மறுபிரவேசம் செய்து ஆடி வந்தார்.
இந்தத் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில், சானியா மிர்சா உக்ரைன் வீராங்கனையான நாடியா கிச்செனோக்குடன் இணைந்து சிறப்பாக விளையாடினார். லீக் போட்டிகளில் எளிதாக வென்ற சானியா இணை, நாக்அவுட் சுற்றுகளிலும் அசத்தி, இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.
இந் நிலையில், நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் சானியா -நாடியா இணை, சீனாவின் சாங் ஷ்வாய்- பெங் ஷ்வாய் இணையை எதிர்கொண்டது. போட்டியின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சானியா இணை, 6:4, 6:4 என்ற நேர்செட்களில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.



# கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.க. வாகை

யாழ்ப்பாணம், ஜன.19
வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.
இதில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் வர்மன், சிவதரன் ஆகியோர் தலா 2 கோல்களையும், ஈழவேந்தன் ஓர் கோலையும் பதிவு செய்தனர். (23)



**கார் விற்பனைக்குண்டு**
TATA இன்ரிக்கா கார்
K.A.3068 விற்பனைக்குண்டு.
80/6, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
077 473 5502

**Room boy/Receptionist தேவை**
Guest House ஒன்றுக்கு Room boy (இரவு / முழுநேரம்) தேவை.
Receptionist (பெண்) தேவை.
(உணவு, தங்குமிடம் இலவசம்)
077 700 3617

**IELTS CLASSES**
யாழ் நகரில் கொழும்பு பல்கலைக்கழகம்.
ஆசிரியரினால் A1 exam (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை)
வெளிநாடு செல்வோருக்கான IELTS (Academic & General) English Grammer & Spoken English கற்பிக்கப்படுகின்றது.
புதிய மாணவர்கள் உடன் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
Unlimited Hours
Guranteed for 7.5 in IELTS Exam
Pass in A1 Exam
IELTS EXAM CENTRE
Please Contact :
077 780 3970/ 078 521 1351

**தைப்பொங்கலை முன்னிட்டு**
A4 இரண்டு பக்கங்கள் போட்டோ கொப்பி 2/=
தமிழ் மற்றும் ஆங்கிலம் Typing செய்து கொடுக்கப்படும்.
LUXON ENTERPRISE
No 77B, Kandy Road, Jaffna.
T.P.No:0774115335 Fax No: 021 222 5335

**Hotel சமையல் ஆள்கள் தேவை**
உணவகம் ஒன்றுக்கு சமையலில் முன்அனுபவம் உள்ள சமையல், றைஸ், கொத்து, றொட்டி வேலையில் திறமை மிக்க ஆள்கள் தேவை.
உடன் தொடர்புகளுக்கு
076 981 9241

**அறை வாடகைக்குண்டு**
கந்தர்மடம், மணல்தறை ஒழுங்கை (லேன்)யில் அறையொன்று வாடகைக்கு உண்டு. (யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அருகில்)
தரகர் தேவையில்லை
077 031 8173

மாதம் ரூபா.50000/- க்கு மேல் வருமானம் பெற
புதிய வருடத்தில்..
புதிய வியாபாரம்..!




தமிழில் தொடர்புகொள்ள 0773 918 870
WINRICH INTERNATIONAL (PVT) LTD
Colombo 03.

# பாக். செல்ல முஷ்பிகுர் ரஹிம் மறுப்பு

பங்களாதேஷ் அணி பாகிஸ்தானுக்குச் சென்று விளையாட சம்மதம் தெரிவித்துள்ள நிலையில், அனுபவ வீரரான முஷ்பிகுர் ரஹிம் விளையாட மறுப்பு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு காரணத்தை முன்னிறுத்தி ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் தொடரில் விளையாடத் தயார். டெஸ்ட் தொடரை பொதுவான இடத்தில் நடத்த வேண்டும் என பங்களாதேஷ் கோரிக்கை விடுத்தது.

பாகிஸ்தானின் தொடர் முயற்சியால் பங்களாதேஷ் அணி பாகிஸ்தான் சென்று விளையாட சம்மதம் தெரிவித்தது.

இந்த நிலையில் பங்களாதேஷ் அணியின் அனுபவ மற்றும் தலைசிறந்த பேட்ஸ்மேனுமான முஷ்பிகுர் ரஹிம் பாகிஸ்தான் செல்ல மறுத்துவிட்டார்.

ஏற்கனவே சாஹிப் அல் ஹசன் இல்லாத நிலையில், முஷ்பிகுர் ரஹிமின் முடிவு பங்களாதேஷ் அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

**Dream of Studying MBBS / MD**
China | Belarus | Latvia | Malaysia | Russia
Admission open for 2020 intake



SLMC Approved
Zhengzhou University - China
Dalian Medical University - China
Grodno State Medical University- Belarus
Riga Stradins University - Latvia
MAHSA University - Malaysia
International Medical University - Malaysia
First Moscow Medical University - Russia
Duration: 6 years Medium-English
Admissions : 077 301 3060
Jaffna : 77, Clock Tower Road, Jaffna
Colombo : 107, B-1/1 Galle Road, Colombo 06
ics Study Medicine Abroad

"Soft skills are responsible for 85% of job success" Harvard University

iLEAPclub
LEARN. ENGAGE. ACHIEVE. PROGRESS.

"Employees with soft skills are key to success" LinkedIn VP

**Soft Skills (மென்திறன்கள்) and Leadership (தலைமைத்துவம்) Children & Youth Program**

Proven Canadian Soft Skills Program. Now here in Jaffna at IIS City Campus!
Free Demo for Children! Workshop for Professionals! Training for Business Opportunities.

**Register NOW at IIS City Campus 021-222-8060/071-777-4111(Kamal)** 200 Sivanpannai Road, Jaffna

| Senior Level | Advanced Level | Business opportunity | Soft Skills & Leadership |
|---|---|---|---|
| (Grade 10 and below) FREE Demo<br>Wednesday, Jan 29<br>2:30 PM to 4:30 PM | (Grade 11, 12, University) FREE Demo<br>Thursday, Jan 30<br>2:30 PM to 4:30 PM | Become an iLEAPclub Facilitator<br>1 Day training<br>Qualifications: Fluent in English and a professional background<br>Friday, Jan 31<br>9:00 AM to 5:00 PM | (Professionals, A/L & university students)<br>1 Day Workshop<br>Saturday, Feb 1<br>9:00 PM to 5:00 PM<br>*Normally LKR 10,000 now 6,000* |

**How the iLEAP Club Program can help your Child:**
- Discover their inner leader.
- Boost self-confidence and self-respect.
- Improve their academic success.
- Build a solid foundation for a bright future.
- Boost their focus and mental acuity.
- Stand out from the crowd

**Your child will learn Over 112 Soft Skills:**
- Creative Thinking
- Critical Thinking
- Problem Solving
- Conflict Resolution
- Interpersonal Skills
- Negotiation Skills
- Emotional Intelligence Skills
- Job Interview Skills
- Professional Promotions
- Presenting Yourself
- Leadership Skills
- Communication Skills
- Public Speaking Skills
- Presentation Skills,......

iLEAP Club பயிற்சி மூலம் Englishல் பேசப்பழக, Englishல் எழுதப்பழக, English இலக்கணங்களை, பிழைகளை அறிந்து கொள்ள, என பல தேவைகளை இந்த Program நிறைவு செய்கின்றது.

IIS CITY CAMPUS
21ம் நூற்றாண்டின் மிகவும் தேவையான திறன்கள்
Building 21st Century Skills! Braving 21st Century Challenges!
www.ileaclub.org
info@ileapclub.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.